# அமிர்தானுபவம்




## ஸ்ரீ ஞானதேவர்
## அருளியது




**ஸ்ரீ ஞானதேவர் அருளிய அமிர்தானுபவம்**

**சங்கதேவ பாசஸ்தி (மடல்)**

**மற்றும் ஹரிபாட**

**வருடம் கி.பி.1275-1296**

# ² ėĂÅŐ ō ÈĐÉ

ÂÕÇÛÅĐĂ

² Ňĝ Ê ł

உ

# மங்கல வந்தனம்

# மங்கல வந்தனம்
# Auspicious Prayer

1. தனக்கு மேலாக ஒரு நிலையும். அழிவு அற்றதாய், மங்களமாய்,
ஆனந்தமாய், பிறப்பற்ற, இரண்டற்ற, மாறாத,
இன்னது என்று விவரிப்பதால் முழுமையாகாத,
உள்ளபொருளாம்
நிவிருத்தி நாதன்
என்னும் தெய்வமே என் அடைக்கலம்.

2. ஸ்ரீவித்யை என்று உலகில் வழங்கப்படும் ஞானத்திரள் உருவை
யாவர்க்கும் குருவருள் என்னும் மழையை பொழியும்
நிரந்தரப் பரங்கருணைப் பெருக்கை
சங்கரி வித்தையை
ஜெயகோஷத்தோடு நமஸ்கரிக்கிறேன்.

3. சிவமும் சக்தியும் ஒன்றே ஆனாலும்
இரண்டாய் மாயத்தோற்றம் ஏற்படுகிறதே!
எவ்வளவு ஞானம் கொண்டு பார்த்தாலும்,
யாருடைய பாதி யாரில் கலந்து முழுமையாகிறது
என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

4. இருவரும் தங்களின் இரண்டற்ற
ஆதி உள்ள நிலையையே காட்டுகிறார்கள்.
இவ்வுலகின் தாய் தந்தையாம் உங்களை
உள்ளவாறு தரிசிக்க வணங்குகிறேன்.

5. சம்பு! நீயே இவ்வுலகிற்கு காரணமில்லா காரணன்
நீயே உலகானாய்;
உன்னிடமே உலகை ஒடுக்கிக் கொண்டாய்
இம்மூன்றும் கடந்த உன்னை
பக்தியாய் நமஸ்கரிக்கிறேன்.

# I-ஆம் அதிகாரம்
# சிவசக்தி சமாவேசம்
## The Absolute Siva, and his active power. Sakthi abiding together

1. இவ்வுலகிற்கு காரணமாம்
அம்மை அப்பனுக்கு
இப்பிள்ளையின் பிரியமான வணக்கமிது.
தேவதேவி!

2. அவன் கட்டற்ற காதலால் தன் பிரானேஸ்வரியானான்.
இருவரும் உள்ள ஒரு பொருளால் ஆனவர்கள்.
உள்ள ஒரு பொருளையே
பகிர்ந்து கொண்டார்கள்.

3. ஒருவர் மேல் ஒருவருக்கு உள்ள காதலால்,
இருவரும் ஒருவரையொருவர் விழுங்கி,
இணைந்து காணாமல் போனார்கள்.
மீண்டும் கலவிக்காக இருவரானார்கள்.

உள்ள உணர்வு (பிரகாசம், சூட்சும தனித்தன்மை)
உள்ள
பொருளில் ஒடுங்கியது. இருக்கிறேன் என்ற
அனுபவம்
கூறமுடியவில்லை. மீண்டும் பிரகாசம்
வெளிப்படுகிறது.
இருக்கிறேன் என்ற அனுபவம் ஏற்படுகிறது.

4. இருவரும் எல்லா விதத்திலும் ஒரே மாதிரி என்று
சொல்ல முடியாது.
வேறு வேறு என்றும் சொல்ல முடியாது.
உண்மையிலேயே இவர்கள் யார் என்று
நம்மால் சொல்ல இயலாது.

5. அவர்களின் பெருவிருப்பு
ஒருவரையொருவரர் ஆனந்தித்துக் கொள்வதே;
ஆனாலும் விளையாட்டிற்காகக்கூட
அவர்களின் இணைவை பிரியவிடுவதில்லை.

6. இந்த அகிலாண்டமும்
அவர்களிடமிருந்து வெளிவந்து
அவர்களால் உணரப்பட்டாலும்
அவர்களால் மூன்றாவதாக எதையும் உணர்வதில்லை.

7. அவர்களின் இணைவு இடைமுறிவில்லாதது;
பிரிவில்லாதது.
அவர்களின் குழந்தையான இவ்வுலகுகூட
அவர்களின் இணைவை தொந்தரவு செய்வதில்லை.

8. "இருக்கிறது" என்ற மஞ்சத்திலேயே அவர்கள்
ஒன்றாகச் சயனித்திருக்கிறார்கள்.

"அறிதல்" என்ற ஆடையையே இருவரும்
அணிந்திருக்கிறார்கள்.
காலங்காலமாய் இவ்வாறே இவர்கள்
கலவியின் இணைவிலேயே ஆனந்தித்திருக்கிறார்கள்

9. பேதம்... இவர்களின் நெருக்கத்தை பார்த்து,
தன் இயலாமையை நினைந்து வெட்கி,
இணைவின் இனிமையில் கலந்தது.
மீண்டும் எப்போதும் வாராமல் அந்த ரசத்திலேயே
மறைந்துபோனது.

'நான் இன்னார்' என்னும் கற்பனையும், உலகிற்கு உண்மையிலேயே தனி இருப்பு இருக்கிறது என்ற கற்பனையும், இதனால் ஏற்படும் கர்மகர்தவ்யமும் (நான் செய்கிறேன் என்ற கற்பனையும்) ஒன்று கூட்டியே பேதம் எனப்படுகிறது. இந்த கற்பனையிலிருந்த தனித்தன்மை தன்னை யார் என்று உணர்ந்தபோது இந்த கற்பனை மீண்டும் வாராமல் போனது.

10. தேவன் இருப்பதாலேயே தேவி சம்பூரணமாய்
இருக்கிறாள்.
அவள் இல்லாமல் அவன் இல்லை.
ஒருவரிருப்பது மற்றவருக்காக;
இவ்விதம் ஒருவருக்கொருவராய் அவர்கள்
இருக்கிறார்கள்.

11. அவர்களின் இணைவுதான் எவ்வளவு இனிமை!
இந்த அகிலாண்ட கோடி பிரமாண்டமும் அவர்களின்
இணைவை
உள்ளடக்க முடியாமல் மிகச் சிறியதானது.
ஆனாலும் மிகச் சிறிய பொருளும் அவர்களின்
இணைவை
உள்ளடக்கியே உள்ளது.

12. சிறு புல்கூட அவர்களின் இணைவில்லாமல்
உருவாகவில்லை.
அவர்களின் இணைவு மிக ஆழமானது;
மிகப்பழமையானது.
ஒருவர் மற்றொருவரை
தங்கள் ஜீவ பிராணனாகவே கருதுகிறார்கள்.

13. அவர்கள் இருவர் மட்டுமே இவ்வுலககென்னும் வீட்டில்
வசிக்கிறார்கள்.
சுவாமி எதையும் கவனிப்பதில்லை.
எப்பொழுதும் சுகமாய் தூங்கிக் கொண்டேயிருக்கிறார்.
சுவாமினியோ எப்பொழுதும் விழிப்புடன்
தாம்பத்தியத்தின் பொறுப்புகளைக் கவனிக்கிறாள்.

14. சுவாமி விழித்தால்...
மொத்த வீடும்
மறைந்து விடுகிறது.
எதுவும் மிஞ்சுவதில்லை.

15. அவர்கள் இருவரானதின் நோக்கம்
பல்வகைபடுவற்கே.

பிறகு இருவரும் ஒருவரை ஒருவர் தேடுவதின்
நோக்கம் ஒன்றாவதற்கே

16. ஒவ்வொருவரின் பொருளும் மற்றவரே...
இருவரும் உயிர் மற்றவருக்கு!
இவர்கள் இணையும்போதே...
சுகமானுபவிக்கிறார்கள்.

17. ஆண் பெண் என்ற நாம பேதத்தால்
சிவனே அனைத்து வடிவங்களிலும் வாழ்கிறான்.
இவ்வுலகம்... இந்த இரு எதிரெதிரானதின்
இணைவினாலேயே இருக்கிறது.

18. கோலாட்டத்தில் இரண்டு கோல்கள் இணைந்தாலும்...
ஒரு சப்தமே உருவானது.
ஒரு மரத்தின் இருமலர்கள்... ஒரே நறுமணத்தை
பரப்பியது.
இரு விளக்குகள்... ஒரே ஒளியை வீசியது.

19. இரு உதடுகள்... ஓர் வார்த்தையை உதிர்த்தது.
இரு கண்கள் ... ஓர் காட்சியை ரசித்தது
இவ்விருவரே...
இந்த ஓர் உலகம்.

20. இருமையுற்றதாய் தோன்றினாலும்
காலாதீதமாய் இருக்கின்ற இந்த இணை,
இடைமுறிவில்லாமல் இணைவின் அமுதத்தைப்
பருகிக் கொண்டேயிருக்கிறார்கள்.

21. லீலையையே தன்மையாய் கொண்ட தேவி...
தேவனில்லாமல் வாழ்வதில்லை.
அவளில்லாமல்...
மாகர்த்தன் தோன்றுவதில்லை.

22. அவன்... தேவியாலேயே தோன்றுவதாலும்
அவளும்... அவளது தேவனாலேயேயிருப்பதாலும்
இருவரையும்...
வேறுபடுத்த முடியவே முடியாது.

23. சக்கரையும் அதன் தித்திப்பும்,
கற்பூரமும் அதன் மணமும்,
ஒனன்றிலிருந்து ஒன்றை
பிரிக்க முடியாது.

24. ஜுவாலைகள் இருந்தால்...
அக்கினியும் இருக்கிறது.
நாம் அவளைப் பார்க்க முடிந்தாலே...
நமக்கு சிவனும் விளங்குகிறான்.

25. சூரியன் ஒளிர்வதாய் தெரிவது அதன்
கிரணங்களாலே...
ஆனால் சூரியன் தன்னையேதான் கிரணங்களாய்
வெளியிடுகிறது.
உண்மையில் சூரியனும் அதன் பிரகாசமும்
ஒன்றே... வேறு வேறல்ல

26. பிரதிபலிப்பு... ஒரு பொருளில்லாமல் முடியாது.
பிரதிபலிப்பு பார்க்கப்பட்டாலே... ஒரு
பொருளிருக்கிறது
என்றுதான் பொருள்.
அவ்வாறே இரண்டற்ற உள்ள பொருளே...
இருமையாய் தோன்றுகிறது.

27. சர்வ சூன்யத்தையே (உள்ள பொருள்) தன் கருவாய்
கொண்ட சிவன்...
அவள் முன்னிலையிலேயே தன்னை
பேராண்மகனாய்
வெளிப்படுத்தினான்.
ஆனாலும் அவளின் இருப்பு...
சிவத்தையே கொண்டது.

28. தன் பிராணேஸ்வரியில்லாமல்... அவனால்
தன் பேராண்மையை ஒரு கனம்கூட
வைத்துக் கொள்ள முடியாது.
ஆனால் அவள்... சிவத்திரள் உரு.

29. அவளது ஐஸ்வர்யம் பொருந்திய செழுமையான ரூபத்தினாலேயே
சிவன்... இவ்வுலகமாய் தெரிகிறான்.
ஆனாலும் அவளது சௌந்தர்யச் செழுமையை
அவனிடமிருந்தே அவன் தோற்றுவித்தான்.

30. தன் மணாளனின் உருவற்ற தன்மைக்கும் தன் அழகிய வடிவிற்கும்
உள்ள பொருத்தமின்மையினால் உட்கிய அவள்...
பலவித நாம ரூபங்களாலான இவ்வுலகைத்
தன்மணாளன் மேல் சார்த்தி மகிழ்ந்தாள்.

31. ஒருவருக்கே இடமில்லாத இணைவில்...
ரசங்கொண்டு விளையாட இடமில்லாததால்...
தன்னைத் தளர்த்திய அந்த அதிர்ஷ்டக்காரி
இவ்வுலகை விளையாட்டிற்காக அடைந்தாள்.

சூட்கம தனித்தன்மை ஸ்தூலமாக மாறுவதையே
"தன்னை தளர்த்திய" என்கிறார்.

32. அவள்... தன் நாயகனின் பேராண்மையை...
தன்னை விரித்து தன் உடலில் வெளிப்படுத்தினாள்.
நாம ரூப இவ்வுலகானாள்.
அவன் அவளில் மறைந்து...
அவளை சிறப்பாக வெளிப்படச் செய்தான்.

33. காதலால் அவள் ஸ்பூரித்ததை ரசிக்க
அவன் பார்வையாளனானான்.
அவள் ஸ்பூரித்து ஒடுங்கினால்...
பார்வையாளனும் ஒடுங்கிவிடுவான்.

இருக்கிறேன் என்ற கலை (உள்ள உணர்வு)
ஒடுங்கினால் எந்த அனுபவமும் இல்லை; எந்த
அறிவும் இல்லை; எந்த ஆனந்தமும் இல்லை.

34. அவளாலேயே. அவள் மூலமாகவே,
அவன் நிமிர்ந்து, அடர்ந்து... படர்ந்து... உலகானான்.
அவளில்லாமல்...
அவன் நிர்வாணியாய் தனித்து விடப்பட்டான்

35. அவன் நிமிர்ந்து, அடர்ந்து. வெளிப்பட்டதனால்
தளர்ந்து, தனித்து, பார்த்துவிட முடியாதபடி அவளில்
மறைந்து சூட்சுமமானான்.
அவளால் மட்டுமே
அவன் உலகமாய் தோற்றமாகிறான்.

36. மெதுவாக அவன் அவளால் உலகைப் பார்த்தான்.
பிறகு அவள் பறிமாறும் உணவை ஆனந்திக்கிறான்;
பரிமாறிய அவளையும் ஆனந்திக்கிறான்.

37. அவன் உறங்கும்போது...
அவள் இவ்வுலகை பிரசவிக்கிறாள்
அவள் ஓய்வெடுத்தால்...
அவளது நாயகன் மறைந்து விடுகிறான்.

38. அவன் தன்னை மறைத்துக் கொள்ளும்போது
அவளில்லாமல் அவனைக் காணமுடிவதில்லை.
அவர்களிருவரும்...
ஒருவருக்கொருவர் ரசம் பூசுய கண்ணாடி

39. அவளைத் தழுவும்போது
அவன் தன்னுடைய ஆனந்தத்தையே சுகிக்கிறான்.
எல்லாவற்றையும் அனுபவிப்பவன் அவனேயானாலும்
அவளிலில்லாமல் அவனுக்கு எந்த சுகமும் இல்லை.

40. அவர்கள் ஒருவருக்கொருவர் கண்ணாடியில் பார்த்துக்
கொள்ளும்போது...
அவள் அவன் வடிவம்; ஆனாலும் அவளின்
சௌந்தர்யம்
அவனிடமிருந்தே வெளிவந்தது.
இருவரின் இணைவிலே சுகம் அவிர்பவிக்கிறது.
இருவரும் இவ்விருந்தை ஒன்றாய் சுகிக்கின்றனர்.

41. சிவனும் சக்தியும்...
இருவரும் ஒன்றே!
காற்றுச் சலனமும் போல்...
பொன்னும் சோபையும் போல்...

42. கஸ்தூரியிலிருந்து அதன் நறுமணத்தையோ,
கூட்டிலிருந்து நெருப்பையோ,
சக்தியிடமிருந்து சிவத்தையோ,
பிரிக்க முடியாது.

43. இரவும் பகலும் சூரியனை நெருங்கினால்...
இருவரும் இல்லாமல் போவார்கள்.
இதுவோல் இவர்களின் ஆதர இணைவு
தரிசிக்கப்பட்டால்...
இவர்களின் பேதம் மறைந்துவிடும்.

44. அந்த ஆதி இணைவிலிருந்தே
ஓங்காரம் எழுகிறது.
சிவன் சக்தி என்கிற பேதம்
அங்கே இல்லை.

45. இந்த இனிப்பான நாம ரூப விருந்தை விழுங்கி
தங்களின் உண்மையான அந்தரங்க இணைவை
புலப்படுத்திய
அந்த கருணாமூர்த்தியாம் சிவஹரனுக்கு
என் வணக்கங்களை ஞானதேவன் கூறுகிறேன்.

46. புலர்ந்ததும் இருள் ஒளியில் கரைந்ததுபோல்...
இருவரும் ஒருவரை ஒருவர் ஆரத்தழுவி
ஒன்றாய் கூட இல்லாமல்
இரண்டற்றதில் கரைந்துபோனார்கள்.

47. பிரளய கால வெள்ளத்தில் கங்கையும் சமுத்திரமும்
உருஇழந்தாற்போல்...
இவர்களின் அந்தரங்க இயல்பை உணர்ந்ததால்...
பராவிலிருந்து வைகாரி வரையிலான வாக்குகள்
மௌனத்தில் உருஇழந்தன.

48. பிறகென்ன, காற்றும் அதன் சலனம்
ஊழிக்காற்றில் கலந்தது.
சூரியனும் அதன் பிரகாசமும்
ஊழித்தீயில் கலந்தது.

49. சிவனையும் சக்தியையும் தரிசிக்க முயன்றபோது
தரிசியும் (தரிசிப்பவன்) தரிசனமும் மறைந்தது.
மீண்டும் மீண்டும் அந்த ஆதித் தம்பதியரை
வணங்குகின்றேன்.

50. அவர்கள் அறிவின் ஓடை...
அவர்களை அறியச் சென்றவர்கள்,
அதிலேயே மூழ்கி மாய்ந்தாலொழிய,
அவ்வோடையில் பருக முடியாது.

51. உண்மை இவ்வாறிருக்க
நான் பிரிந்து நின்று அவர்களை வாழ்த்தி
வணங்கத் தலைப்பட்டால் ...
அது பிரிந்ததுபோல் ஒரு பாசாங்கு

52. தங்கத்தாலான ஆபரணம்
தங்கத்தை வணங்கினால்...
என் வணக்கமும்
அவ்வாறே!

53. என் நாவு நாவென்றுரைத்தால்...
அதை உரைத்த நாவிற்கும்
அதன் உரை பொருளுக்கும்
ஏதேனும் பேதமுண்டோ?

54. கங்கையென்றும் சமுத்திரமென்றும்
நாமத்தால் பேதமிருந்தாலும்...
அவை இணையும்போது
அதன் நீர் ஒன்றல்லவே!

55. சூரியன் பிரகாசித்தான்.
அந்த பிரகாசத்தில் சூரியன் மிளிர்ந்தது.

இருந்தும் சூரியன்
ஒன்றேதான்

56. நிலவொளியில் நிலவு மிளிர்கிறது
விளக்கொளியில் விளக்கு தெரிகிறது
இதிலேதும் பிரிவுண்டோ!

57. முத்தின் வெண்சிதறல்
அதன் மேல் விழுகிறது.
அது அதனையே சோபிக்கிறது.

58. ஓங்காரம் மூன்றெழுத்துக்களால்
உருவானதால் மூன்றாகுமா?
நகாரம் (ந) மூன்று கோடுகளால்
உருவானதால் மூன்றாகுமா?

59. ஏன் நீர்... தன் பரப்பில்
சிறு அலைகளென்னும் தாமரை மலர்வதால்
தன் ஒருமைக்கு ஊறில்லாமல்,
அழகிய ஆனந்தம் பெறக்கூடாது?

60. இது இந்த முறையில்
பிரிக்க முடியாத
பூதேஸ்வரனுக்கும் பவானிக்கும் (சிவசக்திக்கு)
கூறும் வணக்கம்.

61. கண்ணாடியை எடுத்துவிட்டால்...
பிரதிபலித்த உருவம் மறைந்துவிடும்.
காற்றின் சலனம் நீங்கிவிட்டால்...
நீரின்மேலெழும் சிறு அலைகள் மறைந்துவிடும்.

62. தூக்கத்திலிருந்து விழித்த ஒருவன்
தன்னையே கண்டதுபோல்...
என்னுடைய உறக்கத்திலிருந்து விழித்து
என் அம்மையப்பனையே காண்கிறேன்.

63. உப்பு சமுத்திரத்தில் கரைந்தால்
அது சமுத்திரத்தில் ஒன்றாகிவிடும்.
என் தனித்தன்மை கரைந்தபோது
நான் சம்பு சாம்பவியோடு ஒன்றானேன்.

64. வாழை மரத்தை உரித்து கொண்டே போனால்
அது ஒன்றுமில்லாமல் புற வெளியில் ஒன்றானது
போல்...
என்னை அவர்களில் இழந்து
சிவசக்தி சமாவேசத்திற்கு அஞ்சலி செலுத்தினேன்.

# Part - I End

# II-ஆம் அதிகாரம்
# குருவை போற்றுதல்
## In Praise of the Preceptor

1. அனைத்து உபாய வனத்தின் வசந்தம்
பிரம்ம வித்தையின் மங்கல சூத்திரம்,
உருவற்றதானாலும்
உருவுகொண்ட பரங்கருணை...

2. அஞ்ஞானமாம் காட்டில்
ஜீவபாவமென்னும் வேதனையில்
சிக்குண்ட அறிவை காப்பற்ற
ஓடிவந்த காருண்யம்...

3. மாயையாம் மத யானையைக் கொன்று
அதன் மஸ்தகத்தை பிளந்தெடுத்த முத்துக்களால்
உணவு சமைத்த சத்குரு நிவிருத்தியே...
உன்னை வணங்குகிறேன்.

4. அவனது கடைச் சிறு கண்ணோக்கத்தால்
பந்தம் முக்தியானது.
தேடிச் சென்றவன்...
தேடப்பட்ட பொருளானான்.

5. கைவல்யம் என்னும் பொற்குவியலை
பேதம்பாராமல் பெரியார் சிறியார் அனைவருக்கும்
உதாரியாய் உவந்தளித்தான்.
காண்பான் தன்னை தரிசிப்பது இவனருளாலே.

6. அவன் குருத்துவத்தில்
சிவனின் மகத்துவத்தை கடந்தவன்.
ஜீவனுக்கு அதன் சொந்த சுகத்தை
காட்டும் கண்ணாடி.

7. அவனது அருள் விளையாடினால் மட்டுமே...
வளர்பிறையாம் சாதனை,
பூரண சந்திரனாய்,
ஞானமாய் பக்குவமடைகிறது

8. அவனை சந்தித்தவுடன்
சீடனின் உபாய வேதனை முடிவுறுகிறது.
அவன் பிரவிருத்தியாம் கங்கை
உருவிழக்கும் சமுத்திரம்.

9. அவன் இல்லாதபோது...
காண்பான், பல்வகை காணப்படும் பொருட்களை
அணிந்து கொள்கிறான்.
அவனை சந்தித்த உடன்
நானாபேதம் மறைகிறது.

10. அவனுடைய அருள் என்னும் சூரியன் உதித்தவுடன்
அஞ்ஞானமென்னும் அந்தகாரம்
ஆத்ம ஞானமென்னும்
பரம சீதள ஒளியாகிறது.

11. அவனருளென்னும் நீரில் குளித்ததனால்
ஜீவன் மிகத் தூய்மையுற்றான்.
இப்பொழுது சிவனே அசுத்தமாய் தோன்றினான்.
ஜீவன் சிவனை திரும்பிக்கூட பார்க்கவில்லை.

12. அவன் தன் சீடனைக் காக்க
தன்னுடைய மாட்சிமையை உடைத்தெறிந்தான்.
ஆனாலும் அவனது மாட்சிமை
அவனால் துறக்க முடியாது.

13. தனியாய் அவனுக்கு ஆனந்தமில்லை.
அதனால் அவன்
குருவாகவும் சீடனாகவும்
உருவு கொண்டான்.

14. அவன் சீடன் மேல் சிறிதே
கருணையாம் அமிழ்தத்தை உமிழ்ந்ததனால்
மோகமாம் அஞ்ஞான விஷம்
ஞான அமுதமாய் அபாரப் பரிணாமமுற்றது.

15. அவனை (நான் யார் என) அறிவு
தன்னுள்ளே தேடி கண்டுபிடித்தால்...
கண்டுபிடித்தவனை விழுங்கி விடுகிறான்
ஆனாலும் அவன் அசுத்தமாகவில்லை.

16. அவன் உதவியால் ஜீவன்...
பிரம்மம் என்னும் நிலையடைந்தான்.
அவன் உதாசீனனாய் இருந்தால்...
மாட்சிமை பொருந்திய பிரம்மம்
சிறுகீரைக்கூட சமமாகாது.

17. எவர் அவனது ஆஞ்ஞையை (விருப்பத்தை)
வேத வாக்காக கொண்டு முழுமனத்தோடு
முயற்சிக்கிறார்களோ...
அவர்கள் தங்கள் முயற்சியின் பலனை
பழுத்த பழமாக அடைகிறார்கள்.

18. அவனது கருணைக் கண்ணோக்கமாம்
வசந்த நீரூற்று...
ஞானமாம் தோட்டத்தில் பாயாமல்
அப்பழம் கையில் கிடைப்பதில்லை.

19. அவனது கண்ணோக்கத்தால்...
தோற்றமாம் இவ்வுலகு வலுவிழந்து தேய்ந்து
மறைந்துவிடுகிறது.
அவனது இந்த வெற்றி மகத்தானதானாலும்
அதை அவனதாய் ஒத்துக்கொள்வதில்லை.

20. அவன் லகுத்துவத்தை (மற்ற எந்த நிலைமையும்)
அவனதாய் கொள்ளாததால் மாட்சிமை பொருந்திய
குருத்துவம்
அவனை வந்து சேர்கிறது.

21. அவன் இருப்பில்லாத கடலில் தத்தளிக்கும் நம்மை
காப்பாற்றும் அடைக்கலமாய் பாறை.
அவனால் காப்பற்றப்பட்டவர்களை காண
முடிவதில்லை
அவர்கள் (கால தேசம்) நாடு கடத்தப்படுகிறார்கள்

22. அவன் அசலமாய் சும்மாவிருக்கும்
பரபூரண ஞானாகாசம்.
அவனை இந்த பூதாகாசத்தோடு
ஒப்பிட முடியாது.

23. அவன் ஒளியாலே சந்திரன்
குளிர்ந்த கிரணங்களோடு விளங்குகிறான்.
அவனது ஒளியின் சிறுகீற்றினால்...
சூரியன் தன் பிரகாசத்தைப் பெறுகிறான்.

24. அவன் ஜீவவேடம் பூண்டு
அலுத்துப்போன சிவனுக்கு
தன் வேடத்தைக் கலைக்க
நல் மூஹூர்த்தம் குறித்து கொடுக்கும் சோதிடன்.

25. அவனழகு... சந்திரன் தன் கிரணங்கள் என்னும்
ஒளியாடையை
உடுத்துவதால் மறைந்துவிடாமல்
மேலும் அழகுக்கு அழகூட்டிக்கொள்வதுபோல்.

26. இருப்பது அவனேயானாலும்...
அவன் எத்திசையிலும் காணப்படவில்லை.
அவனே ஒளியானாலும்... அவன் ஒளிர்வதில்லை.
அவனொருவனே எங்குமிருப்பவனானாலும்...
ஓரிடத்திலும் அவனில்லை.

27. எவ்வளவுதான் “அவன்... யார்...” என்னும்
வார்த்தைகளைப் போட்டுப் போட்டு விளக்கினாலும்
அம்மா! அவனை வார்த்தைகளால்
விளக்க முடியவில்லையே!

28. அவன் அநிர் வசநீயம்,
அவனுடைய ஒருமையில்
இருமை பொறுத்துக் கொள்ளப்படாததால்
வார்த்தைகள் மௌனமாகிறது.

29. அறிய முற்படும் கருவிகரணாதிகள் ஒடுங்கும்போது
அறிவு தானே சுடர்கிறது.
இந்த அனுபவமற்ற இடத்தையே
அவன் மிகவும் விரும்புவது.

30. ஏதேனும் ஒருவிதத்தில் அவனை சிறிது திரிசிப்போம் என்றால்
அவனது ராஜ்ஜியத்தில் அதை தீட்டு என்கிறார்கள்
அந்த சிறிய உண்ணுதலே அவனிடமிருந்து
நம்மை ஓட்டிவிடுகிறது.

31. நிலமை இவ்வாறிருக்க... எப்படி ஒருவன்
அவனை துதிப்பதாலோ! மரியாதை செலுத்துவதாலோ
அவனது ராஜ்ஜியத்தில் நுழைய முடியும்?
அவன் நாமமே கூட அவனிடம் ஒடுங்கிவிடுகிறதே

32. உள்ள பொருளுக்கு அதனிடமே பிரவிருத்தி இல்லை.
பிறகு நிவிருத்தி மாத்திரம் எவ்வாறு இருக்கும்?
அவன்நிவிருத்தி என்ற நாமத்தை திரையாக போட்டு
அதை கடந்து இருக்கிறான்.

33. பிரவிருத்திக்கே இடமில்லாதபோது
எப்படி அவன் நிவிருத்திக்க முடியும்?
அவனை நிவிருத்தி என்று அழைப்பது
எவ்வாறு பொருந்தும்?

34. சூரியன் இருளை ஒழிப்பவன் என்று
தவறாக குற்றம் சாட்டப்படுகிறான்.
சூரியன் இருட்டை எப்போது பார்த்தான்
அதை ஒழிப்பதற்கு?

35. அவன் நகைத்தால்...
நான் என்னும் போலி அறிவு

‘இருக்கிற’ அறிவாகிவிடுகிறது.
மூகன் கவிபாடுகிறான்.
இயலாதது இயலுகிறது.

36. உன் அற்புத சக்தியினால் மாயமாம்
தோற்றத்தை உருவாக்குகிறாய்...
பிறகு நீயே பொய் என்று விலக்கிவிடுகிறாய்...
உன்னுடைய மாயையற்ற தத்துவம்
எப்பொழுதும் பார்வைப் பொருளாவதில்லை!

37. சிவசிவா! சத்குரு! உன்னுடைய புதிரான தன்மையில்
நான் என்ன செய்துவிடமுடியும்!
அதைப் பற்றி ஓர் முடிவுக்கு வர
நீ அனுமதிப்பதே இல்லையே!

38. உன்னை விளக்க பலவிதமான நாம ரூபங்களை
உருவாக்கி
பிறகு அவையனைத்தையும் அர்த்தமற்றதாய்
அனாதரவாக்கிவிடுகிறாய்.
உன் அதிகார சுபேட்சையால்
இன்னும் நீ மகிழ்வுறவில்லைபோலும்!

39. உனக்கு யாருடனும் நட்பு பாராட்டத் தெரிவதில்லை
அவர்கள் உயிர் பறிக்காமல்
எஜமானத்துவம் பெற்றோம் என்ற நினைவு கூட
உன் அடிமையிடம் ஏற்படுவதில்லை.

40. அவனுக்கு பெயர் சூட்டிடுவோம் என்றால்
‘ஆத்மா’ என்ற பெயரே பொருத்தமாக இல்லை
என்ன சொல்வது...
அவன் எதற்குள்ளும் அடங்க மறுக்கிறானே!

41. சூரியனுக்கு இரவில்லை.
சுத்தமான நீருக்கு உப்பில்லை.
விழித்துவிட்ட ஒருவனுக்கு
உறக்கமென்பது இல்லை.

42. நெருப்பின் சந்நிதியில்
கற்பூரம் ஜீவிப்பதில்லை.
அவனது சந்நிதியில்
நாம ரூபம் ஜீவிப்பதில்லை.

43. அவன் பாதங்களில் வீழ்ந்து வணங்க முற்பட்டால்
வணங்கு பொருளாய் அவனங்கு இருப்பதில்லை.
எந்த பேத உணர்ச்சியின் கட்டாயத்திற்கும்
அவன் பலியாவதில்லை.

44. சூரியன் உதிப்பதும் இல்லை; மறைவதும் இல்லை;
எப்போதும் இருப்பது .
அவன் வணங்கும் பொருளுமில்லை;
வணக்கத்திற்குள்ளாவதுமில்லை;
அவன் என் எல்லா வணக்கங்களுக்கும் அதீதப்பட்டு
இருக்கிறான்.

45. ஒருவன் என்ன செய்தாலும்
தன் முன்னே தான் நிற்கும் தன்மை ஏற்படாது.
அதுபோல் வணங்கு பொருளாகும் தன்மையை
அவன் தொலைத்துவிட்டான்.

46. ஆகாசப் பிரதிபிம்பத்தின் சிறு பதிவும்
கண்ணாடியில் தெரிவதில்லை
இங்கு யாரேனும் வணங்கும் பொருளாய்
அவனாவதில்லை.

47. அவன் வணங்கு பொருளாய் ஆவதற்கு
பிரியப்படாமல் இருக்கட்டுமே!
அதை ஏன் நான் ஒரு குறையாக எடுத்துக் கொள்ள
வேண்டும்?
ஆனால் அவனை வணங்கச் சென்றவர்களின்
அடிச்சுவடுகளைக்கூட
அவன் விட்டு வைப்பதில்லையே!

48. கட்டிய வேட்டியின்
வெளியில் சொருகிய இறுக்கம் தளர்ந்தால்

உள்ளேயும் இறுக்கம் தளர்ந்து
வேட்டியே நழுவிவிடுகிறதே!

49. பிரதிபலித்த பொருள் நீங்கினால்
கண்ணாடிப் பிம்பமும் நீங்கிவிடுகிறது
அவனை வணங்கும் சாத்தியம் நீங்கும்போது
வணங்குபவனும் நீங்கிவிடுகிறான்.

50. (பார்க்க) ரூபமில்லாதபோது பார்வையிருந்து என்ன
பயன்?
அவன் திருவடி தீண்ட முனைந்து
அவன் அருள் தீண்டியதால்
கண்ணிருந்தும் குருடனானேன்.

51. எண்ணெயும் திரியும்
ஒன்றிணைந்து விளக்கில்
தாமரையாய் சுடர்கிறது.
கற்பூரம் தாங்குமா?

52. (கற்பூரமும் நெருப்பும்) இவையிரண்டும்
ஒன்று மற்றொன்றைத் தொட்டவுடன்
பரஸ்பரம் விழுங்கப்பட்டு
இரண்டும் இல்லாமல் போனது.

53. அவனை பார்த்த மாத்திரத்தில்
அவனை வணங்கு பொருளாக்கிய உணர்வும்
வணங்கச் சென்றவனும் மறைந்துவிட்டன.
விழிப்பு வந்த கணத்தில் கனவு மறைந்ததுபோல்...

54. இந்த வார்த்தை துவைதத்தை
தள்ளிவைத்து விட்டு
என் ஆருயிர் நண்பனும் என் குருவுமானவனை
வணங்குகிறேன்.

55. அவனது நட்புதான் என்ன புதுமை!
அவனிடம் ஏகத்துவத்தின் ரூபமே கூட இல்லை
ஆனாலும் குரு சிஷ்யன் என்ற
இருமைக்கு சிறப்புச் செய்தான்.

56. அவனுடனே அவன் எவ்வாறு நெருங்கி உறவாட முடியும்
அவனைத் தவிர வேறு யாரும் இல்லாதபோது?
இதையும் தாண்டி அவனது சிறப்பு
அவன் இருப்பவனுமில்லை; இல்லாதவனுமில்லை;
இவ்விரண்டிற்கும் விலக்ஷணமாய் இருக்கிறான்.

57. மொத்த இருப்பையும்
இல்லாமையையும்
தனக்குள் கொண்டு
ஆகாயம் போல் பரந்தவனானான்.

58. உன்னுடைய ஆதாரம்தான் எவ்வளவு பூரணம்!
சமுத்திரம் போல் நிறைந்து நிறைக்க முடியாமல் உள்ளாயே!
குருவின் வீட்டில் இப்படிப்பட்ட விரோத லக்ஷணங்கள்
சந்தோஷமாய் சேர்ந்து வசிக்கிறது.

59. இருளுக்கும் ஒளிக்கும்
பரஸ்பரம் சுமூக உறவில்லை
இருந்தும் சூரியனில்
சூரியனாய் தங்கியிருக்கின்றனர்.

60. ஒன்று என்றாலே...
பேதம் துள்ளிக்குதித்து எழுகிறது
ஏனென்றால் ஒன்று பலவற்றுள்தானே இருக்கிறது!
விரோதம் தன்னையே எப்படி விரோதிக்கும்?

61. அதுபோல் சிஷ்யன் என்றாலே...
குருநாதன் வந்துவிடுகிறான்.
இந்த இரு பதங்களின் அர்த்தம்...
குருவையே குறிக்கிறது.
ஏனென்றால் இந்த இரண்டு வடிவமும்...
அவனிடமிருந்தே வந்தது.

62. பொன்னும் பொன்னாபரணமும்
இரண்டும் ஒரே பொன்னிலேயே வசிக்கின்றன
நிலவும் நிலவொளியும்
நிலவிலேயே வசிப்பது போல்

63. கற்பூரமும் அதன் நறுமணமும்
கற்பூரம் மட்டுமே!
வெல்லமும் அதன் தித்திப்பும்
அந்த ஒரே வெல்லம்தானே!

64. இவ்வாறே குரு மட்டுமே
உல்லாசமாய் குருவாகவும்
சிஷ்யனாகவும் இருக்கிறார்
இவ்விரு தன்மைகளில் தோற்றமானாலும்கூட

65. கண்ணாடியில் தெரியும் முகம்,
தோற்றம்தான் உண்மையல்ல என்று
நெடுங்காலம் தன்னுடனே பழகிய முகத்திற்கு
கண்ணாடி பார்க்கும் போதும் தெரியும்.

66. ஆள் அரவமற்ற காட்டில் தனித்து உறங்கும் ஒருவன்
சந்தேகத்திற்கு இடமில்லாமல் தனியன்தான்.
ஆனால் விழிக்கும்போது அவனே
விழித்தவனும் விழிப்பித்தவனும் இரண்டுமாய்
ஆகிறான்

67. எவ்வாறு விழிப்பித்தவனே விழித்தவனோ
அவ்வாறே உபதேசிப்பவனும் உபதேசம் பெறுபவனும்
ஒன்றே. மட்டுமில்லாமல் அது அதுவே!
இவ்வாறே அவன் குரு சிஷ்ய உறவை
வைத்துள்ளான்

68. கண்கள் தன் லாவண்யத்தை
கண்ணாடியில்லாமல் பார்த்து ரசிக்க முடிந்தால்
என்னால் அவனது அருள் விளையாட்டை
விஸ்தாரமாய் கூற முடியும்

69. இந்த வகையில் இருமைக்கு இடமளிக்காமல்
ஒருமைக்கு ஊறில்லாமல்
குரு சிஷ்யனென்னும் நெருங்கிய உறவை
பேணி வளர்க்கிறான்.

70. நிவிருத்தி அவனது நாமம்,
நிவிருத்தியே அவனது ஈர்ப்பு.
நிவிருத்தி அவனது ராஜ்ஜியம்.
அதுவே நிவிருத்தி.

71. அவன் நாமம் பிருவிருத்தி விரோதமான நிவிருத்தி
அல்ல
அந்த நிவிருத்தியை நான் கூறவில்லை.
இந்த நிவிருத்தி
இவ்விரண்டிற்கும் விலக்ஷனமானது.

72. பகல் ராத்திரியின்
ராஜ்யத்தை பிடிப்பது போல்...
பிருவித்தியை போக்கி எழும்
நிவிருத்தி அல்ல அவன்.

73. ஓர் ஆபரணத்தில் தன்னை சுற்றி
பதிக்கப்பட்ட ஒளியூட்டத்தால்
மின்னும் மணி அல்ல அவன்.
அவன் நிராதார சக்கவர்த்தி.

74. ஆகாயத்தை தன் வயிற்றில் அடக்கி
நிலவு புஷ்டியானது
தன் நிலவொளியாலேயே மேலும் அழகூட்டிக்
கொண்டு
அதன் அங்கம் வசீகரமாய் விளங்கியது.

75. தான் தானாகவே ஆவதுபோல்
நிருத்தியே நிவிருத்திக்கு காரணம்.
மலரே தன் நறுமணத்தை நுகர
நாசியானது.

76. கண் பார்வை திரும்பி
முகத்தையே பார்க்க முடிந்தால்...
பரபரப்பாய் கண்ணாடியை
தேடுவது தேவைப்படாது.

77. இரவு கழிந்த பிறகே...
பொழுது புலர்ந்த பிறகே...
சூரியன்
சூரியத்தன்மை பெறுவானா?

78. அதுபோலவே இந்த சுவாமியை
அறிவால் புரிந்து கொள்ளவோ...
பிரமாணங்களால் நிரூபிக்கவோ முடியாது.

79. ஏதும் செய்யாமல் சுயமே முளைத்த
அந்த அசல நிவிருத்தித் தன்மையாம்
தயவாம் ஸ்ரீசரணத்தை
நான் வணங்குகிறேன்.

80. ஞானதேவன் கூறுகிறேன்...
குருவின் ஸ்ரீசரணத்தில் என் தலையை விற்று
நால்வகை வாக்குக்கும்
நான் பட்ட கடனைச் செலுத்தினேன்.

## Part-II End

# III-ஆம் அதிகாரம்
# வாக்கின் கடன் தீர்த்தல்
## Redeeming the debt of Spech

1. நால்வகை வாக்கின் உரத்த கோஷத்தாலே
ஆன்ம விழிப்பு ஏற்படுகிறது.
ஆனாலும் வாக்கின் கடன் முழுமையாகத் தீரவில்லை.
ஏனென்றால் இந்த விழிப்பும் ஒருவகை உறக்கமே!

2. ஜீவனின் முக்திக்கு பரா முதலாய நால்வகை வாக்குகள்
உபயமாக இருந்தது
ஆனால் அஞ்ஞானத்தோடு
அவையும் அழிவுறுகிறது

3. உடம்பு அழிந்தால் கையும் காலும் சேர்ந்து
அழிவதுபோல்;
மனமழிந்தால் இந்திரியங்கள் சூட்சும புலன்கள்
அழிவதுபோல்;
சூரியக் கிரணங்களின் ஜாலம்
சூரியஸ்தமணத்தோடு முடிவுறுவதுபோல்.

4. தூக்கத்தின் ராஜ்ஜியம் முடிவுறுமுன்
அதன் கடைப்பகுதியில் கனவுகள் முடிவுறுவது போல்;
இவை அஞ்ஞானத்தின் சம்பந்தத்தால்
தாமும் முடிவுறுகின்றன.

5. இரும்பு மரித்தாலும்
அதன் ரசரூபம் ஜீவிக்கிறது.
எரிந்த விறகுகள்
நெருப்பாய் மிஞ்சியிருக்கின்றன

6. லவனம் (உப்பு) அங்கம் குலைந்தாலும்
நீரில் உப்புச் சுவையாய் பிழைத்திருக்கிறது.
தூக்கம் மரணித்து
விழிப்பாய் ஜீவித்திருக்கிறது.

7. அதுபோல் நால்வகை வாக்குகளும்
அஞ்ஞானத்தோடு மரித்தாலும்
தத்துவ ஞானமாய்
மீண்டும் உயிர்தெழுகிறது.

8. தங்கள் மரணத்தால் இந்நான்கும்
தத்துவ ஞானமென்னும் விளக்கை
ஏற்றுகின்றன.
ஆனாலும் இந்த ஞானம்
தனித்தன்மைக்கு மேலும் வீண் சுமை.

9. தூக்கம் இருந்த போது கனவுகள் தொல்லை...
அதுபோனாலோ விழிப்பில் விழித்தவன் தொல்லை...
இரண்டு தொல்லைகளும்
தூக்கத்தாலேயே ஆதரிக்கப்படுகிறது.

10. அதுபோலவே அஞ்ஞானம் வாழும்போது
(நான் இன்னார் என்னும்) போலி அறிவை தருகிறது
அதே அஞ்ஞானம் மரித்ததுபோல்
மரித்து மீண்டும் தத்துவ ஞானமாய் (நான் பிரம்மம்
என்று) உயிர்தெழுகிறது.

11. அது உயிரோடு இருந்தாலும் மரித்தாலும்
ஒருவனை தன் கட்டினிலேயே
ஒன்று பந்தத்திலேயோ அல்லது முக்தியிலேயோ
வைத்திருக்கிறது.

12. முக்தியே கட்டு என்றால்
முக்தி என்ற வார்த்தைக்கு என்னதான் பொருள்?
அதன் தளுக்கும் மினுக்கும்
அஞ்ஞான வீட்டிலேயே செல்லுபடியாகிறது.

13. ராக்ஷசனின் மரணத்தால்
குழந்தைகள் வேண்டுமானால் குதூகலிக்கலாம்.
இல்லாத அவனின் மரணத்தை
பெரியோர் எப்படி நம்புவர்?

14. இல்லாத ஒரு பானை உடைந்து போனால்...
பெரிய நஷ்டமாகக் கருதுபவனை
ஞானி எனலாமா.?

15. ஆகவே பந்தம் என்பதே பொய் எனும்போது
முக்திக்கு ஏது வழி?
அஞ்ஞானம் தற்கொலை செய்து கொண்டு
வீண் பழிக்கு வழி அமைகிறது

16. சதாசிவன் தன்
சிவசூத்திரத்தில்
“ஞானம் பந்தம்” என்று
உரைத்திருக்கிறார்.

17. வைகுந்தத்தின் ஞானியோ
இதைப் பற்றி நிறையப் பேசியிருக்கிறார்
எவ்வாறு ஜீவன் சத்வத்தில்
ஞானத்தால் பந்திக்கப்படுகிறான் என்று...

18. சிவனோ அல்லது ஸ்ரீ வல்லபனோ...
இவர்கள் மீது உள்ள மரியாதையினால்
இதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை.
அவர்கள் கூறாவிட்டாலும் அது சுயமே தெரிகிறது.

19. சுத்த அறிவாம் உள்ள பொருளுக்கு
தன்னை உணர பிரிதொரு அறிவு தேவைப்பட்டால்...
அது சூரியன் பிரிதொன்றின் ஒளியை
சார்ந்து இருப்பது போல் அன்றோ!

20. உள்ள பொருள் பிறிதொன்றன் அறிவினால் கைதட்டல்
பெற்றால்...
அது பூரணப் பொருளல்ல.
விளக்கு பிறிதொரு விளக்கினால் ஏற்றப்பட்டால்...
அது அணைந்து போய்விட்டது என்றுதானே பொருள்.

21. தானகவே தான் இருந்தும்...
அதுதெரியாமல் ஒருவன் தன்னைத் தேடி
நாடுமாறியாய் அலைந்தாலும்
அவனை அவனால் கண்டுபிடிக்க முடியுமா?

22. கண்டுபிடிக்கலாம் என்று வைத்துக் கொள்வோம்.
நெடுநாள் சென்று அவன் தன்னை நினைவு படுத்திக் கொண்டான்.
அவனை கண்டுபிடித்த சந்தோஷம்
அவனுக்கு எப்படி இருக்கும் என்று நீங்களே கூறுங்கள்.

23. அதுபோலவே தன் ஸ்வபாவமே அறிவான உள்ள பொருள்
பிறிதொரு அறிவால் தன்னை உணர்ந்து
இப்போது 'சோஹம்' (நான் அவன்; நான் என்னை உணர்கிறேன்... உணர்ந்து கொண்டேயிருக்கிறேன்) என்று
தனக்குத்தானே அறிவிக்குமா?
இப்படிப்பட்ட ஞானம் பந்தமில்லையா?

24. இப்படிப்பட்ட ஞானம் முக்திக்கு வழிவகுக்கும்...
ஒருவேளை அது சுயமே அழிந்தால்.
தன்னை தலைசுமையாய் சுமப்பவனோடு மூழ்கிப்போகும்
இந்த ஞானம்
பூரண ஞானமாய் இருக்க முடியாது.

25. தனித்தன்மை பலியாகும்போது
நால்வகை உடம்புகளின் அழகுகளான பாரா மற்றும் இதர வாக்குகள்
அஞ்ஞானத்தோடு சேர்ந்து
அழிவுறுகிறது.

26. தன் அங்கலட்சணத்தால் தளர் வெய்திய அஞ்ஞானம்
மெதுவாக எழுந்து ஞானாக்கினிப் பிரவேசம் செய்தது.
மிஞ்சியது தனித்தன்மையின்
சாம்பல் மட்டுமே.

27. கற்பூரம் நீரில் கரைந்தால்
நீரில் இருந்து வேறாய் சிறிதும் தெரியாது

ஆனால் அது...
மணமாய் நீரில் இருக்கும்

28. பூசிய விபூதியின் துகள்கள்
உடம்பிலிருந்து விழுந்துவிட்டாலும்...
அதன் வெண்மை
உடம்பிலிருக்கும்.

29. வற்றிய நீரோடையில்
நீரை நீராய் பார்க்க முடியாவிட்டாலும்...
ஈரமாய்
அங்கே இருக்கும்.

30. உச்சிப்பொழுதில்
ஒருவனின் நிழல்...
தனியாகத் தெரியாவிட்டாலும்
அவன் காலடியில் இருக்கிறது.

31. அதுபோலவே தன்னைத் தவிர
பிறவற்றை எல்லாம் விழுங்கிவிட்டு
ஞானம் அதனுடைய ஸ்பாவத்தில்
மிஞ்சி இருந்தது...

32. வாக்கு மரித்தாலும்...
வாக்கின் கடன் தீரவில்லை.
அந்தக் கடனை குருவின் காலடியில்
என் தலையை வைத்துத் தீர்த்தேன்.

33. ஆகவே பரா பஸ்யந்தி மத்தியமா வைகரி
இவைகளின் கடன் தீர்க்கப்பட வேண்டும்.
அது தீராதவரை ஞானியும் அஞ்ஞானியும்
இங்கு இருப்பார்கள்.

## Part-III End

# IV-ஆம் அதிகாரம்
# ஞான அஞ்ஞான பேத விளக்கம்
## Explaining the Difference between Knowledge and Ignorance

1. இப்போது அஞ்ஞானத்தை அழித்துவிட்டு
ஞானம் தடையில்லாமல்
வீறுநடை போடுகிறது
தூக்கத்தை அழித்துவிட்ட விழிப்புபோல்.

2. முகம் கண்ணாடியில்
பிரதிபிம்பத்தை பார்த்து
தன்னிடம் ஏற்கனவே இருந்த
ஒருமையை அனுபவிக்கின்றது.

3. ஞானம் உள்ள பொருளுக்கும் உலகுக்கும் உள்ள
ஐக்கியத்தை
முடிந்த விதத்திலெல்லாம் வெளிக்கொணர்ந்தது.
ஆனால் அது ஒரு கத்தி
இன்னொரு கத்தியை வெட்டுவதுபோல்.

4. பட்டுப்புழு தன்னிடமிருந்தே நூலை வெளியிட்டு
தன்னை சுற்றி பாதுகாப்பு அமைத்து பிறகு அதுவே
அதன் அழிவுக்கு வழிவகுப்பதுபோல்...
அல்லது ஒரு திருடன்... திருடிய பொருட்களை சாக்கு
மூட்டையில் கட்டும்போது
அவசரத்தில் தன்னையும் உள்ளே வைத்து
கட்டியதுபோல்...

5. நெருப்பு கற்பூரத்தை எரிக்கும்போது
தானும் இல்லாமல் போவதுபோல்...
ஞானமும் அஞ்ஞானத்தை அழிக்கும்போது
தானும் தன்னை அழித்துக் கொள்கிறது.

6. அஞ்ஞானத்தில் ஆதரவு இல்லாமல்
விரிந்த ஞானம்
தன்னைத் தானே
அழித்துக் கொள்ளும் வரையில் விரிந்தது.

7. அணையப்போகும் விளக்கின் திரி
விளக்கின் பிரகாசத்தை அதிகரிக்கிறது.
அதன் முடிவு நெருங்குவதை
உணர்த்தியது.

8. நன்கு பருவத்திற்கு வந்த பெண்ணின் முலை
வளர்ச்சியின் உச்சமா அல்லது தளர்வின்
ஆரம்பமா?
மல்லிகை மொட்டு பூத்தால்
அது மலர்ச்சியின் உச்சமா அல்லது வாடலின்
ஆரம்பமா?

9. சிறுஅலைகளின் தோற்றம்
அதன் மறைவே!
மின்னலின் ஒளிவீச்சு
அதன் மறைவே!

10. அதுபோல் ஞானம்
அஞ்ஞான நீரை எல்லாம் பருகி
நன்கு பருத்து
தன்னைத் தானே மாய்த்துக் கொண்டது.

11. பிரளய காலத்தில்
நீரும் நிலமும்
தங்கள் எல்லைகளை
இழந்து மூழ்கியது போல்...

12. இப்பிரபஞ்சத்தை விட
சூரியன் பெரியதானால்...
இருளும் ஒளியும் கலந்து
அந்தப் பெருவொளியாவது போல்...

13. மசகமான விழிபபு...
தூக்கத்தைப் போக்கி
தன்னையும் அழித்து
நீண்ட முழு விழிப்பாய் மாறுவதுபோல்...

14. அதுபோலவே அஞ்ஞானத்தைப் போக்கிய ஞானம்
விரிவடைந்து
ஞான அஞ்ஞானங்களை விழுங்கி
உள்ள பொருளானது.

15. அப்போது அது பதினேழாம் கலை நிலவைப்போல்
இருக்கும்.
பூர்ணிமையாய் முழுபிரகாசமாகவும்
அமாவாசையாய் முழு இருளாகவும்
இல்லாமல் இருக்கும்.

16. அல்லது அதை
எந்த ஒளியாலும் ஒளிரிவிக்கப்படாத
எந்த இருளாலும் சூழப்படாத
சூரியனோடு ஒப்பிடலாம்.

17. ஆகவே... உள்ள பொருள்
வேறு ஒரு அறிவால் விளக்கப்படவில்லை.
அல்லது அஞ்ஞான இருளால்
சூழப்படவுமில்லை.

18. ஆனாலும்... அந்த உள்ள பொருள்
தன்னை அறியுமா?
கண் மணி
தன்னைப் பார்க்குமா?

19. ஆகாயம் தனக்குள்ளே நுழையுமா?
நெருப்பு தன்னையே எரிக்குமா?
யாராவது தன் தலைமேல்
ஏற முடியுமா?

20. பார்வை... தன்னையே பார்க்குமா?
சுவை... தன்னையே சுவைக்குமா?
ஒலி... தன்னை கேட்குமா?

21. சூரியன்... தன்மேல் ஒளி பாய்ச்சுமா?
பழமே... அதன் இனிமையை சுவைக்குமா?
நறுமணமே... தன்னை நுகருமா?

22. அதுபோலவே கேவல ஞான மாத்ரமான
(அறிவு மாத்திரமான) உள்ள பொருளுக்கும்
தன்னை அறியும் தன்மை இல்லை.
ஆகவே உள்ள பொருள்
தன்னை அறியாது.

23. சுத்த அறிவாம் உள்ள பொருள்
பிறிதொரு அறிவு கொண்டு தன்னை அறிந்தால்
அது அறியாமையே
அன்றி அறிவல்ல

24. உண்மைதான்
ஒளி இருளில்லைதான்.
ஆனாலும் அதற்கே
அது ஒளியாகுமா?

25. அதுபோலவே உள்ள பொருள்
இருக்கிறதும் அல்ல; இலாலாததும் அல்ல.
இவ்வாறு கூறுவதால் அவன் (உள்ள பொருள்)
சூன்யம் (இல்லை) என்பது போல் தோன்றும்.

26. சரி... உள்ள பொருளின் உள்ள நிலையில்
அதுவும் இல்லை;
ஒன்றுகூட இல்லை.
பிறகு எதுவும் இல்லை என்ற அறிவு யாருக்கு?

27. யாருடைய அதிகாரத்தில்
அங்கு எதுவும் இல்லை என்ற வாதம்

ஸ்தாபிக்கப்படுகிறது? உள்ள பொருளின் மேல்
சுமத்தப்படுகின்ற
நியாயமற்ற குற்றச்சாட்டு இது.

28. விளக்கை அணைத்தவுடன்
விளக்கை அணைத்தவன்
ஒளியோடு சேர்ந்தே மறைந்துவிட்டால்
ஒளியில்லை என்று அறிந்தது யார்?

29. தூங்கும்போது
ஒருவன் இல்லை என்றால்...
சுகமான தூக்கம் என்று
அறிந்தவன் யார்?

30. ஒரு பானையிருந்தால் ஒரு பானை பார்க்கப்படுகிறது.
அந்தப் பானை உடைந்தால்... அதன் உடைந்த தன்மை
பார்க்கப்படுகிறது.
பானையே இல்லை என்றால்...
யார் அதைப் பற்றி கூற முடியும்?

31. ஆகையால் யார் அங்கு எதுவும் இல்லை என்கிறானோ
அவன் அங்கு இல்லாமையாய் மாறியிருக்கிறான்.
உள்ள பொருளுக்கு இப்படி ஒரு தனிப்பட்ட
ஸ்வபாவமான இருப்பு,
இருக்கிறது; இல்லாமை; கடந்து இருக்கிறது.

32. உள்ள பொருள் தன்னையும் ஒரு பொருளைப்போல்
அறியாது
பிறர் அறியும் ஒரு பொருளாகவும் ஆகாது.
அதற்காக அதை
இல்லாதது என்று கருத முடியுமா?

33. ஒருவன் யாருமற்ற காட்டில் உறங்குகிறான்
அவனை யாரும் பார்க்கவும் இல்லை.
அவன் தூங்குவதால்
தன் இருப்பையும் உணரவில்லை.

34. அதற்காக அவன் இல்லலாமல்
உயிரற்றுப் போய் விடவில்லை.
அப்படித்தான் உள்ள பொருளும்
இருக்கிறது; இல்லை; என்ற கட்டுக்குள் அடங்காது.

35. பார்வை உன்முகமாகும் போது
பார்க்கும் செயல் தற்காலிகத்
தடைக்குள்ளாகிறது.
அதற்காக பார்வையில்லை என்று கூற முடியாது.
அது பார்க்கும் தன்மையில்தான் இருந்தது.

36. கறுத்த நிறத்தவன் ஒருவன்
அடர்ந்த இருளில் நின்றால்...
அவனாலும், பிறராலும், அவனைப் பார்க்க
முடியாது.
ஆனாலும் அவன் நன்றாக அங்கேயே இருக்கிறான்.

37. ஆனாலும் உள்ள பொருளின் இருப்பு...
இந்த மனிதனின்
இருப்பு இல்லாமையும் போல் அல்ல.
அவன் (உள்ள பொருள்) தன்னிடத்திலேயே
தன் ஸ்வபாவமான வகையில் இருக்கிறான் (உள்ள
பொருள் உள்ளபடி உள்ளத்தே உள்ளது)

38. ஆகாசத்தின் வடிவம் பரிசுத்தமாகும்போது
அது பார்ப்பவனுக்கு இல்லாமல் போகும்.
ஆனாலும் அது...
அதன் உள்ள நிலையில் உள்ளது.

39. நீர் மிகத் தூய்மையாக ஒரு கிணற்றில் இருந்தால்...
இல்லாதது போலவே இருக்கும்.
கிணற்றை எட்டிப்பார்ப்பவனுக்கு அது
தெரியாவிட்டாலும்...
அது இருக்கிறது.

40. அதுபோலவே உள்ள பொருள்
உள்ளபடி தன்னிடத்திலேயே (உள்ளத்தே) உள்ளது.
இருக்கிறது; இல்லை; என்ற கற்பிதம்
கடந்து இருக்கிறது.

41. மறைந்து போன தூக்கத்தின் ஞாபகமும்...
விழிப்பின் ஞாபகமும் இல்லாது...
விழிப்பு இருப்பதுபோல் அது.

42. ஒரு தொட்டி தரையின் மீது இருந்தால்...
தொட்டியுடன் கூடிய தரை என்று அறியப்படுகிறது
அது நீக்கப்பட்டால்...
தொட்டியில்லாத தரை என்று அறியப்படுகிறது.

43. இந்த இரு நிகழ்வுகளும் இல்லை என்றால்...
தரை உள்ளபடி இருக்கும்.
அதுபோலவே
உள்ள பொருள் உள்ளபடி உள்ளது.

## Part-IV End

# V-ஆம் அதிகாரம்

# சத் சித் ஆனந்தம் பதத்திரய விளக்கம்

## Explanation of three words Existence Knowledge and Bliss

1. விஷம் எவ்வாறு விஷத்தில் இல்லையோ...
அப்படி உள்ள பொருளில்
சத் சித் ஆனந்தம் என்ற இந்த மூன்று அம்சங்களும்
இல்லை என்று புரிந்து கொள்ள வேண்டும்.

2. சோபை, கெட்டித்தன்மை, மஞ்சள் தன்மை
இம்மூன்றும் சேர்ந்து பொன்.
திரவத்தன்மை, இனிமை, வெண்மை
இம்மூன்றும் சேர்ந்து பால்.

3. வெண்மை, நறுமணம், மென்மை
இம்மூன்றும்
மூன்று தனித்தனி தன்மையல்ல
அவை ஒரு கற்பூரத்தில் இருக்கிறது.

4. கற்பூரம் வெண்மை.
அது வெண்மை மட்டுமல்ல; அது மென்மையும் கூட
இது இவை இரண்டும் கூட இல்லை
நறுமணம் மட்டுமே!

5. எவ்வாறு இம்மூன்றும் தன்மைகளும் ஒரு பொருளையே
குறிக்கிறதோ
அதாவது கற்பூரத்தை; அதன் தன்மைகளை அல்ல.
அதுபோல இம்மூன்று அம்சங்களும்
உள்ள பொருளில் அடங்கியுள்ளது.

6. உண்மைதான்... இம்மூன்று பதங்களும்
(சத் சித் ஆனந்தம்) வேறு வேறுதான்
ஆனாலும் மூன்றும் ஒன்றாய் இணைந்து
அந்த அதீத சுகத்தில் உள்ளது.

7. சத்தே ஆனந்தமும் சித்துமா?
அல்லது சித்தே சத்தும் ஆனந்தமுமா?
அவை பிரிக்க முடியாதவை.
தேனிலிருந்து இனிமையை பிரிக்க முடியாதது போல்.

8. (வளர்பிறை) சுக்ல பட்சத்து சந்திரன்
தன் பதினாறு கலைகளோடு வளர்ந்து கொண்டே
வருகிறான்.
ஆனாலும் சந்திரன் முழுமையாய்
தன்னிடத்தில் தான் தானாய் இருக்கிறான்.

9. மழைநீர் சொட்டு சொட்டாய் வீழ்ந்தால்...
சொட்டுக்களை எண்ணி விடலாம்.
அதுவே ஒரு பள்ளத்தில் தேங்கினால்...
அது வெறும் நீர் மட்டுமே

10. இந்த வகையிலேயே வேதங்கள்
உள்ள பொருளை சத் (இருப்பு) என்று கூறுவது
அது இல்லாத பொருள் இல்லை என்பதை மறுக்கவே
அதை சித் (அறிவு) என்று கூறுவது
அது ஜடமல்ல என்பதை மறுக்கவே.

11. பிரபுவின் மூச்சான வேதங்கள்
அதை ஆனந்தம் என்று போற்றுவது
அதில் துக்கம் இல்லை
என்பதை வலியுறுத்தவே.

12. இவ்வகையில் சத்தும் பிறரும்
தங்களின் எதிராளிகளான அசத்து மற்றும் பிறரை
புறந்தள்ளியதில்
தங்களின் இருக்கையை இழந்தார்கள்.

13. ஆகவே உள்ள பொருளைக் குறிக்கும்
பதங்களான சத் சித் ஆனந்தம்
உண்மையில் அதன் தன்மையைக் குறீக்கவில்லை.
வெறும் அது இவற்றின் இரட்டை கிடையாது
என்பதையே குறிக்கிறது.

14. சூரியனால்
ஒளிர்விக்கப்படும் பொருட்கள்
சூரியனை
ஒளிர்விக்குமா?

15. பிறகு எவ்வாறு வாக்கு
எதன் ஒளியால் அது ஒளிர்கிறதோ
அதனையே
ஒளிர்விக்கும்.

16. எது நிறுவ முடியாதோ...
அது கலந்தாய்வுக்கு தலைப்பாகாது.
உள்ள பொருள் சுயமே அறிவானபடியால்
அதற்கு நிரூபணம் தேவையில்லை.

17. பிரமாணத்தின் இருப்பு
அது விளக்கும் பொருளில் இருந்து தனித்து
நின்றால்
மட்டுமே ஏற்றுக் கொள்ள முடியும்.
ஸ்வத சித்தமான உள்ள பொருளுக்கு
எப்படி பிரமாணம் இருக்க முடியும்?

18. உள்ள பொருளை அறிய விரும்பும் ஒருவனில் இருந்து
அவ்வுள்ள பொருள் வேறாக இல்லாததாலும்
(அறியவிரும்பும்) அவனும் உள்ள பொருளின்
தத்துவமாகவே இருப்பதாலும்...
எவ்வாறு உள்ள பொருளை அறியும் தன்மையும்
அறிவானும் ஏற்பட முடியும்?

19. ஆகவே சத் சித் ஆனந்தம் என்னும் பதங்கள்
உள்ள பொருளை சரியாக குறிக்கும் பதங்கள் அல்ல.
இது விசாரத்தில் ஏற்பட்ட முடிவு.

20. பிரசித்தி பெற்ற சத் சித் ஆனந்தம் என்னும் மூன்று பதங்கள்
உள்ள பொருளை சந்தித்து
சுய சம்வாதம் ஆகும் வரை
அதன் புகழ் நீடிக்கும்

21. மேகங்கள் மேகங்களாகவே இருக்கும்...
மழையை பொழிந்த பிறகு மறைந்துவிடும்.
ஆறுகள் ஆறுகளாகவே இருக்கும்...
சமுத்திரத்தில் கலக்கும் வரை.
பாதைகள் பாதைகளாகவே இருக்கும்...
இலக்கை அடையும் வரை.

22. மலர் மங்கியது
கனியை தந்துவிட்டு.
கனி நசிந்து...
ரசம் தந்துவிட்டு.
ரசம் மறைந்து...
திருப்தியை தந்துவிட்டு

23. கரம் இழுக்கப்பட்டது...
அக்னிக்கு ஆஹுதி வழங்கிவிட்டு
கீதம் விடை பெற்றது...
சுகம் தந்துவிட்டு,

24. கண்ணாடி கை நழுவியது...
முகத்திற்கு பிரதிபிம்பத்தை காட்டிவிட்டு.
எழுப்பியவன் நீங்கினான்...
தூங்கியவனை எழுப்பிவிட்டு.

25. அதுபோல இம்மூன்று பதங்களான சத் சித் ஆனந்தமும்
காண்பானின் தன்மையையும், பார்வையின்
தன்மையையும்
வெளிப்படுத்திவிட்டு
ஒருவனை மௌன மாளிகைக்கு இட்டுச்சென்றது.

26. எது எது... அது அது என்று கூறப்பட்டதோ
அவையெல்லாம் உள்ள பொருளல்ல.
உள்ள பொருள் உண்மையில் எவ்வாறு உள்ளது என்று
கூறமுடியாது.
ஒருவன் தானே தன் நிழலை அளப்பதால் தன்
உயரத்தை
அளந்துவிட முடியாதோ அதுபோல் இது.

27. தன் நிழலை அளக்க முயற்சிக்கும்போது
அளக்க முடியாது என்று தன் தவறை உணர்ந்து
எவ்வாறு நாணமுற்று
அளக்கும் செயலைக் கைவிடுவானோ அவ்வாறே.

28. அவ்வாறே உள்ள பொருளின் இருப்பு...
இருக்கிறதும் இல்லை;
இல்லாததும் இல்லை;
அது எப்படி 'இருக்கிறேன்' என்கிற உணர்வு போல்
இருக்கும்?

29. கேவல சின் (அறிவு) மாத்திரமாம் உள்ள பொருளின்
நிலை
ஜடத்தன்மையை முற்றும் போக்குவதால் ஏற்படுகிறது
அந்த சின் மாத்ர நிலையில்
எப்படி அறிவு இருக்கும்?

30. முழுமையான விழிப்பில்
தூக்கமும் இல்லை; விழிப்பும் இல்லை;
அதுபோலவே சுத்த அறிவு.
அதை அறிவு என்று அழைப்பது ஏன்?

31. சுகாதீதமான அங்கு
துக்கத்தின் சுவடே இல்லை.
அதற்காக அதை
ஆனந்த மெனலாமா?

32. சத் அசத்தோடு வெளியேறியது.
சித் அசித்தோடு வெளியேறியது.
சுகம் அசுகத்தோடு மறைந்தது.
பிறகு அங்கு எதுவும் மிஞ்சவில்லை.

33. இரட்டைகளின் தீப்பந்தங்களை ஊதி தள்ளிவிட்டு
துவைதம் என்னும் இரட்டை கரை ஆடையை
அவிழ்த்துவிட்டு,
ஏகன்... தன் உள்ள நிலையில்
தனியனாய் மிஞ்சினான்.

34. ஏகம் என்று எண்ணினாலே
கணக்கு பிள்ளையும் தோன்றிவிடுகிறான்.
ஆகவே கணக்குக்கு வராத
ஏகம் இது.

35. அதுபோலவே சுகம் என்றாலே
அதை அனுபவிப்பவனும் வந்து விடுகிறான்.
ஆனால் உள்ள பொருளோ சுகமாத்ரம்.
ஆகவே அந்த சுகத்தை யார் அனுபவிக்க முடியும்?

36. பஞ்சம நாதப் பறையொலியில்
அம்பாள் தன் பக்தனின் உடம்பில் ஆவேசிக்கிறாள்.
ஆனால் பறை மட்டுமே இருந்து... வேறு யாரும்
இல்லாதபோது...
யார் யாரிடம் ஆவேசிப்பது.

37. அதுபோல உள்ள பொருள்... தானே சுகமயம்;
ஆகையால் அதுவே அதன் சுகத்தை அனுபவிக்காது;
அதற்காக உள்ள பொருளுக்கு
சுகம் தெரியாது என்று கூறக்கூடாது.

38. கண்ணாடியில் பார்க்காத போது
முகத்திற்கு முன்னாலும் முகமில்லை; பின்னாலும் முகமில்லை;
அதுபோலவே உள்ள பொருளுக்கு சுகமும் இல்லை; துக்கமும் இல்லை;
ஆனால் அதுவே சுக சொரூபம்.

39. கனவின் பிதற்றல்போல் எல்லா சித்தாந்தங்களின் விரிவான விளக்கங்களை உதறித்தள்ளிவிட்டு
அவன் ரகசியமாக தன்னிலேயே...
அவனறிவின் புரிதலில் இருந்தும் மறைந்து இருக்கிறான்.

40. கரும்பு நடுவதற்கு முன்பே...
அதனுள் கரும்புச் சாறு இருந்தது.
அதன் சுவை யாருக்கும் தெரியாது;
அதனைத் தவிர...

41. வீணையில் தந்திகள் கட்டப்படும் முன்பே...
நாதம் அதனுள் இருந்தது.
ஆனால் அந்த நாதம் கேட்கப்படாதது;
அதற்குத் தவிர...

42. பல்வேறு மலர்களில் தேன் உருவாகுகிறது.
ஏதாவது ஒரு மலர்
தன் தேனையே சுவைக்க விரும்பினால்...
அது வண்டாக வேண்டும்!

43. இந்த உணவின் சுவையை
யாராலும் பரிசீலித்து
‘எவ்வளவு சுவையாக இருக்கிறது?’ என்று கூற முடியாது;
அந்த உணவு சமைக்கப்படவேயில்லை!

44. இவ்வகையில் அந்த பரமானந்தம் (உள்ள பொருள்)
தன் சொந்த சுகத்தை சுகிக்கக் கூச்சப்பட்டு
முன்வரவே மறுக்கிறது
பிறகெப்படி யாரேனும் அதை சுவைக்க முடியும்?

45. உச்சிப் பொழுதில்
தலைக்கு மேல் நிலவு இருக்கும் போது
அதன் நிலவொளி
நிலவைத் தவிர யாருக்குத் தெரியும்?

46. ஒன்று உருபெறுவற்கு முன்பே
அதன் அழகு...
அங்கமில்லாதபோது இளமை...
நற்செயலைத் தொடங்காமலே புண்ணியம்...

47. மனம் தன் விதை உருவிலிருந்து
உருவாகும் முன்பே
காம இச்சை ஏற்படுவது...

48. இசைக்கருவிகளின் உலகம்
சிருஷ்டிக்கப்படாத வரை...
இசை மட்டுமே இசையைப் பற்றி
கலந்தாய்வு செய்ய முடியும்.

49. நெருப்பு விறகுகளை எல்லாம்
தழுவிக் கொண்டு
பிறகு தன் அங்கத்தை மட்டுமே
தழுவிக் கொண்டிருப்பதைபோல...

50. கண்ணாடியில்லாமல் தங்கள் வதனத்தின்
அழகை ரசிக்க முடிந்தவர்களால் மட்டுமே
வர்மமான உள்ள பொருளின்
வர்மத்தை அறிய முடியும்.

51. இந்த விளக்கம்
புரிந்து கொள்ள எளிமையாய் இருக்கும்.
விதைக்காமல் கதிர் வருகிறது என்றால்...
குதிரில் தானியம் ஏற்கனவே நிரம்பியிருக்கிறது.

உள்ளபொருளை அறிய முடியாது என்றால் அதை அறியாமல் யாரும் இல்லை. எதுவும் இல்லை; இங்கு இருக்கும் எல்லா உள்ள பொருளே. சும்மாயிருக்க வேண்டியதுதானே!

52. ஆகவே உள்ள பொருளில்
எந்த சாமான்ய ஞானமும் இல்லை;
விசேஷ ஞானமும் இல்லை;
அது அனன்யமாய் தன்னையே சுகித்துக்
கொண்டிருக்கிறது.

53. இனி கூற மிஞ்சுவது
நீரை கடைசி சொட்டு வரை
பருகுவதுபோல்தான் என்று
கூறிவிடுவதே சான்றாமை

54. பிரமாணங்கள் எல்லாம் (உள்ள பொருள் விஷயத்தில்)
நம்பகத்தன்மையற்றது என்று தர்க்கங்களால்
நிரூபித்தாகிவிட்டது.
திருஷ்டாந்தங்கள் இனி சாட்சியம் கூற வருவதில்லை
என உறுதிமொழி எடுத்தன.

55. பல்வேறு வகையான விளக்கங்கள் தங்கள்
அங்கங்களை இழந்ததால்
சிறப்பு வாயில் வழியாக வெளியேறின.
அடையாளம் காட்ட வந்து வரிசையாய் எழுந்த
வரையறைகளின் சபை கலைந்தது.

56. எல்லா உபாயங்களும் தங்கள் இயலாமையை
உணர்ந்து
அவசரமாய் புறமுதுகிட்டன.
அனுபவமே கூட
தன் பொருளானப் பிரத்யட்சத்தை கைவிட்டது.

57. ஏற்கனவே நிரூபணங்களின் கதியை பார்த்த
சிந்தனைப்புலன்...
விசுவாசமாய், தன் அரசன் ஆபத்தில் இருக்கும்போது
தன் இன்னுயிரை நீத்த வீரம் செறிந்த வீரனைப்போல்
தன்னை மாய்த்துக் கொண்டது.

58. புரிதல் புலன்... தன்னை புரிதல் என்று அழைப்பதற்கு
வெட்கப்பட்டு
தற்கொலை செய்து கொண்டது.
அனுபவம் ஊனமுற்று
தனித்து ஆதரவின்றி விடப்பட்டது.

59. சுண்ணாம்பு பாளத்தின்
அடுக்குகளை பெயர்த்தால்...
சுண்ணாம்பு பாளம் மறைந்துவிடும்.

60. கடும் வெயிலால்... வாழை மரம்
தண்டு கருகி
தன்புற அடுக்குகளையெல்லாம் உரித்துப்போட்டால்
பிறகு எப்படி நிமிர்ந்து நிற்கும்?

61. அனுபவம்...
அனுபவிப்பவன்; அனுபவிக்கப்படும் பொருள்;
இவை இரண்டைச் சார்ந்தே இருக்கிறது.
இவை இரண்டும் மறைந்துவிட்டால்...
அனுபூதிகன் தனித்து அனுபூதி எப்படி பெறுவான்?

62. அனுபவத்திற்கே
இடமில்லாதபோது...
வார்த்தைகளின்
கூட்டத்தால் ஏது பயன்?

63. பராவே மௌனமானபோது...
எந்த ஸ்புரணமும் எழாது.
பிறகு எப்படி
அங்கு உதடுகள் அசையும்?

64. நன்றாக விழித்த ஒருவனை...
எப்படி எழுப்புவது என்ற பேச்சு எதற்கு?
நன்றாய் பசியாறியவன்...
உணவைச் சமைப்பானா?

65. திவஸ்பதி உதித்தவுடன்
விளக்குகள் ஓய்வெடுத்தன.
வயல் விளைச்சலால் நிறைந்திருக்கும்போது
கலப்பையை ஏர் ஓட்ட எவனாவது எடுப்பானா?

66. ஆகையால் பந்தமோட்சத்தின் முன்னுரை முடிந்தது.
நிரூபணங்கள் முடிவுக்கு வந்தன.
பிரசங்கத்தை சிலாகிப்பது பாக்கியிருக்கிறது.

# Part-V End

# VI-ஆம் அதிகாரம்

# வார்த்தையை மறுத்தல்

## Disproving the Word

1. ஏதோ ஒன்றை நாமோ பிறரோ மறந்துவிட்டால்...
   நாம் அதை,
   அதைக் குறிக்கும் வார்த்தைகளால்
   நினைவுறுத்துகிறோம்.

2. வார்த்தைக்கு
   இச்சிறப்பு இல்லாவிட்டால்
   அதற்கு இந்த மதிப்பு
   இருக்காது.

3. ஞாபகத்தின் கொடையாளியென போற்றப்படும்
   பயன்பாடுடைய வார்த்தையே நீ வாழ்க!
   உள்ள பொருளை காட்ட
   காட்டப்படும் கண்ணாடியும் அல்லவா அது!

4. கண்ணுக்கு புலனாவது
   கண்ணாடியில் தெரிவதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை.
   ஆனால் வார்த்தை என்னும் கண்ணாடியில்
   புலப்படாச் செம்பொருளும் புலப்படக்கூடும்.

5. வார்த்தை சூரியனைப்போல்...
   அது தொன்மையான அவ்வியக்த வம்சா வழியினரை
   ஒளிர்விக்கிறது
   வார்த்தையின் ஓர் குணத்தாலேயே
   ஆகாசம் ‘அம்பரம்’ என்று அழைக்கப்படுகிறது.

6. வார்த்தை... அதுவே ஓர் இருப்பில்லா மலரானாலும்
   உலக வடிவத்தில் கனியைத் தருகிறது.
   அளவைக்கு உட்படாதது என்று

இங்கு வார்த்தைகளால் அளக்கப்பட முடியாமல் யாது உளது?

7. வார்த்தை... விதி (செய்ய வேண்டியது)
நிஷேதத் (செய்யக்கூடாதது)திற்கு
வழிகாட்டும் தீப்பந்தம்
பந்த முக்திகளுக்குள் ஏற்படும் பூசல்களுக்கு
இவனே நாட்டாமை.

8. அஞ்ஞானத்தின் பக்கம் இவன் சாய்ந்தால்
இல்லாதது இருப்பதாய் தோன்றும்.
உள்ள பொருள்
மூன்று ஓட்டை காலனா பெறாது.

9. அழகாய் இருக்கும் இக்குழந்தை
தன்னை தூய்மையாக்கி
அங்கமெல்லாம் பஞ்சாக்ஷரி பூசி
சுத்த சிவத்தில் நுழைகிறது.

10. வார்த்தையே...
உடற்சிறையில் அடைபட்டு கிடக்கும் ஜீவனை
விடுதலை செய்கிறது.
உள்ள பொருள்...
தன்னை வார்த்தைகளாலேயே சந்திக்கிறது.

11. சூரியன் பகலை பிரசவித்து
இரவுக்கு எதிரியாவதால்...
வார்த்தையோடு
ஒப்பிட முடியாது.

12. ஏனென்றால் வார்த்தை...
நிவிருத்தி மார்க்கத்தையும், பிரவிருத்தி மார்க்கத்தையும்
இவ்விரண்டும் விரோதிகளானாலும்...
ஒருசேர ஆதரிக்கிறது..

13. ஆத்ம வித்தைக்கு உதவ
வார்த்தை தன்னையே தியாகம் செய்கிறது.

இன்னும் எவ்வளவு சிறப்பை
நான் கூறிக் கொண்டே போவது?

14. அவார்த்தை பிரசித்தம்தான்...
உள்ள பொருளை ஞாபகப்படுத்துபவன் என்று...
ஆனாலும் உள்ள பொருளில்
அவனுக்கு சம்பந்தம் இல்லை

15. உள்ள பொருளுக்கோ...
வார்த்தையினால் சுத்தமாய் உபயோகமில்லை.
சுயம் பிரகாசமான உள்ள பொருள்
எப்படி யாருடைய உதவியையோ நாடும்?.

16. நினைவூட்டவோ... மறக்கவோ...
ஒரு பொருள் போல் காட்சிப்படவோ...
இரண்டாவது ஒன்று வேண்டும்.
ஆனால் உள்ள பொருளோ இரண்டற்ற ஏகவஸ்து.

17. எப்படி ஒருவன் தன்னையே
நினைக்கவோ மறக்கவோ முடியும்?
நாவிற்கு ருசியோ ருசியின்மையோ
தன் நாவின் மீதே எப்படி ஏற்பட முடியும்?

18. விழித்திருப்பவனுக்கு உறக்கமில்லை
சரி அவனுக்கு விழிப்பாவது உண்டா.
இதுபோலவே நினைவூட்டலோ மறத்தலோ
அந்த ஏக வஸ்துவிடம் இல்லை.

19. சூரியனுக்கு இரவை தெரியாது
சரி... அதற்காக பகலையாவது அவனுக்கு தெரியுமா?
இதுபோலவே அந்த ஏகவஸ்துவிற்கு
நினைக்கும் தன்மையோ மறக்கும் தன்மையோஇல்லை

20. சுருக்கமாக எங்கே நினைத்தல் மறத்தலுக்கு
இடமில்லையோ...
அங்கே நினைவறுத்துபவருக்கு என்ன வேலை?
ஆக இந்த இடத்தில்
வார்த்தைக்கு வேலை இல்லை.

21. மற்றுமொரு நற்காரியம் வார்த்தையால் உண்டு
ஆனால் அதை நினைத்துப் பார்ப்பதற்கேகூட
ஒருவன் தைரியத்தை
வரவழைத்துக் கொள்ள வேண்டும்.

22. வார்த்தை அஞ்ஞானத்தை அழித்த பிறகுதான்
உள்ள பொருள் தன்னை உணர்கிறது
இவ்வாறு கூறும் ஒருவன்
பைத்தியமாய்தான் இருப்பான்.

23. சூரியன் முதலில் இரவை ஒழிப்பானாம்...
பிறகு உதிப்பானாம்.
அறிவின் நகரத்தில் இப்படிப்பட்ட கூறுகெட்ட
வார்த்தைகள்
பொறுத்துக் கொள்ளப்படுவதில்லை.

24. விழிப்புநிலை வந்ததால்
விசனப்படும் தூக்கம் எங்கே இருக்கிறது?
நன்றாய் விழித்த ஒருவனை
விழிப்புக்கு கொண்டு வரும் செயல்முறை
ஏதேனும் உண்டா?

25. அதுபோலவே இங்கு
எந்த அஞ்ஞானமும் அழிக்கப்பட வேண்டியதில்லை.
உள்ள பொருளில் உள்ள தன்மைக்குள்
நுழையத் துடிக்கும் உள்ள பொருளும் இங்கில்லை.

26. அஞ்ஞானத்தின் சொரூபம்
மலடியில் மகன் போன்றது.
பிறகு எந்த ஞானவாளால்
அதை துண்டு துண்டாக்குவது!

27. வானவில் அது தெரிவதுபோல்
உண்மையாய் இருந்தால்...
ஏதாவது ஒரு வில்லாளி
அதில் நாண் ஏற்றியிருக்க மாட்டானா?

28. அகத்தியரின் தாகத்தை
கானல்நீர் தீர்க்க முடிந்தால்...
விவேகம்
அஞ்ஞானத்தை வேரோடு வீழ்த்தும்.

29. வார்த்தையின் தாக்குதலை தாங்க
உலகில் எங்காவது அஞ்ஞானம் இருந்தால்...
வான நகரை
நெருப்பிட்டு ஏன் கொளுத்தக்கூடாது?

30. ஒளிரும் விளக்கின் சம்பந்தத்தில்
இருள் தாங்காது.
பிறகு ஒளிக்கு ஓட்டுவதற்கு
என்ன இருக்கிறது.

31. சரி... யாரோ ஒருவன்
பகலை காண
விளக்கை ஏற்றினான்.
அதுவும் வீண் வேலை தானே!

32. நிழல் விழாத இடத்தில்...
அப்படி ஒன்றும் மாற்றம் இல்லை.
அப்படியே நிழல் விழும் இடத்திலும்
ஒரு மாற்றமும் இல்லையே!

33. விழிப்பில் ஒருவனுக்கு
கனவு பொய் ஒன்று தெரியும்.
அப்படியே அஞ்ஞான தசையிலேயே
அஞ்ஞானம் இல்லை.

34. ஜால வித்தைக்காரன் ஜாலத்தால் கொண்டு வந்த
செல்வத்தை
ஒருவன் பதுக்கி வைப்பதால் என்ன லாபம்?
நிர்வாணியிடம் நிர்வாணத்தை திருடுவதால்
என்ன விசேஷம்.

35. கற்பனையாம் லக்ஷம் இனிப்புகளை
ஒருவன் உண்டாலும்...
அது என்ன கொண்டு வந்து விடும்
விரதத்தை தவிர?

36. காணல் இல்லாத இடத்தில்
ஈரம் இருக்காது.
அதற்காக காணல் உள்ள இடத்திலாவது
ஈரம் இருக்குமா?

37. அது இருப்பதாய் தோன்றுவதுபோல் (அஞ்ஞானம்)
உண்மையிலேயே இருந்தால்...
சித்திரத்தில் வரைந்த மழையால் மனிதர்கள்
நனைந்திருப்பார்கள்,
ஏரிகள் நிரம்பியிருக்கும்,
நெடு வயல்கள் நீர்ப் பாய்ச்சப்பட்டிருக்கும்.

38. இருட்டைக் கொண்டு
எழுத்துக்களை எழுத முடிந்தால்...
மை தயாரிக்கும்
வேலை மிச்சம்.

39. கண்கள்... வானத்தில் நீல நிறத்தை பார்ப்பதில்லையா?
அஞ்ஞானத்தின் பொய் தோற்றமும் இவ்வாறே;
புரிந்து கொள்ளுங்கள்.

40. அஞ்ஞானம் வெள்ளந்தியாய்
'நான் இல்லை' 'நான் இல்லை' என்று
அதன் அவித்தை என்ற பெயரிலேயே
கூறிக்கொண்டேயிருக்கிறது.

'யா ந வித்யதே அவித்யா'
எது இல்லையோ அதுவே அவித்தை அஞ்ஞானம்.

41. இரண்டாவதாக அது அநிர்வசநீயம் (விளக்க முடியாதது)
என்று
கடவுள் முன்னால் சத்தியம் செய்வதால்

அதன் இல்லாமையை
அதுவே நிரூபிக்கிறது.

42. அது இருந்தால்...
விசாரத்தின் முன் ஏன் தன்னை ஊர்ஜிதப்படுத்த முன் வருவதில்லை?
தரையில் ஒரு தொட்டி இருந்தால்...
அதன் சிறு சுவடாவது தரையில் இருக்கும்.

43. உள்ள பொருள் அஞ்ஞானத்தை அழித்த பிறகே
தன்னை தனக்கு உணர்த்திக் கொள்கிறது என்று
விசாரத்தின் தீர்ப்பு இல்லை.
உள்ள பொருள்...
இருளறியாச் சூரியன்

44. அஞ்ஞானம் பொய்யான மறைப்பு மட்டுமல்ல...
தன் பொய்மையையும் மறைத்து,
நான் இல்லை என்று தன்னையும்
மறைத்துக் கொள்கிறது.

45. ஆக பல வழிகளில்
அஞ்ஞானத்திற்கு இருப்பு இல்லை
என்று காட்டியாகிவிட்டது.
பிறகு யாரை வார்த்தை கை ஓங்கும்.?

46. இரும்பு தடி கொண்டு நிழலைத் தாக்கினால்
தடி நிலத்தையே தாக்கும்.
ஆகாசத்தை கை கொண்டு தாக்கினால்
கைபூட்டே விலகும்.

47. கானல் நீரைக் குடித்தல்...
ஆகாசத்தை கட்டித் தழுவுதல்...
தன் பிரதி பிம்பத்தை முத்தமிடுதல்...

48. இந்த செயல்களின் கிளர்ச்சி... தளர்ச்சியுறும்
எல்லா முயற்சிகளும் வீணாகும்.
அதுபோலவே அஞ்ஞானத்தை போக்கிக் கொள்ள
வேண்டும்
என்ற நியாயமான சிந்தனையும்

49. ஒருவன் தன் வாழ்நாளெல்லாம்
அஞ்ஞானத்தை போக்க செலவழிக்கலாம்.
இந்த வழியில் எந்த முயற்சியும்
ஆகாசத்தின் பட்டையை உரிக்க முயல்வது போல்தான்

50. ஆட்டுத்தாடையில் தொங்கும் சதையை மடுவென்று
பால் கறக்க முயற்சிப்பது போல்தான்.
அதுவும் கிடாஆடு!
அது முழங்கால்களின் வழியாய் பாதையைப்
பார்ப்பதுபோல்...
சாயங்காலத்தை வடகமாக்கி காயவைப்பதுபோல்...

51. கொட்டாவியை பிழிந்து தேவைக்கதிகமாய்சாறுஎடுத்து...
சோம்பலை பொடி செய்து அதில் கலந்து,
தலையில்லா முண்டத்திற்கு
தாலேலோ பாடி ஊட்டுவதுபோல்...

52. வாய்காலை வந்த வழியாய் ஓடச் செய்தால்...
நிழலை நேராக நிறுத்தி வைத்தால்...
காற்றை கயிறாய் திரித்தால்...

53. மாயாவியைக் கொன்றால்...
தலையணை உறைக்குள் பிரதிபிம்பத்தை நுழைத்தால்...
என்ன சுகம் என்ன சுகம் என்று
உள்ளங்கை முடியை சீப்பால் வருடிவிட்டால்...

54. செய்யாத பானையை உடைத்தால்...
வான மலர்களைக் கொய்தால்...
முயற் கொம்புகளை சுகமாய் உடைத்தால்...

55. கற்பூரத்திலிருந்து மை தயாரித்தால்...
மணியொளியிலிருந்து அஞ்சனம் எடுத்தால்...
மலடியின் மகளை சந்தோஷமாய் மணமுடித்தால்...

56. பாதாளத்து சகோரத்திற்கு
அமாவாசை நிலவின் அமுதை ஊட்டினால்
கானல் நீரில்
கைத்துண்டைப் போட்டு மீன் பிடித்தால்...

57. எவ்வளவுதான் இதை
விரித்துக் கொண்டே போவது?
அஞ்ஞானம் இல்லாமையால் தயாரிக்கப்பட்டது
எப்படி அதை வார்த்தை அழிக்கும்.

58. இல்லாத ஒன்றை அழித்ததாய்
வார்த்தைக்கு பட்டயம் வழங்கி
அஞ்ஞானம் இருந்ததாய் சாட்சியம் உருவாக்கக்கூடாது
எவ்வகையிலும் இருளுக்கு இருளிடத்து தோற்றமில்லை!

59. அஞ்ஞானமும் அது பிறந்ததாய்
அதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை.
நண்பகலில் முற்றத்தில் ஏற்றப்பட்ட விளக்குபோல்
எந்த யுக்தியும் உபயோகமில்லை.

60. விதைக்காமல் அறுவடைக்கு சென்றவர்கள்
எதை அறுவடை செய்வார்கள்?
தங்கள் வெட்கத்தையே
அறுவடை செய்வார்கள்.

61. நிர்வாணப் பிச்சைக்காரனிடம்
யாசிக்கச் செல்வதைவிட
ஒன்றும் செய்யாமல்
வீட்டில் சும்மாயிருக்கலாம்.

62. சமுத்திரத்தில் மழைபெய்வதால்
என்ன பயன்? அதுபோலவே
வார்த்தைகளின் பிரகாசம்
அஞ்ஞானத்தை அழிக்கப் பயன்படாது.

63. (அளக்கப் பயன்படும்) படி உபயோகமானது தான்
ஆகாயத்தை அளக்கக் கிளம்பாதவரை...
இருளை நன்றாய் பகல்போல் பார்க்க முடியுமானால்...
விளக்கின் இருப்பு வீணே.

64. ஆகாசத்தால் தயாரிக்கப்பட்ட பதார்த்தத்தை
நாவு ருசிக்க முடிந்தால்...
அதை 'ரசனா' என்று அழைப்பது
அர்த்தமில்லா பெயர்.

65. கணவன் உயிரோடு இல்லாத
சுமங்கலித்துவத்துக்கு என்ன சிறப்பு இருக்க முடியும்?
வாழை மரத்தின் நடுப்பகுதியை உண்பதும் ஒன்றுதான்
உண்ணாததும் ஒன்றுதான்.

66. ஸ்தூலமோ, சூட்சுமமோ,
சூரியனால் ஒளிர்விக்க படாதது ஏதும் உண்டோ?
ஆனால் இரவில்
பயனில்லாமல் போய்விடுகிறான்.

67. பார்வையால் பார்க்கப்பட முடியாதது
ஏதும் உண்டா?
ஆனாலும் உடையவன் உறங்குவதை
அதனால் பார்க்க முடியாது.

68. சகோரம் பொழுதெல்லாம்
நிலவைத் தேடினால்
வீண் தேடலின்
உச்சபட்ச எல்லை அதுதானே!

69. படித்துச் சொல்பவன் முன்
வெற்றுத்தாளை நீட்டினால்...
ஊமையாகிவிடுவான்.
நடந்து கொண்டிருப்பவனை
வானம் ஏறச் சொன்னால்...
முடவனாகிவிடுவான்.

70. வார்த்தை அஞ்ஞானத்தோடு
நேருக்கு நேர் மோதி பார்த்து விடுவோம் என்று
முன்டாவை தட்டினால்...
அது அர்த்தமற்ற உளறல்தான்.

71. அமாவாசை இரவில் நிலவு வருமா?
வந்தாலும் இருளைப் போக்குமா?
அஞ்ஞானத்தை ஒழிக்க முயலும் விவேகத்தின் நிலை
இவ்வாறே இருக்கும்.

72. இன்னும் தயாரிக்கப்படாத உணவை உண்பவன்
விரதமிருப்பவன் தானே!
கண்ணில்லாமல் ஒருவன் பார்க்கிறான் என்றால்...
அவன் குருடன் என்பது பட்டவர்த்தணம் தானே?

73. இல்லாத ஒன்றின் பொருளை வார்த்தை
வெளிப்படுத்தினால்...
வார்த்தை அப்பொருளோடு சேர்ந்து
எதற்காக வெளிவந்ததோ
அந்த பயனும் இல்லாமல் அழிந்துவிடும்.

74. இப்போது... அஞ்ஞானம் இல்லை என்று
சொல்லப்பட வேண்டுமா?
அதை அழிக்க முயற்சிக்கும்
வார்த்தையிலேயே ஒன்றும் இல்லை.

75. ஆகவே அஞ்ஞானத்தோடு வார்த்தை மோதி
அதை அழிக்க முயன்றால்...
தன் செர்நத அழிவுக்கே
வழி தேடிக் கொள்கிறது.

76. அஞ்ஞானம் நாசமானல்...
வார்த்தையின் நம்பகத்தன்மையை
சாட்சியாக்கிவிட்டிருக்கும்.
ஆனால் அது இல்லாததால்
அதை நிகழ அனுமதிக்கவில்லை.

77. உள்ள பொருளுக்கு
அதன் சொரூபத்தை காட்டி
வார்த்தை முக்கியத்துவம் பெறும் என்று கூறுவது
நடக்கவே நடக்காத ஒன்று.

78. எந்த நாட்டிலாவது ஒருவன்
தன்னைத்தானே மணந்துகொள்வானா?
எந்த கிரஹணத்தின் போதாவது சூரியன்
தன்னைத்தானே கிரஹணம் செய்து கொள்ளுமா?

79. ஒருவேளை அப்படி நடந்திருந்தால்...
ஆகாசம் தன்னை சந்திக்க புறப்பட்டு சென்றிருக்கும்!
சமுத்திரம் தனக்குள்ளே நுழைந்திருக்கும்!
உள்ளங்கை தன்னை தொட்டிருக்கும்!

80. சூரியோதயத்தை சூரியன் பார்த்து ரசித்திருக்கும்
கனி மற்றொரு கனியை தந்திருக்கும்
நறுமணம் தன்னை நுகர்ந்திருக்கும்

81. ஒருவேளை சர அசரங்கையெல்லாம்
உடனடியாய் நீர் அருந்தச் செய்ய முடியலாம்.
நீரையே நீர் அருந்தச் செய்ய முடியுமா?

82. முன்னூற்றி அறுபத்தி ஐந்து நாட்களில்
ஒரு நாளிலாவது சூரியன்
தன் கண்களால்
தன்னைப் பார்த்திருக்கிறானா?

83. சிவன் உக்கிரமானால்...
மூவுலகையும் எரித்து விடுவான்.
அதையும் தாண்டி
நெருப்பையே எரிப்பானா?

84. படைக்கும் பிரம்மனே ஆனாலும்
கண்ணாடியில்லாமல்
வேறு எவ் உபாயத்தாலோ
தன் முன் நிற்க முடியுமா?

85. பார்வை தனக்குள்ளேயே நுழையுமா?
ருசி தன்னையே ருசிக்குமா?
விழித்தவன் தன்னை எழுப்ப முடியுமா?
இதெல்லாம் நடக்கவில்லை.

86. சந்தனக் கட்டை தன்மேலே சந்தனம் பூசிக்கொள்ளுமா?
வண்ணம் தன்மேல் வண்ணம் தீட்டிக் கொள்ளுமா?
முத்து தன் ஒளியையே அணிந்து கொள்ளுமா?

87. தங்கம் தன்னைத்தானே உரசி மாற்று பார்க்குமா?
விளக்கின் ஒளி தனக்கே ஒளியாகுமா?
திரவத்தன்மை திரவத்தில் கலக்குமா?

88. சங்கரன் நிலவை முடியில் சூடியுள்ளான்
அதற்காக நிலவு
தன் தலைமேல் தன்னை சூட முடியுமா?

89. எப்படி அறிவே திரள் உருவாம்
உள்ள பொருள்
தன்னை அறியும்?

90. உள்ளபொருளால்
தன்னை அறிய இயலாது.
கண் தன்னை எப்படி பார்க்க முடியாதோ அப்படி.

91. கண்ணாடி தன்னையே
தனக்கு பிரதிபலிக்க முடிந்தால்...
உள்ள பொருள் தன்னை
'இருக்கிறேன்' என்று அறியும்.

92. கண்ணுக்கு தெரிந்த திசையில்
உள்ள எல்லாவற்றையும்
கத்தியால் கீறி நுழைய முடியும்.
ஆனால் கத்தி தன்னையே கீறி நுழையுமா?

93. நாவின் நுனி எல்லாவகையான சுவைகளையும்
சுவைத்து ருசிப்பதில் தேர்ச்சி பெற்ற விற்பன்னனாக
இருக்கலாம்.

ஆனால் எவ்வுபாயத்தாலும்
தன்னையே சுவைக்க முடியாது.

94. அதற்காக நாவு
சுவைப்பதை நிறுத்திவிடுமா?
கிடையாது.
அது உள்ளபடியே தொடர்ந்து சுவைக்கும்?

95. அதுபோலவே சத் சித் ஆனந்தமாம் உள்ள பொருள்
ஸ்வசித்தமாய் நிற்கும்போது
எந்த புது அறிவை வார்த்தை அதற்கு கொடுத்துவிட முடியும்
இங்கு எல்லாம் அதனது தானே!

96. எந்த பிரமாணங்களாலும் உள்ள பொருள்
தன்னை நிரூபணம் செய்யவோ. நிரூபிக்கப்படாமலோ
இருப்பதை அனுமதிக்கவில்லை.
சுயசார்பு தன்மையால் அவன் விஷயத்தில்
அங்கு கொடுக்கல் வாங்கல் இல்லை.

97. ஆகவே வார்த்தை உள்ளபொருளை
உள்ளபொருளுக்கே காட்டி புகழ்பெறும் என்ற முடிவுக்கு
வந்துவிட முடியவில்லை (கூடாது)

98. உச்சிப் பொழுதில் ஏற்றப்பட்ட விளக்கு... வெளிச்சம் தருவதுமில்லை,
இருளை போக்குவதுமில்லை.
இந்த பரிதாபமான நிலையே இங்கு வார்த்தைக்கு
இரண்டு விஷயத்திலும் ஏற்படுகிறது.

99. அஞ்ஞானம் இல்லாததால்...
அதை அழிக்கவும் முடியாது.
உள்ள பொருள் சுயசித்தமானதால்...
யார் அதை யாருக்கு காட்ட?

100. வார்த்தைக்கு சிறுவாய்ப்பும்
எந்தவிதமாகவும் கிடைக்காததால்,

ஊழி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட
ஓடை போலானது.

101. இப்போது வார்த்தை
ஏதாவது ஒன்றை தன்னுள் கொண்டிருந்தால்...
அதற்கு முடிவாக
எந்த அர்த்தமும் இல்லை.

102. இதுயெல்லாம்
மாயாவி வரப்போகிறான் என்பதைப் பற்றிய
உள்ளங்கையின் அந்தரத்தில் தொங்கிய ஆகாசத்தை
பற்றிய...
வெட்டிப் பேச்சு.

103. அழகாய் வண்ணம் தீட்டப்பட்ட
பொருள் போல் தோன்றினாலும்...
வார்த்தை தன் சேனாசைனியத்தோடு
அர்த்தமற்றதானது.

104. வார்த்தையினாலேயே பிழைத்து வரும்
ஞானமும் அஞ்ஞானமும்
உண்மையைக் கூறினால்...
சித்திரத்தின் காடுபோல் ஆனது.

105. ஊழிப் பெருவெள்ளத்தில்
வார்த்தை கரைந்தது.
மேகங்கள் விலகியது.
மப்பும் மந்தாரமுமான நாள் முடிவுற்றது.

## Part-VI End

# VII-ஆம் அதிகாரம்

# அஞ்ஞானத்தை மறுத்தல்

## Disproving Ignorance

1. நடைமுறையில் கூறப்போனால்...
ஞானத்தின் வலியுறுத்தல் இல்லாவிட்டால்...
அஞ்ஞானம் காதுகளுக்கு கீழேயே
மறைந்து கொண்டிருக்கும்.

2. இருளின் பாதுகாப்பில்... மின்மின்ப்பூச்சி
தன் தலை விளக்கால் ஒளிர்கிறது.
அதுபோலவே 'அனாதி அஞ்ஞானம்' என்பதும்...
பொய்யாய் ஒளிர்கிறது.

3. கனவின் மகிமை கனவிலேயே...
இருள் இருளிலேயே விளங்கும்.
அஞ்ஞானத்தின் மகிமையும்...
அதுபோல் அஞ்ஞானத்திலேயே.

4. மண் குதிரையை...
படைக்கு பழக்க முடியாது.
ஜாலவித்தைக்காரன் படைத்த ஆபரணங்களை...
அணிய முடியாது.

5. சர்வஞ்ஞத்துவம் பொருந்திய உள்ள பொருளின் வீட்டில்
அஞ்ஞானம் சொருகப்பட்டிருந்தாலும்
அஞ்ஞானத்தால் ஒன்றும் செய்ய இயலாது.
நிலவொளி கானல் நீரை
அலைகளாய் பொங்கச் செய்யுமா?

6. ஞானம் என்பது...
அஞ்ஞானத்தின் வேறு வடிவம்.
ஒன்று மறைந்து அதுவே மற்றொன்றாய்
அதே இடத்தில் முகம் காட்டும்.

7. இப்போது போதும் இந்த முன்னுரை
அஞ்ஞானத்தை தேடி விசாரம் செய்வோம்.
அதன் உண்மை தெரியும்போது
ஞானத்தின் முகமும் தெரிந்துவிடும்.

8. அஞ்ஞானம் உள்ள பொருளில்
அதன் ஓர் அங்கமாக வசிக்கிறது என்றால்...
ஏன் அது வசிக்கும் இடத்தை (உள்ள பொருளை)
அது அஞ்ஞானமாக்கவில்லை?

9. எங்கே அஞ்ஞானம் இருக்கிறதோ...
அங்கே எல்லாவற்றையும் அது
அஞ்ஞானமாய் மாற்றிவிடும்.
இதுவே அஞ்ஞானததின் தன்மை.

10. சில சாஸ்திர விற்பன்னர்கள் கூட இக்கருத்தை
கொண்டவர்களாக இருக்கிறார்கள்.
உள்ள பொருள் அஞ்ஞானத்தில் இருக்கிறது
பின்னது அதிலேயே வசித்தாலும்
முன்னதை மறைத்து விடுகிறது.
இக்கருத்து மறுக்கப்படுகிறது.

11. அஞ்ஞானம் விதை வடிவில்
இருமை தோன்றும் முன்னே இருந்தது என்றால்...
யார் அங்கேயிருந்து அப்போது
அதைப் பார்த்தது?

12. அஞ்ஞானம் தன்னுடைய ஜடத் தன்மையினால்
அதை அறியவில்லை என்றால்...
அது அதனுடைய இருப்பை
பிறகு எப்படி சாட்சி கூறும்?

13. அஞ்ஞானம் தன் இருப்பை தானே தெரிந்து
கொண்டது

என்ற தீர்மானத்திற்கு
ஒருவன் வந்தால்...
இப்படி மாறுபாடான தீர்மானம்
தீர்மானிப்பவனை மௌனத்திற்கு இட்டுச்செல்லும்.

14. அங்கே இருந்த ஒரே அறிவு
உள்ள பொருள் மட்டுமே
அவனையே அஞ்ஞானம் முட்டாளாக்கினால்
பிறகு யார் அஞ்ஞானத்தை அறிவது?

15. தன்னை காப்பாற்றிக் கொள்வதற்காகவாவது
உள்ள பொருளை அது அஞ்ஞானமாக்காவிட்டால்...
அதை ஒருவன் 'அஞ்ஞானம்' என்று அழைப்பதற்கு
வெட்கப்பட வேண்டும்.

16. சூரியன் மேகங்களால் விழுங்கப்பட்டால்...
பிறகு யார் ஒளியில் மேகங்கள் தெரிகிறது?
உண்மையிலேயே தூங்கும்போது ஒருவன் இல்லாமல்
போய்விட்டால்...
பிறகு அதை அனுபவித்தது யார்?

17. அதுபோலவே எதில் (உள்ள பொருளில்) அஞ்ஞானம்
வசிக்கிறதோ
அது அஞ்ஞானமாகிவிட்டால்...
அந்த அஞ்ஞானம் (உள்ள பொருள்)
அஞ்ஞானத்தை பிரித்து அறியாமல் மறைந்துவிடும்.

18. எது அஞ்ஞானம் இருக்கிறது என்று
பிரித்து அறிகிறதோ...
அதுவே அஞ்ஞானம்தான் என்பது
எப்போதும் ஏற்பட்டதே இல்லை.

19. கண்ணில்
திமிர் ரோகம் இருக்கிறது...
ஆனால் கண் பார்வை குருடாகவில்லை என்பது
பொருத்தமில்லை.

20. காட்டுத் தீயால்
எரிக்கப்படாத
விறகு
எரிபொருளாய் பயன்படாது.

21. வீட்டினுள் அடைத்து வைக்கப்பட்ட இருள்
வீட்டை இருட்டாக்கவில்லையென்றால்...
அதை 'இருள்' என்று பெயர் சூட்டி
மகிழ்ந்து அழைப்பது எதற்கு?

22. விழிப்பை விரட்டாத ஒன்றை
தூக்கமென்று யாரழைப்பார்கள்?
பகலைப் பழுதாக்கவில்லையென்றால்...
அதை இரவென்பது எவ்வாறு?

23. அதுபோலவே உள்ள பொருள்
தன்னுடைய உள்ள தன்மையில் எதையும்
இழக்கவில்லை
என்றால்...
தர்க்க ரீதியாகவே
அஞ்ஞானம் என்ற வார்த்தையே பொய்.

24. 'உள்ள பொருளில் அஞ்ஞானமிருக்கிறது'
என்று கூறுவதுகூட
தர்க்கத்தின் ரீதியாய்
அர்த்தமற்றது.

25. அஞ்ஞானமோ அடர்ந்த இருள்.
உள்ள பொருளோ பிரகாசத்தின் சுரங்கம்.
இவை இரண்டையும் ஒன்றாய்
இணைப்பது எவ்வாறு?

26. ஒருவேளை இணைந்து இருக்கலாம்...
விழிப்பும் கனவும்,
நினைப்பும் மறப்பும்,
கைகோர்த்து ஒரே வரிசையில் சென்றால்...

27. குளிரும் உஷ்ணமும். தங்கள் வசிப்பிடத்திற்கு
ஒரே பாதையில் ஒன்றாய் சென்றால்...
இருட்டைக் கொண்டு சூரியனின் கதிர்களை
ஒரே கட்டாய் கட்ட முடிந்தால்.

28. இரவும் பகலும்,
ஒரே இடத்தில் வசிக்க நேர்ந்தால்...
உள்ள பொருள்
அஞ்ஞானத்தோடு சேர்ந்து வசிக்கும்.

29. வாழ்வும் மரணமும், பத்துப் பொருத்தமும் பொருந்தி
திருமணம் செய்து கொண்டால்...
உள்ள பொருளும் அஞ்ஞானமும்
சந்தோஷமாய் கூடி வாழும்.

30. ஏன் புதிரான கூற்றுகளையே கூறுகிறார்கள்
'உள்ள பொருளால் அழிக்கப்படும்
அஞ்ஞானம்
உள்ள பொருளிலேயே இருக்கிறது"

31. ஒஹோ! இருள் பந்தயம் கட்டி
தன் இருட்டை துறந்து ஒளியானால்
பிறகென்ன...
அது இயல்பாகவே சூரியனாய் மாறிவிடும்.

32. விறகு தன் காய்ந்த தன்மையை துறந்துவிட்டு
நெருப்பாய் மாறுவேன் என்றால்...
பிறகென்ன விறகு நெருப்பாய் மாறிவிடும்.

33. சிறு ஓடைகள்
தங்கள் தனித்த யிருப்பை
கங்கையை அடைந்தவுடன் துறந்துவிடுமேயானால்...
அது கங்கையே ஆகிறது.

34. ஒருவேளை அஞ்ஞானம் உண்டு என்றால்...
உள்ள பொருளைத் தீண்டியவுடன்
அஞ்ஞானமாய் இல்லாமல்
உள்ள பொருளில் ஒன்று கலந்து விடும்.

35. அஞ்ஞானம் சுத்த அறிவுக்கு விரோதமானதால்...
அது அதை தீண்டியவுடன் பிழைத்திருக்காது.
அதனுடைய தனியிருப்பும்
நிரூபிக்கப்பட வில்லை.

36. உப்பினால் உருவான மீன் ஒன்று
உயிர்பெற்றால்...
நீரே அதைக் கொல்லும்.
நீரை விட்டு தப்பினாலும் மரணம் தப்பாது.

37. ஆகவே உள்ள பொருள் இருக்கிறது என்றாலே
அஞ்ஞானம் இல்லை என்றுதான் பொருள்.
அஞ்ஞானத்தை பற்றிய வெட்டிபேச்சுக்கு
காது கொடுக்கத் தேவையில்லை.

38. கயிற்றில் பாம்பின் தோற்றம் இருக்கும் வரை...
அதை அந்தக் கயிற்றால்
கட்டவும் முடியாது,
விரட்டவும் முடியாது.

39. பகல் வருவதால் பயந்து
முழு நிலவிடம் அடைக்கலமான இருள்
முழு நிலவால் விழுங்கப்பட்டது.

40. அது போலவே அஞ்ஞானம் என்னும் வார்த்தை
இருவிதமாகவும் வீணானது.
அதனுடைய சொரூபம் யூகிக்கப் படமுடியவில்லை
சில தர்க்கங்களால் தவிர.

41. இப்போது நாம் சிறிது ஆராய்ச்சி செய்வோம்
அஞ்ஞானத்தின் நிஜ சொரூபம் என்ன?
அது கார்யங்களில் இருந்து அனுமானிக்கப்படுகிறதா?
அல்லது பிரத்யட்சமாக விளக்குகிறதா?

42. நிறுவப்பட்ட கொள்கைகளில் இருந்து நாம்
நிரூபணங்களாக
புலன்களால் பார்க்கப்படும் தோற்றம் முதலியவற்றை
எடுத்துக் கொண்டால்...

அவை அஞ்ஞானத்தின் விளைவுகளே தவிர
அதுவே அஞ்ஞானமல்ல.

43. முளையிலிருந்து நேராய் முளைத்து
படர்ந்த கொடி அழகாய் காட்சியளிக்கிறது.
ஆனால் அது விதையல்ல.
விதையின் விளைவு.

44. விருப்பத்தக்கதோ தாகாததோ
என்ன காட்சிகளை கனவில் கண்டாலும்...
அது தூக்கமில்லை,
தூக்கத்தின் குழந்தை.

45. நிலவு ஒன்றேயானாலும்
இரண்டாய் வானில் தெரிகிறது
அது அவ்வாறு தெரிவது கண் பார்வைக்
கோளாறினால் அல்ல
பார்வைக் கோளாறின் விளைவு.

46. இவ்வாறே பிரமாதா பிரமேயம் பிரமாணமாகிய
இம்முப்படி
அஞ்ஞானத்திலிருந்து உருவானதே தவிர
அதுவே அஞ்ஞானமல்ல.

47. சுருக்கமாக பல்வகையான பிரமாணங்கள், பிரத்யட்ச
அனுபவம் முதலிய குறிப்பிட்ட அஞ்ஞானத்தின்
அம்சங்கள்
அஞ்ஞானத்தின் இருப்பை காட்டவில்லை.
அது யூகிக்கப்பட வேண்டியதாய் இருக்கிறது.
வேறு வழியில்லை.

48. அஞ்ஞான கார்யங்களில் இருந்து
அஞ்ஞானத்தின் இருப்பை
ஒப்புக் கொள்வோமேயானால்...
பிறகு அக்கார்யங்களும் அஞ்ஞானம்தான்.

49. கனவில் தோன்றியதெல்லாம்
கனவென்றால்...
பிறகு அதை கண்டவன் அதனின்று வேறோ?
ஆக அஞ்ஞானத்தின் கார்யம் அஞ்ஞானமே!

50. சக்கரை... சக்கரையே சுவைப்பதுபோல்...
அஞ்சனம்... அஞ்சனத்தை தீட்டிக்கொள்வதுபோல்...
தூக்குக் கயிறே... தூக்குப்போட்டுக் கொள்வதுபோல்...

51. காரணம் காரியத்தோடு அபின்னமாகும் பட்சத்தில்
பிறகென்ன...
எல்லாம் அஞ்ஞானந்தான்.
பிறகு யாருக்கு அங்கே அதனோடு விவகாரம்?

52. அப்போது யாராலும், அஞ்ஞானம் இருக்கிறது என்று
நிரூபிக்கிறவனையோ, அவனால் நிரூபனம்
செய்யப்பட்ட அஞ்ஞானத்தையோ,
கற்பனை செய்து கூட பார்க்க முடியாது.
ஏனென்றால் அந்த நிரூபணம்
கானல் நீர் குளத்திற்கு சாட்சியாய். அதில்
நீந்தியமீனை
கூப்பிடுவதுதானே தவிர வேறொன்றுமில்லை.

53. ஆகையால் ஆருயிர் நண்பா
எந்த ஆதாரங்களாலும் எது நிர்ணயிக்க
முடியவில்லையோ...
அதற்கும் ஆகாச புஷ்பத்திற்கும்
ஏதேனும் வேறுபாடு உண்டா?

54. ஆக அது இருப்பதற்கு எந்த சாட்சியத்தையும் அது
அனுமதிக்காததாலும்,
அதை பிரஸ்தாபிப்பதற்கும் யாரும் இல்லாததாலும்,
இந்த கருத்தாய்விலிருந்து அஞ்ஞானம் இல்லை
என்று உணருங்கள்.

55. இவ்வாறு அஞ்ஞானம்
தன்னுடைய இருப்பை நேரடியாகவோ அல்லது
யூகத்தின் மூலம் மறைமுகமாகவோ காட்ட
இயலாததால்
இல்லாதது என்று முடிவு செய்யப்படுகிறது.

56. எது எந்த விளைவுகளையும் ஏற்படுத்தவில்லையோ...
எது எதற்கும் காரணமாகவில்லையோ...
எது தன்னை அஞ்ஞானம் என்று அழைப்பதற்கே
வெட்கப்படுகிறதோ...
அதை எவ்வாறு உண்மை என்று கண்டுகொள்ள
முடியும்?

57. அது உள்ள பொருளை
எந்த கனவையும் அனுபவிக்க செய்யவில்லை.
அதற்கு அதை அதன் சொந்த இடத்தில்
உறங்கச் செய்யவும் தெரியவில்லை.

58. இருந்துவிட்டு போகட்டும் என்று
உள்ள பொருள் சுத்த அறிவாகவே இருக்கிறது.
இருந்தபோதிலும் அஞ்ஞானத்தின் சம்பந்தம்
அதில் இருக்கிறது என்கிறார்கள்.

59. மந்தனம் செய்யப்படாத விறகில்
நெருப்பு சாமார்த்தியமாக மறைந்திருப்பதுபோல்
அஞ்ஞானம் உள்ள பொருளில்
மறைந்திருக்கிறது என்றால்...

60. உள்ள பொருள் தன்னுடைய பெயரான
இருக்கிறேன் என்கிற அம்சத்தையே
அதனிடம்வைத்துக் கொள்ளாதபோது
அஞ்ஞானம் அங்கு இருப்பதற்கு
எப்படி இடம் தேடும்?

61. இன்னும் ஏற்றப்படாத விளக்கிலிருந்து
மை எடுக்க முடியுமா?
நடப்படாத மரத்தின்
நிழலை விட்டு நீங்க முடியுமா?

62. இன்னும் பிறக்காத உடம்பின் மீது
எப்படி சிசுத் தைலம் பூசமுடியும்?
இன்னும் உருவாக்கப்படாத கண்ணாடியை
எப்படித் துடைக்க முடியும்?

63. கடைந்தெடுக்கும் முன்பே
வெண்ணெய்...
பசுமாட்டின் மடியிலேயே இருக்கும் பாலில் இருக்கிறது
என்று யூகித்து
அதை எடுக்க முயற்சிக்கும் புத்தியை போன்று...

64. தன்னையே அறியாத உள்ள பொருளில்
அஞ்ஞானத்தின் சாயலில்
ஏதோ ஒன்று அதனிடத்தில்
இருக்கிறது என்பது எவ்வாறு?

65. ஆகையால் எந்த அஞ்ஞானமும் அங்கே (உள்ள
பொருளில்) இல்லை என்பது
அதன் (உள்ள பொருளில்) தன்மையினாலேயே
நிரூபிக்கப்பட்டது.
பிறகு அது இல்லை என்னும் வெட்டிப்பேச்சினால்
என்ன அர்த்தம்?

66. இருக்கிறேன், இல்லை, என்கிறதும் கடந்த
இருப்பான உள்ள பொருளில்...
அஞ்ஞானம் இருக்கிறது என்று இன்னும் யாராவது
கூறினால்
அது... இது போல்தான்.

67. ஒரு பானையின் இல்லாமை
நூறு துண்டுகளாக உடைக்கப்பட்டது.
மரணத்தின் சர்வத்துவம்
கொல்லப்பட்டது.

68. தூக்கத்திற்கு தூக்கம் வரவேண்டும்.
மயக்கத்திற்கு மயக்கம் வரவேண்டும்.
அந்தகாரம்
அந்தகூபத்தில் விழ வேண்டும்.

69. அசத்து சங்கடப்பட வேண்டும்.
வாழை மரத்தின் நடுப்பகுதி உடைய வேண்டும்.
வானமே சவுக்காகிச் சொடுக்கி
சப்தம் எழுப்ப வேண்டும்.

70. அது மரணத்திவனுக்கு விஷம் புகட்டினாற்போல்...
ஊமையன் வாயடைத்து போனாற்போல்...
எழுதப்படாத எழுத்துக்களை அழித்தாற்போல்...

71. இவ்வாறே உள்ள பொருளில்
அஞ்ஞானம் காலட்சேபம் செய்கிறது என்று கூறுவது பொய்.
அது உள்ள பொருளில் கலந்து
ஒன்றாகிவிட்டது (என்று இப்போது ஆதரவாளர்கள் கூறலாம்)

72. மலடி எவ்வாறு குழந்தை பெறுவாள்?
வறுத்த விதை முளைக்குமா?
சூரியனை இருளில் யாராவது பார்க்க முடியுமா?

73. இவ்வாறே அறிவு மாத்திரமானதில் (உள்ள பொருளில்)
எவ்விதமாக அஞ்ஞானத்தை தேடினாலும்
கண்டுபிடிக்க முடியுமா?

74. வெண்ணையைக் கண்டுபிடிக்க பால்பானையை
எவ்வளவு கடைந்தாலும்
வெண்ணெய் மிதந்து மேல் வருமா?
அல்லது கரைந்து விடுமா?
இப்படி இருக்கிறது நிலமை.

75. தூக்கத்தை பிடிக்க
அவசரமாய் எழுந்தவன்...
பிடித்துவிடுவானா?
அல்லது அங்கிருந்த தூக்கம் மறைந்துவிடுமா?

76. இவ்வாறு அஞ்ஞானத்தை தேடுவது
பைத்தியக்காரத்தனமல்லவா!
எது தேடினால் அகப்பட்டாததோ...
அதைத் தேடுவது தேடாததற்கு சமமே.

77. சுருக்கமாக எந்த விதமாகவும்
அஞ்ஞான இருப்பின் ஒளியால்
அறிவின் நகரம்
பிரகாசிப்பதில்லை

78. விசாரத்தின் பார்வை
எப்போதாவது அஞ்ஞானத்தின் இருப்பை
உள்ள பொருளிலோ அல்லது அதற்கு வெளியிலோ
பார்த்திருக்கிறதா?

79. தீர்மானத்தின் முகத்தில்...
அஞ்ஞானம் எப்போதும் பூசப்படவேயில்லை.
பிரமாணம் கனவிலும் கூட... அதற்கு காது
கொடுப்பதில்லை.
அதனுடைய பொறுமையின்மையால்...
அஞ்ஞானம், அதுவே தொலைந்து போனது.

80. என் ஆருயிர் நண்பா...
இதையெல்லாம் வைத்து
அஞ்ஞானத்தை நோக்கிச் செல்லும் பாதையை
கண்டுபிடிக்க
ஏதாவது உபகரணத்தைச் சந்தித்திருக்கிறாயா?

81. அது முயல்கொம்புகளால் நடப்பட்ட
முகூர்த்த பந்தலை அமாவாசை சந்திரனின்
கிரணங்களால்
ஒளியூட்டினாற்போல்...

82. மலடியின் குழந்தைகள்
ஒருவருக்கொருவர்
வானமலர் மாலை சூடி
விழாக்காலத்தை அனுபவித்தால்...

83. ஆகாயத்தால் படி செய்து
ஆமையின் நெய்யை அளந்தால்...
இந்த மாதிரியான
கற்பனைகள் எல்லாம் உண்மையாகும்போது
(சந்திக்கலாம்)

84. நாம் உண்மையிலேயே எல்லா விதத்திலும்
அஞ்ஞானத்தை வெளிக்கொணர முயற்சி செய்து
விட்டோம்
ஆனால் அது இல்லை.
இதையே நாம் எவ்வளவு நேரம் சொல்லிக் கொண்டே
இருப்பது?

85. ஆகையினால் அஞ்ஞானம் என்ற வார்த்தையை
கனவில்கூட கூறுவற்கு நான் இசையவில்லை.
இருந்தபோதிலும் அதைப் பற்றி...
என் மனதில் இன்னொரு சிந்தனை உதிக்கிறது.

86. உள்ள பொருளின் பார்வையின் சொரூபம்
தன்னையும் அறிவதில்லை
வேறொன்றையும் அறிவதில்லை.

87. ஆனால் தனக்கு முன்னால்
இந்த புலனாகும் பொருட்கள் நிறைந்த உலகை
விரித்து தன்னையும்
காண்பானாக்கி கொள்கிறது

88. உள்ள பொருளில் இருக்கிறது என்ற அம்சத்தை
கூறவே சங்கடமாய் இருக்கும்போது...
அதிலேயே இவ்வளவு பெரிய உலகம்
அதுவும் உண்மையில் புலனாகிறது.

89. ஆகவே அஞ்ஞானம் புலனாகவில்லை என்றாலும்
அது அங்கே இருக்கிறது. அதைப்பற்றி சந்தேகமே
இல்லை
எது பிரத்தியட்சமாய் புலனாகிறதோ அதிலிருந்து
அனுமானிக்க முடிவதால்
அதுவே பிரமானமும் ஆகிறது.

90. நிலவு ஒன்றே ஆனாலும் அது ஆகாயத்தில்
இரண்டாய் தெரிந்தால்
கண் திமிர ரோகத்தால் பரிக்கப்பட்டுள்ளது என்று
அனுமானிக்க முடியாதா?

91. மரங்கள் நிற்கும் இடத்தில்
நீர் காணப்படுவதில்லை.
இருந்தும் அவை
மலர்ச்சியாய் பசுமையாய் காட்சியளிக்கிறது.

92. மரங்கள் கண்டிப்பாக வேர்களின் மூலம் நீரை
உறிஞ்சுகிறது என்பதை
ஒருவன் யூகிக்காமல் இருக்க முடியாது.
அதுபோலவே அஞ்ஞானமும்
அது புலனாகும் உலகத்தில் இருந்தே
தெரியவருகிறது.

93. ஒருவன் விழித்தவுடன் தூக்கம் நீங்கிவிடுகிறது
ஆனால் தூங்கும்போது அவனுக்கு தூக்கம்
புலனாவதில்லை.
ஆனாலும் கனவு வந்ததில் இருந்து
அவனுக்கு தூக்கத்தில் இருந்தது புலனாகிறது.

94. ஆகவே உள்ள பொருளில்
பொருட்கள் நிரம்பிய பரந்த இந்த உலகம்
தோற்றமாவதிலிருந்து
ஒருவன் சந்தோஷமாக
அஞ்ஞானம் இருக்கிறது என்று கூறலாம்.

95. எப்படி... இப்படிப்பட்ட அறிவை
அஞ்ஞானம் எனக்கூறலாம்?
என்ன! ஒளியை உருவாக்குவதை
ஒருவன் இருள் எனலாமா?

96. ஆ! ஒன்றை ஒரு பொருளின் மேல் தடவுவதால்...
அது அந்தப் பொருளை
நிலவை விட பிரகாசமாய் பராமரித்தால்...
அதை 'அஞ்ஞானம்' (மை) எனலாமா?

97. நீர் அக்னியின் காரியங்களை செய்ய முடிந்தால்...
அஞ்ஞானமே
உலகத்தின் வரத்துக்கு காரணம் என்று
ஒத்துக்கொள்ளமுடியும்.

98. முழு நிலவு அதன் சோபையோடு
அமாவாசையை சந்திக்க முடிந்தால்...
அப்போது இருக்கிறதை (உள்ள பொருளை)
அஞ்ஞானமென பட்டம் சூட்டலாம்.

99. அன்பு பெருகி தானாகவே
தன் மடியிலிருந்து அமிர்த தாரையை
விஷம் பொழியுமா!
பொழிந்தால்... அதை விஷமெனலாமா?

100. நம் முன் விரிந்த
அனைத்து விவகாரங்களும்
ஞானங்கொண்டே நடக்கும்போது
அஞ்ஞான வெள்ளம் இங்கே எவ்வாறு வந்தது?

101. இதையெல்லாம் அஞ்ஞானம் என்று அழைத்தால்
நாம் ஞானத்தை என்னவென்று அழைப்பது?
அப்படியானால் இங்கே இருப்பது எல்லாம்
உள்ள பொருளன்றோ!

102. அவனுக்கு ஒன்றும் ஆவதில்லை,
என்ன நடந்தாலும் அவனுக்கு ஒன்றும்
தெரிவதுமில்லை,

உறுதிமொழி அளிக்கும் பிரமாணங்கள்
சூன்யமாகிவிடுகிறது.

103. அவனுடைய மூல நிலையில்
அவன் இருக்கிறான் என்பதற்கு
ஆதாரமாக எதுவும் நடக்கவில்லை.
அதற்காக அவன் இல்லை என்று சேர்த்து
சொல்லிவிட முடியாது.

104. அவனுடைய இருப்பு... யாரையும் ஆசிரயிக்காதது,
அவனுடைய தோற்றம்... யாரும் அறியாதது,
இவ்வாறு அவன் இருக்கும்போது
ஒருவன் அவன் இருப்பு தெரியவில்லை என்று
எவ்வாறு கூறமுடியும்?

105. அவன் சூன்யவாதிகளின் 'அவன் இல்லை' என்னும்
குற்றச்சாட்டை
மௌனமாய் பொறுத்துக் கொள்கிறான்.
தன்னுடைய விசேஷங்களுக்கு
பராமுகமாய் தன் முதுகைக் காண்பிக்கிறான்.

106. ஆழ்ந்த தூக்கத்தையே அறியும் அறிவான அந்த
சர்வஞ்ஞனுக்கு
இதெல்லாம் தெரியாதா?
தன்னை பார்க்கப்படும் பொருளாய் ஆக்குவதில்
அவன் எந்த சம்பந்தத்தையும் பராமரித்துக்
கொள்வதில்லை.

107. எதை எதைப் பற்றித்தான் வேதங்கள் கூறவில்லை!
ஆனாலும் அவனுடைய நாமத்தைக்கூட அது
கூறவில்லை.
ஏனென்றால்...
எந்த குணங்களும் அவனிடம் இல்லை.

108. சூரியன் காட்டாதது ஏதேனும் இங்கு உண்டா?
ஆனால் அவன் உள்ள பொருளைக் காட்டியதுண்டா?

உள்ள பொருள் அப்படிப்பட்டது
அதனை ஆகாயம் கொள்வதில்லை.

109. எலும்புகளின் சேர்க்கையாம் உடம்பையே
நான் என்று அபிமானிக்கும் அகங்காரம்
உடம்பையே பாதுகாத்து போஷிக்கிறது.
ஆனால் உள்ள பொருளை விலக்கி விடுகிறது.

110. அறியக்கூடிய எல்லாவற்றையும் அறியும் புத்தியோ
உள்ள பொருளை மட்டும் யூகிக்க முடியவில்லை.
மனது உள்ள பொருளைத் தவிர
எல்லாவற்றையும் கற்பனை செய்கிறது.

111. விஷயங்கள் என்னும் வறட்டு நிலத்தையே
தங்கள் வாய்களால்
இடைவிடாது சுரண்டிக் கொண்டிருக்கும்
இந்திரியங்கள்
அவனிடம் எந்த சுகத்தையும் காண்பதில்லை.

112. எல்லாவற்றையும்...
ஏன் தன் இருப்பின்மையும் சேர்த்து உண்டு
முற்றும் திருப்தியுற்றிருக்கும் உள்ள பொருளை
முழுமையாய் யார் அறிந்து கொள்ள முடியும்?

113. ருசி எவ்வாறு தன்னையே ருசிக்காதோ
அதுபோல் தன்னை தானே அறியாத அவன்...
எப்படி பிறர் பார்க்கும் ஒரு பொருளாவான்?

114. இது தவிர, எண்ணிலடங்கா நாமரூபங்களாக மாறி
அவன் முன் எது வந்தாலும்...
வந்தவுடன் பயத்தினால்
மறைந்து விடுகிறது.

115. ஆகையால், தன் முகத்தை பார்ப்பதற்கே
பசியில்லா ஒருவனிடம்

வேறு ஒருவன்
எவ்வாறு அனுமதி பெறுவான்?

116. ஒரு கம்பி புதிரில் ஒருவன் தோல் வளையத்திற்குள் வைத்த குச்சி
வளையத்திற்கு வெளியே இருப்பதால்... எவ்வாறு
ஏமாற்றப்படுகிறானோ அவ்வாறே
உள்ள பொருளைப் பற்றிய எந்த தீர்மானமும்
தோல்வியும் விளையாட்டாகவே நிரூபணமாகிறது.

117. தன் நிழலின் நீளத்தை
மனதால் அளந்து
அதை தாவிக் குதிக்க முயன்ற
மதியூகி... புரியாமல் கலங்கி நிற்பதைப் போல்!

118. உள்ள பொருளை எவ்வளவு கடுமையாக முயன்று
அதை அது... இது... என்ற நிரூபிக்க முயல்பவன்
தன் கையைக்கூட
அதன்மேல் வைக்க முடிவதில்லை.

119. இன்னும் எவ்வளவு தூரம் விளக்குவது!
இங்கே வார்த்தைகளுக்கு சஞ்சரிக்க வழியில்லை.
உள்ள பொருளில் பார்வைக்கான விதை இருக்கிறது.

120. எதனுடைய பலத்தினால்
கண்ணின்மையும் குருட்டுத்தன்மையும் நீங்கி
பார்வை ஏற்படுகிறதோ...
அதனிடத்தில் எவ்வாறு அஞ்ஞானத்தை
காணமுடியும்?

121. அவன் காண்பானாய் இருப்பதற்கான
வேண்டுதல் அற்றமையால்
தன்னை தானே காணப்படு பொருளாக்கி
அவனால் உணரமுடியவில்லை.

122. யார் யாரை சந்திப்பது?
அந்த பார்வை எவ்வாறு ஏற்படும்?

ஏகத்துவம் உள்பட அனைத்தும்
அவன் வயிற்றில் மறைந்துவிட்டதே!

123. இந்த எல்லா சங்கடங்களையும்
விலக்கித் தள்ளி
அவன் தன் பிரகாசக் கதவை
திறந்தான்.

124. கணக்கிலடங்கா சிருஷ்டியும் திருஷ்டியும்
ஒன்றன்பின் ஒன்றாய் எழுந்தன.
ஆனாலும் எல்லாவற்றிற்கும் அறிவுமாத்திரமான
உள்ள பொருளே
ஆதாரமும் பொருளும்.

125. உள்ள பொருள் என்னும் ஆதாரம்
தன் தரிசன சித்தியின் பெருஞ்செல்வத்தால்
மதங்கொண்டு
ஒருமுறை இக்கண்ணாடியில் பார்த்த தன்னை
மறுமுறை அதே ஆபரணங்களோடு பார்ப்பது
புதுமையல்ல என்று பார்ப்பதில்லை.

126. அவன் தன் அளப்பரிய உதாரத்தினால்
இப்பார்வைக்கு மிக நேர்த்தியான
புதுமையான ஆடைகள் என்னும் உலகப்பொருட்களை
ஒவ்வொரு கனமும் அணியத் தருகிறான்.

127. அணிந்த ஆடையை
அழுக்கென உடனடியாய் துறந்து
பார்வை அடுத்த கணத்திற்கு
புதுமையான வடிவமைப்பை நாடுகிறது.

128. அதேபோல் ஒவ்வொரு கனமும்
உள்ள பொருளும் புதிய ஆபரணங்கள் என்னும்
ஞானத்தை அணிந்து
அவைகளை அறிந்த வண்ணம் இருக்கிறது.

129. அந்தப் பரமாத்ம பதியில்
தன் தனிமையான சந்தோஷத்தை உணரப்
பிரியப்படாமல்
அவன் இப்பரந்த உலகமாக மாற
கௌபீனம் தரித்தான்.

130. இந்த சர்வஞ்ஞத்துவத்தை...
அவனது ஞானமாத்ர முகத்தில் காண முடிந்தது.
இதை நீங்கள்
வேறு எந்த வீட்டிலும் பார்க்க முடியாது.

131. ஞானத்திற்கும் அஞ்ஞானத்திற்கும் இடையிலான
சந்திப்பை காட்டும் இந்தப் பார்வை
தன்னையே
பார்க்கப்படும் பொருட்களாய் மாறி சந்திக்கிறது.

132. அவன் தன்னையே காண்பானாக்கி
அந்த அழகிய பார்க்கப்படும் பொருட்களை பார்த்து
மகிழ்ந்து
தன்னை அப்பொருள்களைக் கொண்டே
பார்வையால் நிரப்பிக் கொள்கிறான்.

133. இந்த கொடுக்கல் வாங்கல் விவகாரங்கள் எல்லாம்
நடந்தேறிக் கொண்டிருக்கும்போதும்
ஏகத்துவத்தின் இணைப்பு எப்போதும்
துண்டாவதில்லை. எவ்வாறு முகத்தின் ஏகத்துவம்
கண்ணாடி பிரதிபலிப்பில் துண்டாவதில்லையோ
அவ்வாறே.

134. நல்ல ஜாதிக் குதிரை நிற்கும்போதே தூங்கும்.
விழித்தாலும் அதன் நிலைப்பாடு மாறாது.
இவ்வகையில் இந்த கொடுக்கல் வாங்கல் விவகாரம்
நடக்கிறது.

135. நீர்... சிறு நீரலைகளின் வடிவில்
விளையாடி மகிழ்வதுபோல்...

உள்ள பொருளும் தன்னுடைய உள்ள நிலையில்
விளையாடி மகிழ்கிறது.

136. நெருப்பு தன்னையே கோர்த்து
ஜ்வாலைகளில் மாலைகளால் அலங்கரித்துக்
கொண்டால்...
அதனிடம் வேற்றுமை என்னும்
குழி விழுந்துவிடுமா?

137. சூரியன் தன் கதிர் குடும்பத்தினரால்
சூழப்பட்டு இருந்தால்...
அந்தச் சூரியனை
வேறு எனலாமா?

138. நிலவு ஏராளமான நிலவொளியில்
போர்த்தப்பட்டு இருப்பதால்...
அதனுடைய தனித்தன்மை
பாதிக்கப்படுமா?

139. தாமரை மலரும்போது
ஆயிரம் இதழ்களாக மலர்வதால்
வேறு ஒரு தாமரையாகிவிடுமா?

140. ராஜா சஹஸ்ரார்ஜுனன்
ஆயிரம் கரங்கள் கொண்டிருப்பதால்
அவன் ஆயிரமும் ஒன்றுமாய்
அறியப்படுவானா?

141. தறியில் கொத்தாய்
கணக்கிலடங்கா நூலிழைகள் இருந்தாலும்
அவை நூலிழையைத் தவிர வேறு இல்லையே!

142. வாசகத்தின் வீட்டில்
கோடிக்கணக்கான வார்த்தைகள் கூடட்டுமே!
அவை வாசகத்தை தவிர வேறு இல்லையே!

143. காணப்படும் பொருட்கள் என்ற வடிவில் துளிர்களும்,
கணக்கிலடங்கா பார்வை என்னும் அலைகளும்,

காண்பானின் (உள்ள பொருளின்)
பார்க்கும் தன்மையினாலேயே உருவாகின.

144. மண்டை வெல்லத்தை
சிறு விற்பனைக்காக
சிறு துகள் வெல்லமாக உடைத்தால்
அதுவும் வெல்லமாகத்தான் இருக்கும்.

145. அதுபோல் அவன்...
காண்பானாகவோ அல்லது காணப்படும்
பொருட்களாகவோ தன்னை விரிப்பதால்
அவன் ஏகன் என்பதால் வேற்றுமை என்ற பேச்சுக்கே
இடமில்லை.

146. அவன் முழு உலகையே
நிரப்பி இருந்தாலும்
அவனது ஒருமைக்கு இருமை என்னும்
சிறு கீறலும் ஏற்படவில்லை.

147. பல வண்ணங்கள் கொண்ட ஆடையிலும்
வெண்மையான ஆடையிலும்
பல வண்ணங்களின் சாயல் இருக்கிறது
ஆனாலும் அவை நூலிழைகள்தானே!

148. இறுக மூடிய கண் இமைகளை
தளர்த்தாமல்
கண்களால் இந்த சிருஷ்டி முழுவதையும்
பார்க்க முடிவதுபோல்.

149. விதைச் சிறுமி உடையாமலே
மரம் படர்ந்து வளர்வதுபோல்
இந்த இரண்டற்ற (அத்துவித) விரிவு
உபமானிக்கப்படும்.

150. மேலும் தன்னை பார்க்கக்கூடாது என்ற பிரியத்தால்
அவன் நிரம்பியபோது...
தன் உடம்பு என்னும்
மஞ்சத்திலேயே ஓய்ந்தான்.

151. கண் இமைகள்
மூடிக்கொள்ளும்போது...
பார்வை
தனக்குள்ளேயே நுழைகிறது.

152. நிலவு எழுவதற்கு முன்
அசைவில்லாத தன்னிலையில் நிறைந்து நிற்கும்
கடலைப் போல...
ஆமை தன் கால்களை
தன் உள் இழுத்துக் கொள்வதைப் போல...

153. அல்லது அமாவாசை தினத்தன்று
நிலவு தன் பதினேழாம் கலைக்குள்
தானாகவே பிரவேசிப்பது போல...

154. அப்படியே காண்பானும்...
காணப்பட்ட பொருட்களை வென்று,
வென்றான் என்று வாயசைப்பதற்குள்
தன்னிலையில் ஓய்கிறான்.

155. இந்த மொத்த நிகழ்வும் சகஜமாக இருக்கிறது
பிறகு யார் யாரைப் பார்ப்பது?
எதையும் பார்க்காதிருக்கும் தன்மையே
அவனது ஸ்வரூப நித்திரை.

156. இந்த பார்க்காதிருக்கும் தன்மை கைவிடப்பட்டு,
அதற்கு பதிலாக பார்க்கப் பிரியங்கொண்டால்,
தன்னையே அவன் காணப்படும்
பொருட்களாக்கி,
ஏற்கனவே அவன் அங்கு நிற்கிறான்.

157. அனாதி காலமாய்
அவனே காண்பானும் காணப்படும் பொருட்களும்
எவராலும் இங்கு
புதிதாய் உருவாக்கப்பட என்ன இருக்கிறது?

158. ஆகாசத்திற்கும் ககணத்திற்கும்
காற்றிற்கும் சலனத்திற்கும்

நெருப்பிற்கும் சூட்டிற்கும்
சம்பந்தம் செய்து தர வேண்டுமா?

159. அவன் பிரபஞ்சமாய் பிரகாசிக்கும்போது
தன் முன் அதை அவன் பார்க்கிறான்.
அது இங்கு இல்லாதபோது
அதன் இல்லாமையை பார்க்கிறான்.

160. இந்த மொத்த பிரபஞ்சத்தின்
இருப்பும் இல்லாமையும்
ஒன்றாய் மூழ்கிப்போனால்...
அந்த நிலைமையும் பார்ப்பவன் அவனேதான்!

161. கற்பூரத்திற்கு நிலவொளி போன்ற வெண்மை சகஜம்.
அதற்கு யாரும் வெண்பூச்சு பூசவில்லை.
அப்படியே உள்ள பொருளின் பார்வை...
கேவல ஞான மாத்திரமாய் சகஜமாய் இருக்கிறது.

162. மேலும் என்ன சொல்ல
உள்ள பொருள் எந்த நிலையில் இருந்தாலும்
அவன் (அது) எப்போதும்
தன்னைத் தானே பார்த்துக் கொண்டிருக்கிறான்.

163. எவ்வாறு ஒருவன்
பல்வேறு நாடுகளை
தன் இஷ்டப்படி மனோரதஞ் செய்து
கம்பீரமாக அதனுள் உலவி வருகிறானோ அவ்வாறே.

164. அல்லது கண் இமைகளை மூடி,
விரல்களைக் கொண்டு பலமாக அழுத்தினால்,
ஒரு பிரகாசமான ஒளி உள்ளேயே எவ்வாறு
ஸ்பூரிக்குமோ... அவ்வாறே
இதில் ஒன்றும் அதிசயம் இல்லை.

165. ஆகவே அறிவு மாத்திரமான அந்த ஏக இருப்பில்
(உள்ள பொருளில்)
அவன் தன்மேலேயே

அரோபிக்கிறான் என்ற குற்றச்சாட்டிற்கு
எந்த காரணமும் இல்லை.

166. ரத்தினத்திற்கு பிரகாசத் திரையை
யார் கற்பித்தது?
பொன் தன்னையே
பொன் ஆபரணத்தினால் அலங்கரித்துக்
கொள்ளுமா?

167. சந்தனக் கட்டை தனக்கே சந்தனத்தை பூசிக்
கொள்ளுமா?
கதா (அமிர்தம்) தன்னையே தனக்கு பறிமாறிக்
கொள்ளுமா?
வெல்லம் எப்போதாவது தன்னை
சுவைத்திருக்கிறதா?

168. கற்பூரம் வெண்பூச்சு பூசிக்கொள்ள வேண்டுமா?
நெருப்புக்க அதன் சுடும் தன்மையைத் தர
அதனை சூடு படுத்த வேண்டுமா?

169. தன்னையே பற்றிப் படரும் ஒரு கொடி
சகஜமாக தான் தனக்கே
வெளியிலிருந்து உதவி கோராமல்
பற்று பொருளாவதில்லையா?

170. மற்றொரு ஒளியின் துணையில்லாமல்
விளக்கொளி சுடர்வதில்லையா?
அதுபோலவே அந்த சைதன்யமும் (உள்ள
பொருளும்)
தன் அறிவொளியையே ஸ்பூரிக்கிறது.

171. இப்படி தன்னை அறிவதற்கு
எந்த பிரயத்தனமுமில்லாமல்
உள்ள பொருள் இடைமுறிவில்லாமல்
சகஜமாக தன்னை அறிகிறது.

172. பிரகாசிக்கும் நிலவுக்கு

எவ்வாறு இருளையும் வெள்ளியையும் வேறு
பிரிக்காமல் தன் பிரகாசமே அனுபவமோ
அப்படியே உள்ள பொருளுக்கு பார்வையும்
பார்வையின்மையும்

173. இது நடக்க வேண்டாம் (காண்பான் காட்சி) என்று
அவன் விரும்பும்போது
அது அவ்வாறே நடந்து விடுகிறது.
அப்போது அவன் ஸ்வபாவம்
சகஜமாக வந்துவிடுகிறது.

174. காண்பானுக்கும் காணப்படும் பொருளுக்கும்
ஒரு நிரந்தரமில்லா நிலை அங்கே ஏற்படுகிறது
அதுவும்கூட இந்த இருவரும் பரஸ்பர ஒருவருக்குள்
ஒருவர்
பிரவேசிக்கும்போது மறைந்து விடுகிறது.

175. அங்கே காண்பான் காட்சியில் கலந்து விடுகிறான்.
காட்சி காண்பானில் கரைகிறது.
இவ்வாறு இருவரும் அவர்கள் உருவாகுமுன் இருந்த
நிலையில் இருக்கிறார்கள்
அதுவே அவர்களின் ஸ்வரூபம்.

176. எங்கேனும் எப்போதும் இருவரும் நெருங்கி
ஒருவரை ஒருவர் ஆரத்தழுவிக் கொள்ளும்போது
அவர்களின் காண்பான் காட்சித் தன்மை
அபாவமாகிவிடுகிறது.

177. கற்பூரம் அக்னி பிரவேசம் செய்ததா?
அல்லது அக்னி கற்பூரத்தை தீயிட்டதா?
அவர்களின் அபாவம் இப்படி அல்ல.

178. ஒன்றிலிருந்து ஒன்றைக் கழித்தால் மிஞ்சுவது பூஜ்யம்
ஒரு வட்டத்தினால் குறிப்பிடப்படுகிறது.
பிறகு அந்த வட்டமும் அழிக்கப்படுகிறது
இவ்வாறே காண்பான் காட்சி தன்மை அபாவம்
ஏற்படுகிறது.

179. நீரில் தெரியும் தன் பிரதிபிம்பத்துடன்
மற்போர் புரிய முயற்சித்தால்...
பிரதிபிம்பமும் மற்போரும்
ஒன்றாய் மறைந்துவிடும்.

180. அவ்வாறே பார்வை (உள்ள பொருள்) முகம் சுளித்தால்
காண்பானும் காட்சியும் சந்தித்து
இருவரும் தங்கள் இருமையை
இழந்து விடுகிறார்கள்.

181. கிழக்கு கடலும் மேற்கு கடலும் சந்திக்காதவரை
தனித்தனி கடலாகவே இருக்கும்.
அவை இணையும்போது
அது நீர்தானே!

182. கணக்கிலடங்கா திரிபுடிகள் (காண்பான், காட்சி,
காணப்படு பொருள்)
சகஜமாகவும் இடைமுறிவில்லாமலும் வெளிவந்து
கொண்டேயிருக்கிறது.
இவையெல்லாவற்றையும் பிரதி க்ஷணமும்
ஒவ்வொன்றாய்
ஆராய்ந்து எண்ணிக் கொண்டிருக்க வேண்டுமா?

183. உள்ள பொருள் விசேஷத்தை (காண்பான், காட்சி)
விழுங்கவுமில்லை
நிர்விசேஷத்தை வாந்தி எடுக்கவுமில்லை
ஆனால் அது சகஜமாக
தன் கண் இமைகளை மூடித் திறக்கிறது.

184. அவனது கண் இமைகள் ஒன்றை ஒன்று சந்தித்துக்
கொள்ளும்போது
காண்பான் காட்சி செழுமையாய் பெருகுகிறது.
ஆனால் மெதுவாக சிறிது திறக்கும்போதே
இந்த வைபவம் மறைந்து விடுகிறது. என்னஆச்சரியம்

185. காண்பானும் காட்சியும்
ஒருவரை ஒருவர் ஆகர்ஷித்து
விழுங்கிக் கொள்ளும்போது
இடைநிலையாய் ஒரு யோக பூமிகை உருவாகிறது.

யோகபூமிகை -- ஸ்புரணமாத்ர அனுபவம்,
"இருக்கிறேன்" என்ற கலையை
சுத்தமாக அனுபவிப்பது

186. எழுந்த ஒரு சிறு அலை அடங்கிவிட்டது
அடுத்த சிறு அலை எழவில்லை.
இந்த இடைநிலையில் இருக்கும்
நீரின் நிலைபோல் அது.

187. அல்லது நம் தூக்கம்
முடிந்துவிட்டது.
முழு விழிப்பு
இன்னும் நன்றாக ஏற்படவில்லை.

188. சரியாக புரிந்து கொள்ளப்பட்டால் ஒரு பொருளில்
பதிந்திருந்த பார்வையை எடுத்தாகிவிட்டது
அடுத்த பொருளை பார்வை இன்னும் பற்றவில்லை.
அப்போது இருக்கும் பார்வையின் நிலைபோல் இது.

189. இந்த நிலையை
வானம் நன்றாக பிரதிபலிக்கிறது.
நாள் முடிந்துவிட்டது.
ஆனால் இரவு இன்னும் நுழையவில்லை.

190. இழுத்த மூச்சு ஜீரணிக்கப்பட்டுவிட்டது.
புதிய மூச்சு உள்ளிழுக்கப்படவில்லை.
இதனால் பாதிக்கப்படாத
அந்த அர்த்தம் பொதிந்த நிலை அது.

191. அல்லது எல்லா புலன்களும்
அதனதன் புல விஷயங்களை
ஒரே நேரத்தில் ஆனந்திக்கும்
நிலை போல் அது.

192. இந்த நிலையை உள்ள பொருளின் உயர்ந்த நிலை எனலாம்.
இங்கே பார்வையும், பார்வையின்மையும்,
எதிர் கொள்ளப்படவில்லை.

193. என்ன முட்டாள் பைத்தியக்காரத்தனம்!
இதை உயர்ந்த நிலை என்று கூறுவது
ஒரு கண்ணாடி தன்னிடத்தில்
தன்னுடைய சுத்தமான பரப்பை காணும் என்றோ
காணாது என்றோ
கூறுவதில் அர்த்தமில்லாதது போலாகும் இது.

194. கண்ணாடி முன் ஒரு முகம் இருக்கிறது
ஒரு முகம் பிரதிபிம்பமாக பின்புறம் இருக்கிறது
ஆனால் முகம் எப்போதும் தான் இருக்கும்
தன்னிடத்திலேயே.
கண்ணாடியில்லாமல் இருக்கும்போது
இவையெல்லாம் இருக்குமா?

195. சூரியன், திசையெங்கும் பார்க்கும்
ஆனால் அது தான் உதிப்பதையோ மறைவதையோ பார்த்து
அதுவே ரசிக்க முடியுமா?

196. (பழ) ரசம் தன்னையே அருந்துமா?
அதற்காக பிறரிடமிருந்து ஒளிந்து கொள்ளுமா?
இவ்விரண்டும் அங்கே இல்லை
ரசம் தன் ரசத்தன்மையுடன் எப்போதும்
இருக்கிறது.

197. அவனுக்கு பார்ப்பதும், பார்க்காமல் இருப்பதும்,
தெரியாது.
இந்த குணங்களுக்கு அதீதமாக அவனே
பார்வையாகவே இருக்கிறான்.
இவ்விரு நிகழ்வுகளுக்கும்
அவனே சுயகாரணமாய் இருக்கிறான்.

198. அவனே பார்வை என்பதால்
எப்படி தன்னையே அவன் அறிய முடியும்?
ஆக அவன் ஸ்வபாவமாகவே
தன்னை அறியாத அறிவு.

199. எப்படி தன்னை அறியாத அறிவு
தன்னையே பார்க்கும்?
பார்க்கப்படும் பொருட்களாக தன்னை
அவன் பார்க்கிறான்.

200. பார்க்கப்படும் பொருட்களாய் தன்னை பார்ப்பதும்
தன்னை அறியாத அறிவும் பரஸ்பரம் ஒன்றாக
அவனிடம் (உள்ள பொருளில்) வாசம் செய்கிறது.
இவர்கள் தங்களை ஆரத்தழுவி
ஒருவர் மற்றவரை அழித்தவராயினர்.

201. அவனே (உள்ள பொருள்) அறிவாய் இருக்கும்போது
அவனை எப்படி அறியாமல் இருக்கிறான் என்று
கூறமுடியும்?
ஆக அவன் பார்வை பார்வையின்மை
போன்றவைகளால் தொட முடியாமல் இருக்கிறான்.

202. இவ்வாறு உள்ள பொருள்
பார்வை பார்வையின்மை இவற்றிலிருந்து மறைந்து
இருக்கிறது.
பிறகு அவன் பார்த்தால்
யார் எதைப் பார்த்தது?

203. காண்பான் உலகப் பொருட்களை காண்பதால்
அவன் பொருட்களை பார்க்கிறான்
என்றுகூறமுடியுமா?
ஆனால் அவன் பொருட்கள் இருப்பதால்
அதை பார்ப்பதில்லை.

204. காண்பான் நிச்சயமாய் தோற்றத்தை பார்க்கிறான்.
ஆனால் அந்த தோற்றம், உண்மையில் காண்பானே!
எவ்வாறு தனக்கு சுதந்திரமான இருப்பில்லாத ஒன்று
பார்க்கப்படும்.
தோற்றம் என்று கூறப்படும்?

205. முகம் கண்ணாடியில் பிரதிபிம்பமாக
பார்க்கப்பட்டாலும்
முகம் தன் முகத்தன்மையுடன் அதன் சொந்த
இடத்திலேயே இருக்கிறது என்றால்...
பார்க்கப்பட்ட பிரதிபிம்பம் பொய்.
தன்னிடத்திலேயே தானாகவே இருக்கும் முகம்
மட்டுமே மெய்.

206. தூக்கத்தின் கைப்பிடியில் ஒருவன் அகப்பட்டால்
அவன் தன்னையே பல உருவங்களாய் கனவில்
பார்க்கிறான்.
நாம் பார்க்கிறான் என்று கூறுவது அவன் கனவு
காண்பதுபோல்
காண்பான் தன்னையே எல்லாமாக்கி பார்க்கிறான்.

207. சுகமான மஞ்சத்தில் படுத்திருக்கும்
(கனவு காண்பவன்)
அவனை பல்லக்குத் தூக்கிகள் தூக்கி
சொல்வதுபோல்
கனவு கண்டால்...
உண்மையில் அவன் தூக்கிச் செல்லப்பட்டானா?
அல்லது கனவு விளையாட்டை ஆனந்திக்கிறானா?

208. ஒரு தலையில்லா மனிதன்...
தன் தலையில்லா மனைவியிடம்
ஒரு பிச்சைக்காரன் அரியணை ஏறியதை
காண்பித்தால்...
அது உண்மையில் அப்படியா?

209. தூக்கம் முடிந்தவுடன்
அதே படுக்கையில் அவன் இருக்கிறான்.
கனவு கொண்டிருக்கும்போதும்...
அவன் நிலையில் எந்த மாற்றமும் இல்லை.

210. தாகமாயுள்ள ஒருவனின் துயரம்
அவன் எந்த கானல் நீரை கடக்காத போதும்
மாறவில்லை.
கடந்தபோதும்
அவனுக்கு என்ன லாபம்?

211. தன் தனிமையால் சோர்வுற்ற ஒருவன்...
யாருடனாவது தனக்குத் துணை தேவை என்று
தன் நிழலோடு நட்பு பாராட்டித் துணையாக்கினால்
அதனால் என்ன பயன்?

212. அதுபோல் காண்பான்
காணப்படும் பொருட்களாகி
அதை காண்பானுக்கே காட்டினால்...
பார்க்கும் அந்த செயலையும் வீணாக்கிவிட்டான்.

213. காண்பானேதான் காணப்படும் பொருட்கள் என்றால்
அவனுக்கு அவைகளை காண்பிப்பதில் என்ன
லாபம்?
அவனுக்கு காண்பிக்கப்படவில்லை என்றால்
அவன் அவனாகவே அங்கு இல்லையா?

214. முகம் தன்னைத் தானே
கண்ணாடியில் பார்க்காவிட்டால் அது சீரற்று
போய்விடுமா?

கண்ணாடி இல்லாதபோதும்
அது அதனிடமே இருக்கிறது.

215. அதுபோல் மாயை (அஞ்ஞானம்)
உள்ள பொருளை உள்ள பொருளுக்கு காட்டாவிட்டால்
யாருக்கு நஷ்டம்
உள்ள பொருளுக்கா...? மாயைக்கா...?

216. உள்ளபொருள் சுய சுத்தமான பரிபூரண காண்பான்
என்றால்
ஏன் அவன் தன்னையே பார்க்கப்படும் பொருளாக்கி
பார்வைக்குள்ளாக்க
காரணமாக வேண்டும்?

217. உள்ள பொருள் முன்கூறியபடி உள்ளவனானால்
அவன் காட்டப்படுகிறான் என்பது பொருத்தமில்லாதது.
அதனால் பிரயோஜனமும் இல்லை.
புணருதாரணம் பெறுகிறான் என்பதும் கூட
பிரயோஜனமில்லை, பொருந்தாது.

218. ஒரு கயிறு பாம்பாக பொய் தோற்றமாக
தெரியும்போதும்
கயிறு மட்டுமே இருக்கிறது.
அதுபோல பல வகையான பொருட்கள் தெரியும்
போதும் காண்பான் மட்டுமே இருக்கிறான்.

219. முகம் தன்னிடத்திலும்
கண்ணாடியில் பிரதிபிம்பமாகவும் தெரிவதில் தவறு
இல்லை.
ஆனாலும் உண்மையான முகம் தன்னிடத்திலே
இருக்கிறது.
கண்ணாடியில் இல்லை.

220. இவ்வகையில் இந்த இரண்டில்
காண்பானே உண்மை
உலகப் பொருட்கள் காட்சியாக காணப்பட்டாலும்

(கண்ணாடியில் பிரதி பிம்பம் போல்)
அவை பொய்யே.

221. ஒருவேளை ஒரு பொருள் பொய்யாயிருந்தாலும்...
நீங்கள் அது புலனாகிறது என்று கூறுவதில் இருந்தே,
அது தன்னிருப்பை
ஊர்ஜிதப்படுத்துகிறது.

222. யாரோ ஒருவன் தன் பார்வையின் மூலம்
மற்றொரு பொருளைப் பார்த்தால் காண்பான்
ஆகிறான்.
அப்பொழுது அவன்
ஒரு பொருளைப் பார்த்தான் என்று கொள்ளலாம்.

223. ஆனால் உள்ள பொருளின் விஷயத்திலோ
அவன் பார்த்தாலும் பார்க்காவிட்டாலும்
அவன் தனியனாய் இருந்தாலும்
அனேகமானானாலும
அவன் தன்னைத் தவிர வேறு எதையும்
பார்ப்பதில்லை.

224. கண்ணாடி...
முகத்திற்கு அதன் பிரதிபிம்பத்தைத் தவிர
வேறு எதை காட்ட முடியும்?
ஒருவேளை பிரதி பிம்பத்தை காட்டாவிட்டாலும்...
முகம் அதனிடத்தில் அதாகவேதான் இருக்கும்.

225. அதுபோலவே அவன் காட்டப்படாவிட்டாலும்...
அவன் தன்னிடத்திலேயே இருக்கிறான்.
அவன் காட்டப்பட்டாலும்...
அவனிடத்திலேயே அவன் உள்ளபடி இருக்கிறான்.

226. தூக்கத்தில் ஒருவன் இல்லை என்றாலும்
விழிப்பில் அவன் உணரப்பட்டாலும்
அவன் அவனேதான்!
அப்படியே இது.

227. ஹே பிரபு
நீங்களே ராஜன் என்று
ஒரு அரசனுக்கு தன் ராஜ்யத்துவம்
நினைவூட்டப்பட்டாலும்
அவன் ராஜன்தான்

228. அவன் அவ்வாறு தன் ராஜ்யத்துவத்தை
நினைவூட்டப்படாவிட்டாலும்
அவனது மாட்சிமை
நீங்கி விடுமா?

229. அதுபோலவே உள்ள பொருளும்...
காட்டப்பட்டாலோ, காட்டப்படாவிட்டாலோ,
அவனுக்கு ஏற்றமும் இல்லை, குறைவும் இல்லை,
ஆனால் அவன் சுய சித்தமாக உள்ளபடி உள்ளான்.
உள்ள பொருளை தவிர வேறு இங்கு இல்லை.

230. பிறகு எதற்காக இந்த பைத்தியக்கார நிமித்தம்
அவன் தன்னையே காட்ட வேண்டும்?
பார்ப்பதற்கு யாரும் இல்லாத போது
யார் கண்ணாடியை பார்ப்பது?

231. ஏற்றப்பட்ட விளக்கு ஏற்றியவனை உருவாக்கியதா?
ஏற்றியவனால் ஏற்றப்பட்ட விளக்கு ஜீவிக்கிறதா?
உண்மையில் உள்ள பொருளே
காரணங்களுக்கு எல்லாம் ஆதிகாரணம்.

232. ஜ்வாலை
நெருப்பை ஏற்றுகிறது
ஆனால் அதை
நெருப்பிலிருந்து வேறாக கருதமுடியுமா?

233. நாம் எந்த நிமித்த காரணத்தை கூறினாலும்
அது ஒளிர்விக்கப்படுகிறது அவன் காட்டுவதாலேயே
அவனுடைய ஸ்வபாவமான இருப்பாகவே
அவன்.. அவன் பார்க்கும் பொருள்களில் எல்லாம்
விளங்குகிறான்.

234. ஆகையால் சுயம்பிரகாசமான
அவனே...
தன்னை தானே காண்பதற்கான நிமித்தம்.
வேறு ஏதும் நிமித்தமில்லை.

235. பார்க்கப்படுபவை எல்லாம்
அவனுடையே விரிவே.
அதைத் தவிர வேறொன்றுமில்லை இங்கே.

236. பொன் ஆபரணங்களிலும்
பொற்காசுகளிலும்
பொன்மை மட்டுமே ஸ்பூரிக்கிறது.
ஏனென்றால் அதைத் தவிர வேறொன்றும் இல்லை.

237. நீரிலும் சிறுநீரலையிலும்
நீரே உள்ளது.
அதைத் தவிர வேறு எதுவும் இல்லை,
இருக்கவும் முடியாது.

238. அதன் வாசத்தை நுகர்ந்தாலும்,
கைகளால் தொட்டு
கண்களால் பார்த்து
எவ்விதத்தாலும் இதை இடைவிடாது
அனுபவித்தாலும்....

239. அது கற்பூரமே!
கற்பூரத்தை தவிர வேறு இல்லை.
அதுபோல் எவ்விதத்தால் அவன் (உள்ள பொருள்)
தன்னை அனுபவித்தாலும்
உள்ள பொருள் மட்டுமே இருக்கிறது.

240. காணப்படுபொருள்களாக தோன்றினாலும்...
அல்லது காண்பானாகி பார்த்தாலும்...
அவனைத் தவிர
வேறெதுவும் இங்கு இல்லை.

241. கங்கை கங்கையாய் ஓடினாலும்...
அல்லது சமுத்திரத்தில் கலந்தாலும்...

நீரின் பார்வையில் இருந்து
இந்த இரு வடிவத்திலும் வேறு பாடில்லை.

242. திரவமாக இருந்தாலோ உறைந்திருந்தாலோ...
பசுவின் நெய் பயனற்ற வேறெதாகவும் மாறவில்லை
அது தன்மையில்
நெய்தன்மையை தவிர வேறெதுவும் இல்லை.

243. ஜ்வாலைகளோ... நெருப்போ...
அவை வேறுவேறாக கருதப்படவில்லை.
அங்கே நெருப்பு மட்டுமே இருக்கிறது.
நெருப்பை தவிர வேறெதுவுமில்லை.

244. அதுபோல காண்போனோ, காட்சியோ,
இந்த இருநிலைகளும்
ஒரு பொருளே கூட அல்ல.
ஆழ்ந்த அவதானத்திலிருந்து அது ஸ்புரணம்
மட்டுமே.

245. ஸ்புரணத்தின் பார்வையிலிருந்து பார்த்ததால்...
ஸ்புரணத்தை தவிர வேறொன்றுமில்லை.
பிறகு எதைப் பார்த்தால்
உள்ள பொருள் காண்பானான்?

246. உலகக் காட்சி ஒன்றும் அவன்
முன்னால் பளீர் என தோற்றமாகவுமில்லை.
அல்லது அவன் அதன் பின்னாலிருந்து
குறுகுறுவென்று பார்க்கவில்லை.
அவன் பார்ப்பது என்பதே ஸ்புரணம்தான்.

247. அது நீரில் சிறு அலைகள் பிறழ்வதுபோல்...
பொன்னை பொன்னால் போர்த்துவதுபோல்...
பார்வை கால் தடுமாறி பார்வை மீதே விழுவதுபோல்...

248. ஸ்ருதி ஸ்ருதியோடு சேர்வதுபோல்...
சுகந்தம் சுகந்தத்தை சந்திப்பதுபோல்...
திருப்தியைக் கொண்டு உணவு சமைத்து
திருப்திக்குப் பரிமாறுவதுபோல்...

249. வெல்லம் வெல்லத்தால் போர்த்தப்பட்டதுபோல்...
மேருவிற்குத் தங்கக் கவசம் சார்த்தினாற்போல்...
நெருப்பு
ஜ்வாலைகளை அணிந்து கொண்டதுபோல்...

250. மேலும் என்ன கூறுவது
வானம் வானப்படுக்கையில் உறங்கச்சென்றாற்போல்..
பிறகு யார் உறங்கியது
யார் விழித்தது?

251. அதுபோலவே அவன் பார்ப்பது
எதையும் பார்க்காததுபோல்...
அவன் பார்க்காதது
பார்ப்பதுபோல்.

252. இங்கு வார்த்தைகள் சகித்துக்கொள்ளப்படுவதில்லை.
அறிவுக்கு தங்கும் வசதி செய்துரப்படவில்லை.
அனுபவம் கர்வத்தோடு
பவனிகொள்ள அனுமதியில்லை.

253. ஆகவே அவன்
தன்னைப் பார்ப்பது
யாரும்
எதையும் பார்க்காதது போல்.

254. மேலும் என்ன
இருக்கிறது (உள்ள பொருள்) இருக்கிறதாலேயே
ஒளிர்கிறது
அவன் எழுப்புவதற்கு அவசியமின்றி
எப்போதும் விழித்தே இருக்கிறான்.

255. தன் சுய தரிசனத்திற்காக
அவன் தன்னை தானே
இந்த எல்லா வித்யாசமான பாத்திரங்களாக
விரிகிறான்.
ஆனாலும் அவனுடைய உள்ள நிலை இவைகளால்
பாதிக்காமல் உள்ளபடி உள்ளது.

256. அவன் கண்ணாடியில் பார்க்காமல் இருந்தாலும்
அதுவும் அவன் பார்வைதான்.
பார்த்தாலும்
அது பார்வையும் இல்லை, பார்வையின்மையும்
இல்லை.

257. அவன் விரிந்தாலும்
தன் ஒருமையை இழப்பதில்லை.
அதேபோல் சுருங்கினாலும்
அவன் இருப்பு தொடர்கிறது.

258. சூரியனால் இருளைப் பிடிக்கவே முடியவில்லை.
பிறகு எதற்கு அவன்
ஒளியை பற்றி
காது கொடுக்க வேண்டும்.

259. இருளோ... ஒளியோ...
பிரகாசிக்கும் மார்த்தாண்டன் எவ்விடத்திலும்
தான்தானாய்
தனியனாய் ரமிக்கிறான்.

260. அதுபோலவே உள்ள பொருளும்
தன்னிச்சைப்படி
தன்னை எவ்விதமாக வைத்து விளையாடினாலும்
தன்னை இழப்பதே இல்லை.

261. ஆயிரக்கணக்கான தரங்கங்கள்
அதனுள் எழுந்து அடங்குவதால்
கடலின் எல்லை எப்பொழுதும் மீறப்படவில்லை.
அதன் நீர்மையிலும் சிறு மாற்றமும் இல்லை.

262. சூரியனிடமிருந்து கதிர்கள் வெளிப்படுகின்றன
ஆனால் பிம்பத்திலிருந்து வெளி செல்கின்றபடியால்
சூரியன்
ஞானசம்பத்தான உள்ள பொருளுக்கு உபமானமாகாது

263. பருத்தியைஉபமானமாக்க முடியாது.
அது வெடிக்காவிட்டால்...
உலகிற்கு ஆடை அகப்படாது.

264. பொன்னோ தன் உடலின் அங்கங்களை
பின்னப்டுத்திக் கொள்ளாமல்
ஆபரணங்களாய் மாறுவதில்லை.

265. காற்றினால்...
ஒரு திசையிலிருந்து மற்றொரு திசைக்கு
இடையிலிருக்கும் தடையை கடக்காமல்
செல்லமுடியவில்லை.
ஆகையால் அதையும் உபமானமாக்க முடியாது.

266. சுருக்கமாக...
இந்த உள்ள பொருளின் விளையாட்டை
எதனுடனும் ஒப்பிட முடியவில்லை.
அவனை அவனுடனேதான் ஒப்பிட முடியும்.

267. அவன் தன் சுயப்பிரகாசத்தை
இடைவிடாமல் வாய் கொள்ள கொள்ள
ஆவலாதியாய் புசிக்கிறான்.
உணவும் குறைந்தபாடில்லை, வயிறும் நிறைந்த
பாடில்லை.

268. இவ்வாறு தன்நிகரற்ற உள்ள பொருள்
தன் லீலாவிலாசமான
ராஜ்ஜியத்தை
ஆண்டு வருகிறது.

269. இதை அஞ்ஞானம் என்றால்
எல்லா நியாயங்களும் காட்டுக்குச் சென்றுவிட்டது
என்றுதான் அர்த்தம்.
இன்னும் யாராவது அஞ்ஞானம் இருக்கிறது என்றால்
பொறுத்துக் கொள்ள வேண்டுமா?

270. பிரகாசிப்பதை அஞ்ஞானமென்றால்...
கண்களில் பூசிக்கொள்வதால்
புதைந்திருக்கும் நிதியை காட்டிக் கொடுக்கும்
பொருளை
அஞ்சனம் (மை) என்று அழைப்பது போல்தான்.

271. மின்னும் தேவியின் பொற்சிலையை
காளிகா (கருப்பாயி) என்று கூப்பிடுவதுபோல்...
உள்ள பொருளின் பிரகாசத்தை
அஞ்ஞானம் என்பதும்.

272. வாஸ்தவத்தில் சிவத்திலிருந்து மண்வரை
உள்ள அனைத்து தத்துவங்களும்
உள்ள பொருளின் பிரகாசத்தாலேயே
ஒளிரிவிக்கப்படுகிறது.

273. அவன் பிரகாசத்தாலேயே அறிவு அறிகிறது.
காட்சி மாத்திரமாயிருந்தது காணுதலுக்குள்ளாகிறது.
பிரகாசிக்கும் விளக்கு (சூரியன்)
சுடர்கிறது.

274. இதை (பிரகாசிக்கும் உலகை) அஞ்ஞானம் என்று
எந்தப் பிரகஸ்பதி சுட்டி விரலை நீட்டுகிறானோ...
அவனது செயல்
சூரியனை இருட்டுச்சாக்கில் கட்ட முற்படுவது
போலாகும்.

275. 'அ' என்னும் அக்ஷரத்தை ஞானத்திற்கு முன்
சேர்ப்பதால்
அது சிறப்புச் செய்யப்படுகிறதாக வேண்டுமானல்
இதை எடுத்துக்கொள்ளலாம்.
அபூர்வமாக வார்த்தையின் பொருளை இப்படியும்
கொள்ளலாம்.

(அஞ்ஞானம் – சிறந்த ஞானம்)

276. அரக்கு பெட்டிக்குள் நெருப்பைப் பூட்டி வைப்பதால்
என்ன பிரயோஜனம்?
அது உடனடியாகப் பெட்டிக்கு உள்ளேயும்
வெளியேயும் உள்ள வெளியை ஒன்றாக்கிவிடும்.

277. ஆகவே உலகமாய் ஸ்புரிக்கும்
உள்ள பொருளை அஞ்ஞானமென்பது
வாக்கிந்திரியம்
அர்த்தமில்லாமல் உளறுவதுதான்.

278. ஒரு பசுவைக் கொன்றேன் என்று வார்த்தைகளை
கூறுவதே பாவம்...
அதிலும் பொய் யுரைத்தல் மற்றொரு பாவம்...
அதுபோலவே அஞ்ஞான நாசமும்
எவ்வாறு ஞானி பொய்யுரைப்பான்?

279. அஞ்ஞானம் என்று கூறும்போதே
ஞானமே ஸ்புரிக்கிறது.
ஆகையால் ஒருவன் இதை
ஞானமென்றே அறிய வலியுறுத்தப்படுகிறான்.

280. எது எப்படி வேண்டுமானலும் இருந்து கொள்ளட்டும்
உள்ள பொருளாம் அரசன்
தன்னையே பல்வடிவமாக
தன் பிரகாசத்தாலேயே பார்க்கிறான்.

281. விசார ஒளி கொண்டு தேடினால்...
அதன் (அஞ்ஞானம்) போலி இருப்பு மறைந்துவிடும்
போது அது எவ்வாறு பார்வை கொண்டு
தன்னை இவ்வுலகமாய் பார்க்கும்.

282. ஒருவேளை அஞ்ஞானம்
நானே இவ் அறிவாம் உலகை பிரசவித்தேன்
என்று தன் இருப்புக்கு
கட்டியங்கூறினால்...

283. முக்காலத்திலும் அஞ்ஞானத்திற்கு
இருப்பு இல்லை என்பதை உலகே நிரூபித்திவிடும்.
ஒரு பொருளுக்கும் அதன் தன்மைக்கும் உள்ள
சம்பந்தம் இவையிரண்டில் இல்லை.

284. நீரால் முத்துக்கள் உருவாக்கபடுமேயானால்...
சாம்பலால் விளக்குகள் ஏற்றப்படுமேயானால்...
அறிவாம் தன்மை
அஞ்ஞானமாம் பொருளுக்கு இருக்கும்.

285. நிலவு தாவிப் பற்றும் ஜ்வாலைகளை வெளியிட்டால்...
ஆகாசம் கற்பாறையாய் மாறினால்...
அஞ்ஞானம்
அறிவாம் பிரகாசத்தை வெளிவிடலாம்.

286. பாற்கடலிலிருந்து கல்குதம் வெளிப்பட்டது
அதிசயம்தான்.
அதற்காக அந்த கொடிய விஷம்
அமுதாகிவிடுமா?

287. ஒரு பேச்சுக்கு வைத்துக் கொள்வோம்.
ஞானத்திலிருந்து அஞ்ஞானம் பிறந்தது என்றால்...
அது பிறந்த உடனே மரித்துவிடும்.
மீண்டும் வேறொன்றும் இருக்காது, ஞானமே மிஞ்சும்.

288. ஆகவே சூரியனே சூரியனைப்போல் மகத்தானவன்.
நிலவை நிலவுடனே ஒப்பிட முடியும்.
விளக்கை விளக்குடனே ஒப்பிட முடியும்.

289. பிரகாசம் பிரகாசமேதான்.
இதில் எந்த சந்தேகமும் இல்லை
இந்த மொத்தப் பிரபஞ்சமும்
உள்ள பொருளின் பிரகாசமே! வேறொன்றுமில்லை.

290. இந்த உலகெல்லாம்
அவனொளியாலேயே ஒளிர்கிறது என்று
ஸ்ருதிகள் தீர்மானிக்கிறது.
அது வெறும் காரணமில்லா கூற்றல்ல.

291. ஆகவே உள்ள பொருளின் பிரகாசம்
உள்ள பொருளையே அலங்கரிக்கிறது.
அதுவும் உள்ள பொருளாலேயே
ஆனந்திக்கப்படுகிறது.

292. இன்னும் இதை புறக்கணித்து யாராவது ஒருவன்
இவ்வாறு உள்ள பொருள் தன்தைத் தானே
தோற்றுவதற்கு... ஒளிர்வித்துக் கொள்வதற்கு
அஞ்ஞானத்தின் உதவியே காரணம் என்றால்...
அது சிறிதளவும் அர்த்தமில்லா வீண்வாதம்.

293. ஆகவே அஞ்ஞானத்தின் வாஸ்தவத்தை
எந்த பிரகாரத்தாலும் தீர்மானிக்க முடியவில்லை.
அஞ்ஞானத்தை எவ்வளவு தேடினாலும்
தேடுதல் வீணாகியது.

294. இருளின் வீட்டை விசாரித்துச் சென்ற தினகரன்...
ராத்திரியின் சிறிதளவைக்கூட
சேகரிக்க முடியவில்லை.

295. தூக்கத்தை தலையணை உறைக்குள்
மூட்டை கட்ட முயன்ற ஒருவனின்
விழிப்பும் கைநழுவியது.
தன்னந்தனியனாய் அங்கேயே அறியா
நிலையுற்றான்.

## Part - VII End

# VIII-ஆம் அதிகாரம்

# ஞானத்தை சாடல்

## Disproving Knowledge

1. எங்களைப் பெறுத்தவரை
எங்களுக்கு அஞ்ஞானத்தின் ஞானம் இல்லை.
ஆண்டானான குருதேவன் எங்களைக்கூட்டிக்
கொண்டு தானாக்கினான்.
நாங்கள் எங்கள் இயலானோம்.

2. இப்பொழு நான் யார் என்று
நாங்கள் விசாரித்தால்...
விசாரமே நாணமுறுகிறது.
நான் என்ன செய்ய!

3. மிகுமாட்சிமை பொருந்திய குருராஜன்
எங்களை ஆனந்தமாய் மகத்தாக்கினான்.
எங்களுக்குள்
எங்களால் அடங்க முடியவில்லை.

4. எங்களின் உள்ளதன்மையில் எந்தக் கூடுதலும்
இல்லை. வாலறிவு மங்கவும் இல்லை,
கைவல்யம் இடை முறிவில்லாமல்
உடம்போடு ஒட்டிக் கொண்டது.

5. எங்களின் நிலையை விவரிக்கும் வாக்கு
இன்னும் வாக்கினால் சிருஷ்டிக்கப்படவில்லை.
எங்களை காணக்கூடிய பார்வை
பார்வையிடமே இல்லை.

6. எங்களை ஆனந்திக்கக்கூடிய பொருளாக்கி
யார் ஆனந்திக்க முடியும்?
எங்களை
எங்களாலேயே பார்க்க முடியவில்லை.

7. எங்ககளை பிரகடனப்படுத்தவோ...
படுத்தாமல் இருக்கவோ முடியவில்லை
இதில் ஒன்றும் ஆச்சர்யமில்லை
இருக்கிறது அறியப்படாமலே இருக்கிறது

8. எப்படி உரைப்பேன்
எங்களை ஸ்ரீ நிவிருத்தி வைத்த ஸ்திதியை!
அதை விவரிக்க
வாக்கிந்திரியத்தின் கையில் கொடுக்க
விரும்பவில்லை.

9. அஞ்ஞானத்திற்கு
அதை எதிர்கொள்ளும் தைரியம் இல்லை.
ஏற்கனவே மரித்தவிட்ட மாயை
எப்படி உயிர்தெழும்?

10. அஞ்ஞானத்தை
காணமுடியாத பிரதேசத்தில்
ஞானத்தை
யார் விளங்கிக் கொள்வார்கள்?

11. இரவில்
விளக்கேற்றுதல் அவசியம்.
ஆனால் சூரியன் இருக்கும்போது
அனாவசிய வீண்வேலை.

12. அஞ்ஞானமில்லையென்றால்...
ஞானமும் இல்லை.
இப்போது நிமிஷ உண்மேஷ இருவருக்கும்
பாதை அடைக்கப்பட்டது.

13. அஞ்ஞானம் ஞானம்
இவ்விருவரும் தங்கள் பொருளாய்ந்ததால்...
இருவரும்
பொருளற்றுப்போனார்கள்

14. தம்பதிகள் பரஸ்பரம் தங்கள் தலையை மாற்றிக் கொள்ள
ஒருவர் தலையை மாற்றொருவர் அரிந்து
அது முடியாமல் போனபோது
இருவரையும் வாழ்க்கை துறந்தது.

15. முதுகுக்குக் பின்னால் ஏற்றப்பட்ட விளக்கு
பிரயோஜனமில்லாததுபோல்...
இருட்டினை பார்த்த பார்வை
வீணானது போல்...

16. ஏதும் அறியா அடர்ந்த இருளை போன்றதை
அஞ்ஞானம் என்ற வார்த்தையால் அழைக்கும்போது
எல்லாவற்றையும் அறியுமதை
அஞ்ஞானமென்பது எவ்வாறு?

17. இவ்வாறே ஞானம் அஞ்ஞானத்தின் இடத்தைப் பிடிக்க
அஞ்ஞானம் ஞானத்தால் வெளியேற்றப்பட்டது.
இரண்டு பயனற்று போனது
ஒருவர் மூலம் ஒருவராக.

18. அறிபவன் எதையும் அறியவில்லை.
எதையும் அறியாதவன் எல்லாவற்றையும் அறிகிறான்.
இப்பொழுது இந்த ஞான அஞ்ஞானத்தோடு
வாழ்வது எப்படி?

19. ஞானம் பகலையும்
அஞ்ஞான இரவையும்
தன் வயிற்றில் ஜீரணித்து
சிதாகாசத்தில் சித்சூரியன் உதித்தான்.

**Part-VIII End**

# IX-ஆம் அதிகாரம்

# பிறர் அறியா சகஜத்தின் சிறப்பு

## Deceription of the State of Liberation in life

1. இப்போது சுகந்தம் நாசியானது...
ஸ்ருதி காதாய் முளைத்தது...
கண்ணாடி கண்களானது...

2. சாமரங்கள் தென்றலாகி வீசியது.
சூடும் தலை செண்ப மலராகி
நறுமணம் நிரப்பியது.

3. நாவு பழரசமானது.
கமலம் சூரியனாய் மலர்ந்தது.
சகோரம் நிலவாகியது.

4. மலர்களெல்லாம் வண்டானது.
இளம்பெண்கள் ஆண்களானார்கள்.
தூங்கியவன் படுக்கையானான்.

5. ஆதிசுத்த பொற் பாளமாம் பார்வை
ரம்மியமான காட்சிகளாம்
பொன் ஆபரணங்களாகியது.

6. மாம்பூக்கள் கோகிலங்களானது
அங்கம் மலயமாருதமனாது
ரசங்கள் நாவானது.

7. போகங்களும் போகிகளும்...
காணும் பொருட்களும் அவற்றை கண்டவர்களும்...
இவை அனைத்தும் உள்ள பொருளாயிற்று.

8. செவ்வந்தி ஆயிரம்இதழ்களாய் விரிந்தாலும்
செவ்வந்தித் தன்மை
வெளியேறிவிடுவதில்லை.

9. அதுபோல் நவ நவமாய் அனுபவங்களின்
மங்கல வாத்திய துந்துபிகள் முழங்கினாலும்
எதுவும் அசல ராஜ்ஜியமாம் அருணாசலத்தில்
கேட்பதில்லை.

10. விஷயப் பொருட்களின்
பெயரை கேட்ட உடனேயே...
விஷயேந்திரியங்களின் கூட்டம்
அவைகளை நோக்கி ஓடுகின்றன.

11. ஓடினாலும்...
ஓடிய விஷயேந்திரிகளின் நிலை...
கண்ணாடியை பார்த்த முகம்போல் ஆனது.

12. பொன்னாலான நாகாபரணம், குண்டலம், கங்கணம்
இம்மூன்றையும் ஒருவன் வாங்கினாலும்
அவன் வாங்கியது பொன்னே!

13. சிறு அலைகளை அள்ள
கைகளை நீட்டினாலும்
கையிலென்னவோ
நீர் மட்டுமே!

14. யாரேனும் கையினால் தொட்டாலும்...
கண்களில் அதன் வடிவத்தைப் பருகினாலும்...
நாவால் அதை ருசித்தாலும்...

15. கற்பூரத்தில் வெளிப்பட மணத்தை தவிர
வேறொன்றுமில்லை.
பலவித வடிவங்களாய் இங்கு ஸ்பூரித்தாலும்
அது உள்ள பொருளில் ஸ்பூரணத்தை தவிர
வேறொன்றுமில்லை.

16. விஷயேந்திரியங்களான காது முதலியன
தம் தம் விஷய நுகர்வுகளான
வார்த்தை முதலியவற்றை
தாவிப் பறற முயலும்போது...

17. அவைகளின் சம்பந்தம் ஏற்பட்ட உடனேயே
பொருட்களும் இந்திரியங்களும்
இரண்டும் இல்லாமல் போகிறது.
சம்ந்தமும் ஏற்படவேயில்லை.

18. கரும்பின் கனுக்கள் அனைத்தும்
அதன் சாற்றில் உள்ளது.
நிலவொளியின் அனைத்து கலைகளும்
நிலவில் உள்ளது.

19. விஷயங்களும் விஷயேந்திரியங்களும் சநதிப்பது...
நிலவொளி நிலவின் மேல் வீழ்வது.
மழை சமுத்திரத்தில் பெய்வது.

20. வாக்கிந்திரியம்
எவ்வளவு தனக்கு இஷ்டமானதை பேசினாலும்...
அந்த மௌன மூர்த்தியின்
சமாதி களைவதில்லை.

21. இந்திரியங்களின்
கணக்கில்லா வியாபாரம் நடந்தாலும்...
அக்கிரியை (சகஜம்)
சிதறுவதில்லை.

22. அசையாம் கரங்களை நீட்டி
பார்வைப்புலன்
பார்க்கப்படும் பொருட்களை ஆரத் தழுவுகிறது.
உண்மையில் எந்த லாபமும் ஏற்படவில்லை.

23. ஆயிரம் கரங்களை நீட்டி
ரவி
ராத்திரியை அணைக்க முயன்றாலும்...
ரவி மட்டுமே மிஞ்சுவதுபோல்.

24. கனவில் கண்டதை
ஆசையோடு அனுபவிக்க...
அவசரமாய் எழுந்தவன்
தன்னையே கண்டான்.

25. இப்படிப்பட்ட நிர்விஷயத்தின் நிலையறிந்த ஞானி
விஷயங்களுக்கு அடிமையாவானா?
அவனிடத்தில் பற்றல், விடல் இவ்விரண்டும் இல்லை
அவன் நிலை யாரறிவார்.

26. நிலவு நிலவொளியை சேகரிக்குமா?
சேகரித்தால் அதற்கு என்ன கிடைக்கும்?
விஷயங்களை அனுபவித்த அவன் நினைவும்
மலட்டு நிலம் போல் விதைபாவாது.

27. பிரத்யாகாராதி அங்கங்களோடு கூடிய யோகிகள்
கூடும் யோகங்கள்...
இப்பாதையின் முன்
வெய்யில் நிலவு போலாகிவிடும்.

28. இங்கு ப்ருவிருத்தி (உந்த கலந்து கொள்ளுதல்)
முடிவுக்கு வருகிறது.
அப்ருவிருத்தி (கலந்து கொள்ளாமை) ஆக்கம்
பெறுகிறது.
இப்போது இருக்கிறதின் (உள்ள பொருளின்)
பிரத்தியட்ச முகத்தன்மையில்
எல்லாம் நடந்தேறுகிறது.

29. துவைத்ததின் முற்றத்திற்கு
அத்துவிதம் தானாக முன் வந்ததால்...
நானாத்துவத்தின் (பேதத்தின்) செலவில்
ஏகத்துவமே புஷ்டியானது.

30. இந்நிலையில் கைவல்யத்தின் ஆனந்தத்தை
மிஞ்சிவிடுகிறது விஷய சேவை.
பக்தியின் வீட்டில்
பக்தனும் பகவானும் ஒன்று கலந்துவிடுகிறார்கள்.

31. வீட்டினுள் நடந்தாலும்
அவன் பாதையாகிறான்.
அதுவே அவன் வீட்டில் அமர்ந்திருந்தால்...
அவன் இலக்காகிறான்.

32. இவ்வகையில் அவன் செய்து
இங்கு அடைய வேண்டியது ஒன்றுமில்லை.
செய்யாமல்
இழக்கப்போவதும் ஒன்றுமில்லை.

33. நினைத்தலுக்கும் இடம் இல்லை,
மறத்தலுக்கும் வழியில்லை,
அந்த அசாதாரணனின் விவகாரங்களில்.

34. அவனது சுயேட்சையே விதி
கட்டற்ற செயலே சமாதி
இப்படி இருக்கிறது.
அந்த மோட்ச ஸ்திதியின் அரியாசனம்.

35. இப்போது கடவுள் பக்தனாகிறான்.
இலக்கே பாதையாகிவிட்டது.
இப்பிரபஞ்சம்
தனிச்சிறு குடிலானது.

36. இப்போது யாரும் கடவுளாகலாம்.
யாரும் பக்தனாகலாம்.
சும்மாயிருப்பவன்
ராஜ்ஜியம் செலுத்துகிறான்.

37. சிவனுக்கே சிவத்திடம் இடமில்லை
பிறகு சக்திக்கு எங்கே இடப்பாகம்?
இவர்கள் குடும்பம்
எப்படி விரிவடையும்?

38. தெய்வங்கள் தங்குவதற்கு இடமில்லாமல்
கோவில்கள் சிதிலமடைந்தன.
காலதேச நதி கூட ஓட முடியாமல்
நிலை கொண்டது.

39. இந்நிலையில் ஸ்வாமி – பக்தன் என்னும் சிரத்தை
துளிர்க்க வேட்கை உண்டாயின்...
ஸ்வாமியேதான்
இவ்விரு வேடங்ளையும் நடிக்க வேண்டும்.

40. பூஜைப் பொருட்களாகவும்
மந்திரங்களாகவும் தியானங்களாகவும்
பிற அனுஷ்டானங்களாகவும்
பகவானைத் தவிர இப்பிரபஞ்சத்தில்
வேறொன்றுமில்லை.

41. இப்பொழுது பகவானேதான்
பகவானை
பகவானைக் கொண்டே
அர்பணம் செய்து பூஜிக்க வேண்டும்.

42. நன்கு வளர்ந்த மரத்தை பாருங்கள்
விஸ்தாரமாய் இருக்கும்...
(அதனது அடி, கிளை, கொப்பு,
இலை, பூக்கள், பழங்கள்)
அது மரத்தை தவிர வேறில்லை.

43. ஒரு சிறுமலையை குடைவரை கோவிலாக
தெய்வங்களும் பரிவாரங்களுமாய் செய்ய
முடியும்போது...
ஏன் பக்தியின் அனைத்து அம்சங்களும்
ஒரே ஏக வஸ்துவாலேயே உருவாக்கப்படககூடாது?

44. ஊமையன் மௌனவிரதம் இருந்தாலோ
இல்லாவிட்டாலோ ஆச்சரியம் ஒன்றுமில்லை.
அவ்வாறே தெய்வத்தன்மையும் இரண்டு விதத்திலும்
பகவானாகவும் பக்தனாகவும்.

45. அன்னத்தால் செய்யப்பட்ட தேவதைக்கு
அதிலிருந்தே சிறிது அன்னத்தை
எடுத்து வைத்து நைவேத்திம் செய்தாற்பேல்...

46. விளக்கின் ஜ்வாலையை
ஒளியாடை உடுத்தாதே என்று
தடை சட்டம் போட்டால்...
ஒளியில்லாமல் இருப்பாளா?

47. நிலவை ஆடை அணியாதே என்று
அவசரச் செய்தி அனுப்பினால்...
ஆடை அணியாமல் திரிவாளா?

48. நெருப்புக்கு அக்னி ஸ்வபாவம்
பிறகு ஏன்
அதை அதற்கு தரலாமா?
தரவேண்டாமா என்னும் ஆலோசனை.

49. ஆகையால் இங்கு வணங்கினால்தான் பக்தி
வணங்காவிட்டால் பக்தி இல்லை என்பது
அவனுக்கு கிடையாது
ஸ்வபாவத்திலேயே அவன் சிவன்.

50. கர்மம் அகர்மம் என்னும் விளக்குகளை
ஊதி அணைத்துவிட்டு...
பக்தியும் விபக்தியும்
சமபந்தி போஜனம் செய்தது.

51. ஆகையால் உபநிஷத்துக்களின் விளக்கங்கள்
நிந்தையாய் பொறுத்துக் கொள்ளப்படுகிறது.
இந்த நிந்தையே
விஸ்தாரமான ஸ்துதிகளாக கருதபட்டது.

52. நிந்தையும் ஸ்துதியும்
மௌனத்தில் கலந்தது.
அவனது மௌன வியாக்கியானமே
சரியான விளக்கத்தை சொல்லாமல் சொல்லியது.

53. எந்த திசையிலோ எவ்விதமாகவோ அவன் நடந்து
சென்றாலும்
சிவனை நோக்கிய யாத்திரையானது.
அவன் சிவ யாத்திரை மேற்கொண்டால்
எங்கும் செல்லாததாகிறது.

54. நடந்தாலும்...
அமர்ந்தாலும்...
ஒன்றாகவே இருக்கிறது! என்னஆச்சர்யம்!

55. எந்த நேரத்திலும்... எந்நிலையிலும்...
கண் தொட்ட பொருளெல்லாம்
சிவமாய் இருக்கிறதே!

56. சிவன் கண்முன்னே நடந்து வந்தாலும்...
எதுவும் நடவாததுபோல் இருக்கிறதே!
பக்தன் பகவான் இருவரும்
ஒரே நிலையில் இருக்கிறார்களே!

57. தானாகவே
கீழே விழுந்த பந்து
மீண்டும் தானாகவே
மேல எழுகிறது.

58. யாராவது ஒருவன்
இந்தப் பந்தின் போக்கை எப்போவதாவது பார்க்க நேர்ந்தால்
அவனால் பிரபுத்தனின் நிலையை
சரளமாக கூறமுடியும.

59. அவனது சகஜமான இந்த பக்தியை
கர்மம் தன்கையால் தொட முடியவில்லை.
ஞானம் தன் தலையை
நுழைக்கவே முடியவில்லை.

60. வளர்ச்சி அதை வளரச் செய்யவில்லை.
தேய்மானம் அதை தேய்த்துவிடவில்லை.
இந்த சகஜ பக்தியின் சுகத்தை
உலக சுகங்களோடு உபமானிக்க முடியவில்லை.

61. மற்றுவமைமில்லாத ஒன்றாம்
இந்த எளிய பக்தியின் வர்மம் இதுவே.
யோகமும் ஞானமும்
ஓய்வெடுக்கும் பூமி இது.

62. ஹரியும் ஹரனும் அங்கம் ஒன்றானாலும்...
நாம ரூபங்களால் வேறு வேறாய்
அடையாளப்படுத்தப்பட்டாலும்...

இப்பொழுது
அதுவும் கரைந்து விட்டதே!

63. ஒருவரயொருவர் ரசித்து ருசித்துக் கொண்டிருந்த
அர்த்த நாரிநடேஸ்வரர்
ஒரேயடியாய் எல்லாவிததிலும்
கிரஹனம் செய்யப்பட்டுவிட்டார்களே!

64. பராவாக்கு...
வாக்குகளல் இதுவரை கூறப்பட்ட
எல்லா அர்த்தங்களையும் மிகுதியாக உண்டுவிட்டு,
மற்ற மூன்று வாக்குகளையும் குடித்துவிட்டு
தனிமையில் உறங்கச் சென்றது.

65. சிவசிவா! ஸமர்த்தா! ஸ்வாமி!
ஆனந்த பூமியை எனக்கு அருளினையே!
இங்கு கொடுப்பதும் வாங்குவதும்
நானேயாக இருக்கின்றேனே!

66. விழித்திருந்தவனை விழிப்பித்தனையே!
தூங்கியவனை தாலாட்டி உறங்கச் செய்தாயே!
என்னை எனக்கே தந்தனையே!
உன்னை உரைப்பது எவ்வாறு?

67. நான் எப்போதும் போல் உன் அடிமையே
ஆனாலும்அன்பின் மிகுதியினால் நீ எனக்கே அடிமை
என்கிறாய்
இப்படி மீண்டும் மீண்டும் கூறுவது
உனக்கே... உனக்கு மட்டுமே பொருந்தும்

68. யாரிடமிருந்து எதுவும் நீ பெறுவதில்லை.
உன்னுடையதை யாருக்கும் கொடுப்பதில்லை.
தன் பெருமை தான் அறியா
உன் போகத்தை யாரறிவார்!

69. குருத்துவத்தில் பெரியதில் பெரியவன்.
லகுத்துவத்தில் சிறியதில் சிறியவன்.

உன்னை சரணடைந்தவரே
உன் குருகுல தன்மை அறிவார்கள்.

70. உன்னுடைய ஏகத்துவத்தை
உன் சிஷ்யர்களோடு பகிர்ந்து கொள்வதால்
அதில் விரிசல் விழுந்து விடுமேயானால்...
சாஸ்திரங்கள் உன்னை குறித்து ஏன் இவ்வளவு
ஆர்ப்பரிக்கிறது?

71. உதாரா! உத்தமா!
நான் நீ என்னும்
இந்த சம்சார உறவை அழித்து
நீயே என் உற்றமும் உறவுமானாய்.

## Part - IX End

# X-ஆம் அதிகாரம்

# கிரந்தப் பரிகாரம்

## Clarification about the Work

1. ஸ்ரீ நிவிருத்தி ராஜனே!
நீவிர் எமக்கு பரமசுகத்தை கையுயர்த்தி உள்ளீர்
நான் மட்டுமே தனித்து
இதை சுவைக்க வேண்டுமா?

2. மகேசன் சூரியனின் கைகளில்
வெளிச்சத்தின் சூத்திரத்தை தந்தான்.
அவனும் இவ்வுலகனைத்தையும்
அதைக் கொண்டு ஒளிர்விக்கிறான்.

3. நிலவுக்கு அமுது வழங்கப்பட்டது
அவளுக்கு மட்டுமா அது?
சமுத்திரம் மேகத்திற்கு தந்தது
தன் சொந்த உபயோகத்திற்காகவா?

4. விளக்கின் ஒளி
முழு வீட்டிற்கும்தானே!
ஆகாயத்தின் பந்தல்
முழு உலகத்திற்கும் தானே!

5. நிலவின் சக்தியால் அல்லவோ
சமுத்திரம் அலைகளாய் பொங்குகிறது.
வசந்தமல்லவோ
மரங்களை கொடையாளியாக்குகிறது.

6. உனது தெய்வீகத்தின் ஊதாரித்தனமல்லவோ
இங்கு ஐஸ்வர்யமாய் கரை புரள்கிறது.
என் வாசகத்தின் சுதந்திரம்
என்னுடையது இல்லையே!

7. பிரபுவின் பிரபாவத்தில் வெளிப்படாமல்
தங்கியிருப்பதை விட்டுவிட்டு

ஏன் இந்த விஸ்தாரமான விளக்கம்
கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும்?

8. நான் கூறியதெல்லாம்
ஏற்கனவே (உள்ளபொருள்)
பிரகடனப்படுத்திக் கொண்டிருப்பதுதானே!

9. சுயம்பிரகாசத்திற்கு
கூறித்தான்
பிரகாசம் வரவேண்டுமா?

10. நான் மௌனமாய் இருந்தாலும்...
ஜனங்கள்
ஜனங்களை பார்க்க மாட்டார்களா?

11. ஜனங்கள் ஜனங்களை பார்க்கும் போது
காண்பானே காணப்படும் தத்துவம்.
இந்த சித்தாந்தம்
யாரும் எதையும் செய்யத் தேவையில்லாதபடி
இருக்கிறதே!

12. சம்வித்தை (உள்ளபொருளை)ப் பற்றி ரகஸ்யம்
இதைத் தவிர வேறொன்றும் இல்லையே!
இப்போது கூறப்படுவற்கு முன்பே
அது ஆதியிலிருந்தே விளங்கி வருகிறதே!

13. இவையெல்லாம் இந்த நூலை பிரஸ்தாபிக்க
பிறகென்ன அவசியம் என்ற கேள்விக்கு
இட்டுச் சென்றால்
இந்த சித்தானுவாதத்தின் மேல் (உள்ள பொருளின்)
என்கிருக்கும் காதலினாலேயே செய்திருக்கிறேன்.

14. ஒருவனுக்கு பிரியமான பொருள் மாறாதிருந்தாலும்
ஒவ்வொரு முறை சுவைக்கும் போதும்
அதே ருசி.
ஆனால் போகிக்கோ புதுப்புது ருசி
நான் அனுவாத சித்தத்தை (உள்ள பொருளை)
மறுபடியும்

சுவைப்பதின் நியாயம் இதுவே.

15. ஆகவே நான்
எந்த ரகஸ்யத்தையும்
வெளிப்படுத்தவில்லை.
அது சுயம் பிரகாசம்.

16. பூரண அகந்தையால் (நான் என்னும் தன்மையில்)
சூழப்பட்டோம்.
எல்லாவற்றையும் வியாபித்துள்ளோம்.
எங்களை யாரிடமிருந்தும் மறைக்கவும்
எவருக்கும் பிரகடனப்படுத்தவும் எப்படி முடியும்?

17. எங்களை எங்களுக்கே
எப்படி நிரூபணம் செய்து கொள்ள முடியும்?
நான் சும்மா இருப்பதால்
யாருக்கு என்ன நஷ்டம்?

18. ஆகையால் என் வைகாரி
மௌனத்திற்கே மௌனமானது.
நீர் பரப்பில்
மீன் வரைந்தாற்போலானது.

19. ஆக தசஉபநிஷத்துகளும்
இதைத் தாண்டி ஒரு அடி எடுத்து வைக்கவில்லை.
இதைப்பார்த்த ஞானமும்
இங்கேயே தன்னை மூழ்கிக்கொண்டது.

20. ஞானதேவன் கூறுகிறேன்
இந்த அனுபவ அமிர்தத்தை பருகுபவர்கள்
(ஶ்ரீமந்) செல்வந்தனாவார்.
இப்பிறவியிலேயே ஜீவன் முக்தனவர்கள்.

21. ஜீவன் முக்த தசை மிக அழகானதுதான்
ஆனாலும் அனுபவாமிர்தம் வேறு எது போன்றும்
அல்ல.
இந்த பரமாமிர்தத்தை பருக
முக்த தசையின் நாவிலும் எச்சில் ஊறுகிறது.

22. ஒவ்வொரு இரவும் நிலவு வருகிறது.
ஆனாலும் பூர்ணிமையன்று அவள் வேறு.
ஆனாலும் சூர்ய திருஷ்டியிலிருந்து
இவ்வாறு நான் கூறமுடியுமா?

23. பருவ மங்கையிடம்
இளமையின் மொட்டு இயல்பாக அமைந்துள்ளது.
ஆனாலும் தன் பிரியனோடு
கூடும்போதே மலர்கிறது.

24. வசந்தம் வந்தவுடன்
மரங்கள் மலர்களாலும் கனிகளாலும் அழகாகி
காற்றால் தன் கிளைகளைப் அங்குமிங்கும் வீசி
விண்ணை தொட்டுப்பார்க்கிறது.

25. என்னுடைய சுவானுபூதியான
என் பக்தியின் பருவத்தையே
வாரத்தைகளாக்கி
சுவையான விருந்தாம் இந்த அமிர்தானுபவத்தை
பறிமாறியுள்ளேன்.

26. முக்தன்; முமுக்ஷு; பத்தன் என்ற
யோக்கிதை பேதம்
இந்த அனுபவ அமிர்தத்தை
ஒருவன் பருகாதவரையே நீடிக்கும்.

27. கங்கையில் நீராடச் சென்ற
நீரோடைகள்... கங்கையே ஆனதுபோல்
இருள்... சூரியனைச் சந்தித்து
சூரியனே ஆனதுபோல்.

28. ஸ்பரிச வேதியால் தீண்டப்படாதவரையே
உலோகத்தின் தாரதம்ய பேதங்கள்...
பிறகெல்லாம்
பத்தரை மற்றுக்கு குறையாத பசும்பொன்னே!

29. அதுபோலவே இந்த வார்த்தைகளின்
கருவை பார்த்தவர்கள்...
சமுத்திரத்தில் தங்கள் போதமிழந்த
நீரோடைகள் போலாவார்கள்.

30. அகராதி அக்ஷரங்கள்
ஓங்கார மாத்ரமே போல்
இந்த சராசரம் வேறு அல்ல (உள்ள பொருளே)

31. இங்கு ஈசனை எண்ணிய விரலுக்கு பிறகு
பிறவிரல்களின் உதவி தேவைப்படவில்லை
இவையெல்லாம்
சிவத்தை தவிர வேறொன்றுமில்லை.

32. ஞானதேவன் கூறுகிறேன்!
முழு உலகமும்
இவ்விழாவை
இவ்விருந்துண்டு ஆனந்தமாய் கொண்டாடட்டும்!

–ஓம் தத் ஸத் –

# Part - X End

# சங்க தேவ பாசஸ்தி (மடல்)

1. எவன் இஜ்ஜக தோற்றத்தில்
மறைந்திருக்கிறானோ
எவன் இஜ்ஜக தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும்
காரணனோ அந்த ஸ்ரீ வதேஸ்வரனுக்கு வணக்கம்!
வதேஷ்வரர்... சங்கதேவர் சிவபெருமானின் சிறப்பு பெயர்களுள் ஒன்றான இப்பெயராலேயே வழங்கப்பட்டார்.

2. (அவன்) வெளிப்பட... வெளிப்பட... தெரிவதில்லை
எவ்வளவுக்கெவ்வளவு மறைய முற்படுகிறானோ...
அவ்வளவுக்கவ்களவு தோன்றுகிறான்.
ஆனாலும் அவன் வெளிப்படுவதுமில்லை;
மறைவதுமில்லை
எப்போதும் குறைவில்லா நிறைவு.

3. அவன் மென்மேலும் விரிய... விரிய...
மென்மேலும் காணமுடியாதபடி ஆகிறான்.
அவனுக்கு ஒன்றும் நேரவில்லை.
அவன் உள்ளபடி உள்ளத்தே உள்ளான்.

4. பொன்மை மாறாமல்
பொன் எத்தனை ஆபரணங்களாய் மாறுகிறது.
அதுபோலவே சொரூபம்...
எந்த மாற்றமும் உறாமல்
ஜகமாகிறது.

5. நீர் தன்மேல் சார்த்திருக்கும்
சிறு அலைகள் என்னும்
வஸ்திரத்தை களையாமலேயே
திறந்த மேனியாய் இருப்பதுபோல்
சொரூபமும் திறந்த மேனியாய்
ஜக வஸ்திரத்தோடு.

6. தூசு குவிந்திருந்தாலும்
அதன் மண் தன்மை மறைபடவில்லை
அதுபோல இஜ்ஜகமாய் ஸ்பூரிப்பதால்
சொரூபம் மறைபட வில்லை.

7. நிலவு தன் கலைகளால் மறைந்தாலும்
மறைபடுவதில்லை.
நெருப்பு தீபச்சுடராவதால்
மறைபடுவதில்லை.

8. அஞ்ஞான நிமித்தத்தினால்
பார்ப்பவனுக்கும் பார்க்கப்படும் பொருளுக்கும்
பேதம் ஏற்படுகிறது.
அவனுக்கு (சொரூபம்) அது (ஜகம்) தெரிவதில்லை.
எப்போதும் 'இருக்கிறதாய்' இருக்கிறான்.

9. சட்டை என்றாலோ
ரவிக்கை என்றாலோ
பெயரில்தானே பேதம்!
இவையிரண்டும் பருத்தி
என்பது தெளிவு.
மண் கலையங்கள் மண்தானே!

10. சொரூபத்தின் பிரகாசமே
பார்ப்பவனும் பார்க்கப்படும் பொருளும்.
ஆனாலும் இதற்கு அதீதன் அவன்.

11. பல்வேறு அலங்கார ஆபரண நாமங்கள்...
எல்லாம் பொன்னே!
உடம்பில் பல்வேறு அங்கங்கள்...
ஆனால் ஒருமை குலையவில்லை!

12. ஏக அறிவே எல்லாமுமாய் ஆகிறது.
சிவத்திலிருந்து மண் வரை உள்ள பதார்த்தங்கள்
விஷயங்களாய் மேலானதாகவோ கீழானதாகவோ
பாரக்கப்பட்டாலும்...
சம்வித்தின் (சொரூபத்தின்) பிரகாசமே
ஏகமாய் ஒளிர்கிறது.

13. சுவரில் எத்தனை சித்திரங்களை
மாறிமாறி வரைந்தாலும்... அது சுவரே!
அப்படியே சம்வித்தின் பிரகாசமே...
இஜ்ஜகத்தோற்றம்!

14. வெல்லத்தின் தித்திப்பு...
சிறு துகள் வெல்லமானாலும் மாறவில்லை!
அப்படியே சம்வித்தும் (சொரூபம்)...
ஜகமானாலும்!

15. பல்வேறு ஆடைகள்; பல்வேறு வடிவங்கள்...
ஆனால் அது துணி!
அப்படியே ஜகமாய் ஸ்பூரித்தாலும்...
சொரூபம் ஸ்புரணமற்றே இருக்கிறது.

16. சொரூபம்...
சுகதுக்கங்களால் பாதிக்கப்படாமல்
எப்போதும் தன் ஷன்முகத்திலேயே இருக்கிறது.
தன்னையே திடீர் என்று ஜகமாய் அறிந்தாலும்
அதன் நிலை மாறுவதில்லை.

17. இப்படித்தான் ஜகம் தோன்றுகிறது.
சம்வித் (சொரூபம்) காண்பான் ஆனான்.
பிம்பம் பிம்பித்து
பிரதிபிம்பமானது.

18. இப்படி தன்னிடமிருந்தே... தன்னையே ஜகமாக்கி
தானே பார்த்தது.
சொரூபமே... பார்ப்பவன், பார்வை,
பார்க்கப்படும்பொருள்
(என்கின்ற) முப்படியாய் வெளிப்படுகிறது.

19. இறுக்க சுற்றப்பட்ட நூற்கண்டில்
அடிமுடி தெரியாது.
அப்படியே முப்புடியின் மூவகையும் இல்லாமல்
அவன் அறிகிறான்.

20. (ஆர்வமாய்) கண்ணாடியில் பார்த்தது
தன்முகமே என்று உணர்ந்தபோது
பார்த்தவனின் வீண் முயற்சி
என்ற உணர்வுபோல்...

21. சொரூபம் பேதமுறாமல்
முப்படியை வெளிப்படுத்துகிறது.
இப்படித்தான் பிரசித்தமான
இந்த (ஜகம்) உற்பத்தி ஏற்படுகிறது.

22. ஜகம் தோன்றும்போதே
பார்ப்பானும் உடன் தோன்றி சம்சாரமானது.
நாம் பார்க்கும் இந்த ஸ்தூல அனுபவமானது.
பார்வை மயங்கியது.

23. ஜகம் மறைந்துவிட்டால்...
பார்வை புலன் எந்தக் காட்சியைப் பார்க்கும்?
ஜகமில்லாதபோது பார்வை என்னவாகும்?

24. ஆகையால் ஜகஜாலமிருப்பதால்
ஜகதிருஷ்டி இருக்கிறது.
எதிரிலிருப்பது மறைந்தால்
மற்ற இரண்டும் அதுபோலவே மறைந்துவிடும்.

25. இவ்வாறே ஏகமே முப்புடி ஆனது.
முப்படி மறைந்தபோது ஏகமே மிஞ்சியது.
ஆனாலும் முப்படி கற்பனையே!
ஏகமே சத்யம் (இருப்பது)!

26. முகம் எந்த மாறுதலுக்கும் உள்ளாவதில்லை
கண்ணாடி வரும்வரை.
அதற்கு முன்வரை அதன் முகத்திலேயே முகம்
இருந்தது.
கண்ணாடியில் பிரதிபலித்ததனால்
என்ன மாற்றம் வந்துவிட்டது (அதன் முகத்திற்கு)?

27. தன் முன் பார்க்கப்படுவது இருப்பதால்
பார்வை ஏற்பட்டதாய்

பார்ப்பவன் கருதுகிறான்.
ஆனால் இப்பார்வை ஆபாஸமே (போலி)!

28. ஆகையால் ஜகமாய் காட்சி ஆனாலும்
காண்பான் காட்சி கடந்து
வஸ்து மாத்ரமாய்
தான் தானாய் அது (சொரூபம்) இருக்கிறது.

29. துந்துபி மேளம் இல்லா சப்தம்...
விறகில்லா நெருப்பு...
அதுபோல் தன்னிடம் விசேஷம் எதுவுமில்லாமல்
உள்ளது சுயமாக உள்ளது.

30. யாரும் கூறி தெரிவதில்லை.
யாருக்கும் கூறவும் முடிவதில்லை
(புத்தியால்) எவ்விதத்தாலும் அறியவும் முடியவில்லை
அது உள்ளபடி உள்ளதே உள்ளது.

31. கண்ணின் மணி தன்னை பார்ப்பதில்லை.
அப்படியே ஆத்ம ஞானி...
தன்னை அறிவதில்லை;
அவன் ஞானரூபம்.

32. அவன் ஞானத்திரளுரு;
அவனிடம் அறியாமை இல்லை.
அவனை ஞானமென்று கூறுவதால்
அவனை எப்படி அறியமுடியும்?

33. ஆகையால் அவனை மௌனத்தாலேயே விளக்க
முடியும்.
ஒன்றும் நடக்கவில்லை; ஆனால் சர்வமும்
தொழிற்படுகிறது.
அவனை காணமுடியவில்லை
ஆனால் அவனையேயன்றி ஒன்றுமில்லை.

34. பலவிதமாய் இணைக்கப்பட்டிருக்கும்
இவ்வறிவில் (ஜகத்தில்) சத்யமே (இருப்பே) ஏக அறிவு
பலவிதமாய் அலைமாலைகளில்
நீரே போல்...

35. அது பார்க்க ஒன்றுமில்லாத
தனித்த பார்வை.
அது தன்னையே...
தான்... தன்னைக் கொண்டே பார்ப்பது.

36. எந்தப் பொருளும் இல்லாமல் அது இருக்கிறது.
(பார்க்க) எந்த பொருளும் இல்லாமல் அது பார்க்கிறது.
அனுபவிக்க எந்த பொருளும் இல்லாமல்
அது ஆனந்திக்கிறது.
அது தனியன்.

37. வதேஸ்வரா...! நீர் பரம்பொருளின் பிள்ளை.
கற்பூரத்துண்டு கற்பூரத்தின் பிள்ளைதானே!
சங்கதேவரே... தயை கூர்ந்து
நான் உமக்கு கூறும் வார்த்தைகளை செவிமடுங்கள்.

38. ஞானதேவன் கூறுகிறேன்...!
நீங்கள் என் வார்த்தைகளை கேட்பது
எனது ஒரு கை தருவதை
மறு கை வாங்கிக் கொள்வதுபோல்.

39. பேச்சே பேச்சைக் கேட்பதுபோல்...
சுவையே சுவையை சுவைப்பதுபோல்...
ஒளியே ஒளியை பார்ப்பதுபோல்.

40. பொன்னுக்கு பொன் முலாம் பூசுவதுபோல்,
முகமே முகத்திற்கு
கண்ணாடி ஆனதுபோல்...

41. சக்கரபாணியே!
நீங்களும் நானும்
சம்வாதம் செய்வது (சந்திப்பது) இப்படியே.

42. தித்திப்பு தன்னையே சுவைக்க முயன்றால்
அதன் வாய் தன்னை நிரப்பி எப்படி வழியுமோ
அப்படியே நம் பரஸ்பர அன்பு.

43. நண்பரே!
உம்மை நினைக்கும்போதே
என் உயிர் உல்லாசப்படுகிறது.
அதற்காக எப்போதும் சித்தமாய் உள்ள
நம் இணைவு குலைந்துவிடுமா?

44. தங்களை தரிசிக்க வேண்டுமென்று
நான் நினைக்கும் மறுகனமே
என் மனம் தங்கள் ரூபமாகிவிடுகிறது
இப்படியான நிலையில் தங்களை தரிசிப்பது என்பது
என்முயற்சியில் இல்லை.

45. நீங்கள் எதைச் செய்தாலும்...
பேசினாலும்... சிந்தித்தாலும் அல்லது
எதைச் செய்யாவிட்டாலும்... பேசாவிட்டாலும்...
சிந்திக்காவிட்டாலும்...
இவை இரண்டின் சொரூபம் நீங்கள்;
இவற்றை அறிவதில்லை.

46. சங்கதேவரே...!
உங்களுக்கென்று ஏதோவொன்றை
செய்யவோ...
செய்யாமல் இருக்கவோ...
இவையிரண்டும் உங்களிடம் இல்லை.

47. லவனம்... நீரில் ஆழம் பார்க்கச் சென்று
பிழைப்பை இழந்தது.
பிறகு நீரின் ஆழம் யார் பார்ததது?

48. அப்படியே உங்கள் சொரூபத்தை
தரிசிக்க முயன்றால் நான் பிழைப்பதில்லை
நீங்கள் எப்படி இருப்பீர்கள் என்று கற்பிக்க
பிறகு யாருண்டு அங்கே?

49. விழிப்பிலேயே தூக்கத்தை பார்த்து விடுவது என்று
கங்கணம் கட்டிக் கொண்ட ஒருவன்
அதை சந்திக்கவே முடியாததுபோல்

உங்களை சந்திக்க முயல்வது...
அவ்வாறு சாத்தியமாகாமல்
நானே மிஞ்சுகிறேன்.

50. அந்தகாரத்தில்
சூரிய பிரகாச தத்துவம் இல்லை.
இருந்தாலும் தான் தன்னை அறியா அறிவாய்
மிஞ்சி இருக்கிறது.

51. அவ்வாறே உங்களை நான் சந்தித்தால்
நீங்கள் என்னும் தன்மை
நான் என்னும் தன்மையால் விழுங்கப்பட்டு
நம் கலப்பு மட்டுமே மிஞ்சி நிற்கிறது.

52. சொரூப பூமியிலிருந்து
தன் மகிழ்வுக்காக தானே சித்திரமாகி
அதை இருமை பாராட்டி தன் இடத்தினின்று நீங்காது
தன் பார்வை கொண்டு தானே பார்க்கிறது.

53. அவ்வாறே (நாம் சந்திப்போம் என்ற)
இத்தலைப்பு கிளம்பியதும்
பார்வை சிதையாமல்
நான் என்பதும் நீங்கள் என்பதுமற்று
இணைவில்லாமலே சந்தித்து விடுகிறோம்.

54. இப்போது நான் நீ என்னும் உபாதி கடந்து
சந்திப்பு மட்டுமே நடந்து கொண்டிருக்கிறது
இந்த விவரிப்பில்.

55. ருசி அதன் ருசியையே ருசிக்க
ருசியையே ருசிப்பதுபோல்...
கண்ணே தன்னை பார்த்துக் கொள்ள
கண்ணாடி ஆவதுபோல்...

56. நிரூபணங்களற்ற இந்நிரூபணம்
மௌன அக்ஷரங்களாலேயே புரிபடுகிறது.
நம் சந்திப்பின் கதையும்
இவ்வாறே புனையப்பட்டது.

57. இதைக் காரணமாக்கி
தங்களை... தன் பிரகாசத்தாலே அறியும்
சுயம் பிரகாசமாய்
அறிந்து கொள்ளுங்கள்.

58. இவை எளிமையான வார்த்தைகளே!
உங்களிடம் புதிய பார்வை பிறப்பதற்கே கூறப்பட்டது.
தன்னையே தன்னிடத்திலேயே
தான் சந்திக்கும் தன்மயப் பார்வை இது.

59. பிரளய காலத்தில் ஊழிப்பெருவெள்ளம் வந்தால்...
நதியும் கடலும் மூழ்கிப் போகும்.
அதுபோலவே
நீங்களும் மூழ்குங்கள்!

60. ஞானதேவன் கூறுகிறேன்...!
உங்களில் உண்மையான இருப்பு
நாம ரூபங்களற்ற தன்மயம்.
அந்த சுவானந்த சொரூபத்தில் சுகமயமாய்
அமருங்கள்!

61. சங்கதேவரே...! இந்த ஞான சம்பத்தி மேலும் மேலும்
உமது கதவை வந்தடையும்.
நீங்கள் பார்ப்பான் பார்க்கப்படுபொருள்
கடந்த ஆசனமான தன்மயத்தில் நிலை பெறுவீர்கள்.

62. சங்கதேவரே...! உங்களை காரணமாக்கி
(தாயான) மாவுலி நிவிருத்தி ராஜன்
இந்த சுவானுபவ விருந்தை
தங்களுக்கு பரிமாறச் செய்துள்ளான்.

ஞானதேவன் சுவாசித்த சுவாசமாம் வார்த்தை மலர்களால் ஆன இந்த மாலை நிறைவுற்றது.

– ஓம் தத் ஸத்

# ஹரி பாட
# ('ஹரி'யை கூறுங்கள்)

# ஹரி பாட

# ('ஹரி'யை கூறுங்கள்)

1. பகவானின் வாசலில் ஒருகணம் நின்றாலே
நால்வகை முக்திகளும் அடையப்படுகிறதென்றால்
ஹரி ஹரி என்று எப்போதும் வாயால் கூறுபவனின்
புண்ணியததை யார் கணக்கிட முடியும்?

சம்சாரத்தில் இருந்து கொண்டே நாவை
வேகப்படுத்துங்கள்!
வேத சாஸ்திரங்கள் சதா கை உயர்த்துகிறது
ஞானதேவன் கூறுகிறேன்... வியாசனேஆதாரம்.
துவாரகையின் ராணா பாண்டவர்களின் வீட்டில்

2, (ஹரியே) நான்கு வேதங்களின் ஞானம்,
ஷட் சாஸ்திரங்களின் காரணம்
பதிணெட்டு புராணங்களும் ஹரியையே பாடுகின்றன.
நவநீதத்திற்கு கடைவதுபோல் அனந்தத்தையே
கடையுங்கள்!
பயனறற வெறும்கதை மார்க்கங்களை விடுங்கள்!

ஏக ஹரியே 'இருக்கிறதாய்' இருக்கிறது ஜீவ சிவத்தில்
சமமாய்
தேவையற்ற துர்மார்க்கங்களில் உங்கள் மனதை
நுழைக்காதீர்கள்!
ஞானதேவன் ஹரியான வைகுந்தத்தையே எப்போதும்
கூறுகிறேன்.
எதிலும் நிறைந்திருக்கும் ஹரியையே பார்க்கிறேன்.

3. திரிகுணம் சாரமற்றது, நிர்குணமே சாரம்,
சார அசார விசாரமே ஹரியை கூறுவது

சகுண நிர்குண குணங்களின் அகுணமான
ஹரியை கூறாவிட்டால் மனம் வியர்த்தத்திலேயே
செல்லும்.

அவ்வியகக்தமும் நிராகராமும் இல்லாதது எவனுக்கு
ஆகாரமோ
யார் இந்த சராசரமோ (அந்த) ஹரியையே
நினையுங்கள்.
ஞானதேவன் ராமகிருஷ்ணனையே தியானிக்கிறேன்
அனந்த ஜென்மப் புண்ணியம்போலும்.

4. பா$^{3}$வமில்லா பக்தி, பக்தியில்லா முக்தி,
பலஹீனமான சக்தி (ஹரியை) கூறுவதில்லை.
துரிதமாய் தெய்வம் எவ்வாறு பிரசன்னமாகும்?
சும்மா இருப்பதே சுகம், களைப்பாவது தேவையற்றது.

பகலிரவாய் உலகம் உண்மையென்றே முயற்சிகளை
செய்கிறீர்கள்.
இந்த மனதால் ஹரியை நினைக்க முடியாது.
ஞானதேவன் கூறுகிறேன்... ஹரியை ஜபித்தால்
பிரபஞ்ச
கட்டுகள் தெறிக்கும்.

5. யோகம் யாகம் (சாஸ்திர) விதி இவைகள்
சித்தியாகாது
(இவை) வீணான உபாதி தம்ப தர்மம்
பா$^{3}$வமின்றி தேவனை அறியமுடியாது.
(இதில்) சந்தேகமேயில்லை.
குருவில்லாமல் அனுபவமாய் எப்படி அறிய முடியும்?

தபசில்லாமல் தெய்வம், கொடுக்காமல் பெறுதல்,
பிரியமில்லாமல் நலம் எப்படி என்று சொல்லுங்கள்!
ஞானதேவன் சொந்த அனுபவத்தில் சொல்கிறேன்.
சாது ஒருவரின் உறவே கடக்கும் உபாயம்.

6. சாதுத் தன்மை ஏற்பட்டால் நியமமற்றது நிலைக்கும்.

அதுவே அனுபவத்தையும் கரைக்கும்.
கற்பூர வர்த்தி ஜொலித்து ஜோதியாக்கி அப்பொழுதே சமாப்தமாகிவிடுவதுபோல்
மோட்ச ரேகைக்கு வந்த பாக்கியன்.
போன்றப்பட்டு, சாதுவிடம் கலந்தான் (அந்த) ஹரி பக்தன்

7. மலைபோல் பாவம் குவிப்பர்,
அது வைரச்சிறையாய் அபக்தனை வாட்டும்.
எவர்களிடம் பக்தியில்லையோ
அவர்களே அபக்தர்களாய் வீழ்ந்தார்கள்.
ஹரியை நினைக்காதவன் தரித்திரன்.

பிறர் குற்றமும் கோளும் முடிவில்லாமல்
பேசிக் கொண்டிருப்பவர்கள்
எவ்வாறு தயாள ஹரியை சந்தோஷப்படுத்துவார்கள்?
ஞானதேவன் பிரமாணம் செய்கிறேன்...
'இருக்கிறதே' நிதானம், சர்வ உயிர்களிலும் பூரணமாய் (அந்த) ஏகமே இருக்கிறது.

நிதானம் – கொடுக்க முடியாத பொக்கிஷம்.

8. சாதுக்களின் உறவே மனோமார்க்க வேகம்.
இம்மார்க்கத்தாலேயே ஸ்ரீபதியை அறியமுடியும்.
இராமகிருஷ்ணா என்று கூறுவதே ஜீவனின் ஸ்வபாவம்.
'இருக்கிற'தான சிவனும் ராம ஜபமே

அந்த ஏகதத்துவமான நாமமே சாத்தியமான சாதனம்.
(இந்த சாதனமுடையவன்) துவைதத்தின் பந்தனத்தால் பந்திக்கப்படமாட்டான்.
(இந்த) நாமாமிர்தப் பித்தர்களன வைஷ்ணவர்கள்
யோகிகள் அடையும் ஜீவன கலையை அடைகிறார்ள்.

பிரகலாதனிடம் சீக்கிரமே உச்சரணம்
பிரதிபலிக்கிறது.

உத்தவர் பெற்றார் கிருஷ்ணதாதாவை
ஞானதேவன் கூறுகிறேன்... நாமமே சுலபம்
மற்றெங்கும் துர்லபம்
அரிதான ஒருவன் (நான் சொல்வதை)
புரிந்துகொள்வான்.

9. விஷ்ணு இல்லா ஜபம் வியர்த்தம், அவன் ஞானமும்
ராமகிருஷ்ணனிடம் எவன் மனது இல்லையோ
அந்த தரித்திரன், அத்வைத பாதையை அறிவதில்லை
(அவனுக்கு) ராமகிருஷ்ணன பதம் எவ்வாறு
வாய்க்கும்?

துவைதத்தின் துடப்பமாம் குருவில்லாமல் எப்படி
ஞானம்?
அவனுக்கு நாமத்தின் கீர்த்தனை எப்படி லபிக்கும்?
ஞானதேவன் கூறுகிறேன்...
சகுணமே இந்த தியானம்.
நாமத்தைக்கூறியதால் பிரபஞ்சத்திலிருந்து
மௌனமானேன்.

10. திரிவேணி சங்கமம் பல தீர்த்தம் திரியலாம்.
சித்தம் நாமத்தில் நிலைக்காவிட்டால் பிறகெல்லாம்
வியர்த்தம்
நாமத்திற்கு விண்முகமாய் உள்ள மனிதன் பாவி.
ஹரியை தவிர காப்பாற்ற யார் ஓடிவரமுடியும்?

புராணம் பிரசித்த வால்மீகி இவ்வாறு கூறுகிறார்...
நாமமே மூவுலகையும் கடத்தும்.
ஞானதேவன் கூறுகிறேன்... ஹரிநாம ஜபத்தால்
அவன்
பரம்ரையே, குலமே சுத்தமாகும்.

11. ஹரியை உச்சரித்தால் அனந்த பாவக் குவியல்
அந்த கனமே லயமில்லாமல் போய்விடும்.
வைக்கோல் அக்னியுடன் சேர்ந்து சமரசமாவதுபோல்
நாமமே ஆக்கிவிடுகிறது ஜபிப்பவனை ஹரியாய்.

விளக்கமுடியாததில் ஹரி உச்சரணமே சேர்க்கும்.
அங்கே பூதஉபாதை பயம் ஓடிவிடும்.
ஞானதேவன் கூறுகிறேன்..., ஹரியே என் சமர்த்தன்,
உபநிஷத்துக்களும் பொருள் விளக்கமுடியவில்லை.

12. பா[3]வமில்லாமல் தீர்த்தம், விரதம், நியமம் சித்தியாது
ஜனங்கள் (துங்களின்) உபாதிக்கு வீண்சுமையை
ஏற்றுகிறார்கள்.
பாவபலத்தினாலேயே எளிதாய் விளங்குகிறான்
இது இல்லாமல் விளங்குவதில்லை.

(உண்மையில்) உள்ளங்கை நெல்லிபோல் ஹரி
பூமியில் சிதறிய பாதரச துகள்களை
பொறுக்குவதுபோல்
முயற்சிகளும் பிற சாதனங்களும்.
ஞானதேவன் கூறுகிறேன்..., நிர்குணமான நிவிருத்தி
சம்பூரணமானதை என் கையில தந்தான்.

13. ஹரியில் சமாதி... சமமான அன்பில்லாத
துவைத புத்திக்கு புலனாவதில்லை,
அடைவாவதுமில்லை
புத்தியின் ஸ்வபாவம் உங்களுக்கு அன்னியமில்லை.
ஏகமான கேசவராஜனே சகல சித்தி.

சித்தி ருத்தி பிறநிதிகள் உபாதியின் அவதி.
இவைகளில் மனதுக்கு பரமானந்தம் இல்லை.
ஞானதேவி ரம்யமாய் ரமித்து சமாதானமாய்
சர்வகாலமும் ஹரியின் சிந்தனையில் உள்ளாள்.

14. நித்ய சத்யமித ஹரியை கூறுபவர்களிடம்
கலிக்காலனின் திருஷ்டி படுவதில்லை.
ராமகிருஷ்ணா என்று கூறுவதே
எண்ணிலடங்கா தபக்குவியல்
(இதனால்) பாவக்கூட்டம் பறந்தோடும்.

ஹரி... ஹரி... ஹரி... என்னும் மந்திரமே சிவம்.

இதைக்கூறுபவருக்கே மோட்சம்.
ஞானதேவன் நாராயண நாமத்தை கூறியே
உத்தம நிஜ ஸ்தானமுற்றேன்.

15. ஏக நாமமே ஹரி, துவைத நாமம் தூரம்
இந்த அத்வைத ஒருமை அரிதாகவே புரியப்படுகிறது.
சமபுத்தியே சமமான ஹரியை கிரஹிக்கும்.
சமதமம் வந்தால் மட்டுமே ஹரியாவான்.

சர்வ உயிர்களிலும் ராமன் ஒருவனே தேஹமும்
தேஹியும்.
சூரியனே ஆயிரம் கதிர்களில் ஒளிர்கிறான்.
ஞானதேவனின் சித்தம் ஹரியை கூறுவதிலேயே
எப்போதும் உள்ளது
முற்பிறவிகளிலிருந்தெல்லாம் விடுபட்டேன்.

16. ஹரியை புத்தியால் ஜபிப்பவன் மனிதர்களில் அரிது.
வாயினால் ராமகிருஷ்ணா என்பது சுலபம்.
ராமகிருஷ்ண நாமமே உன்மனி அடைவு.
அவன் சகல சித்திகளும் அடைவான்.

சித்தி, புத்தி, நியாய வழி ஹரியை கூறுவதால் வரும்.
சாது சங்கத்தாலேயே பிரபஞ்சத்தில் திருப்தனாவீர்கள்.
ஞானதேவியில் ராமகிருஷ்ண நாமம் பொறிக்கப்ட்டது.
அதனால் பத்து திசையிலும் ஆத்மராமனே.

17. ஹரியை கூறுவதன் கீர்த்தியை எவனது வாய் பாடுமோ
அவனது தேஹம் பவித்திரமாகிறது.
அவனது தபஸே சமர்த்தமானது, புனிதமானது,
அளவிட முடியாதது.
(அவன்) சிரஞ்சீவியாய் கல்பகாலம் வைகுந்தத்தில்
இருப்பான்.

தாய், தந்தை, சகோதரங்கள், குலத்தவர்

காலங்கடந்த சதுர்புஜ நரனாவார்கள்.

ஞான ரகஸ்யமான இந்த அறிவை
ஞானதேவன் பெற்றேன்.
நிவிருத்தியால் என் கையில் தரப்பட்டது.

18. ஹரி வம்ச புராணமே, ஹரி நாம கீர்த்தனம்.
ஹரியில்லாமல் சுகமாய் ஏதுவும் செய்யாத
அந்த நரன் வைகுந்த அடைவை அடைந்தான்.
அவன் தன் யாத்திரையை முடித்தான்.

மனோமார்க்கம் சென்றவன் அதிலேயே
தொலைந்தான்
ஹரியை கூறுவதில் ஸ்திரமெய்தியவன் எவனோ
அவனே தன்யன்.
ஞானதேவன் ஹரியை கூறுவதிலேயே
பித்தனாய் ராமகிருஷ்ணனில்
சர்வகாலமும் திளைத்தேன்.

19. நாம சங்கீர்த்தனமே வைஷ்ணவர்களின் சொத்து
அனந்தகோடிப் பாவங்கள் அதனால் கழுவப்பட்டது.
அனந்த ஜன்ம தபஸே ஏகநாமம்.
ஹரியை கூறவதே சர்வ மார்க்கத்திலும் எளிமை.

யோக யாக கிரியை தர்மாதர்ம மாயை
இவையெல்லாம் ஹரியை கூறுவதில்
விலயமாகும்.
ஞானதேவிக்கு யாக யக்ஞ கிரியையாய்
ஹரியையன்றி வேறு நியமமில்லை.

20. வேத சாஸ்திர, புராண, ஸ்ருதி வாக்கியம்
ஏக நாராயண சார ஜபம்.
ஜப, தர்ம, கர்மம் ஹரியன்றிய கர்மம்,
வீணான முயற்சி, வியர்த்தமாய் போகும்.

ஹரியை கூறுவதில் சென்றவர்கள்
பரமசாந்தியை அடைந்தார்கள்.
வண்டு மலருக்குள் மூடப்பட்டது.

ஞானதேவிக்கு ஹரியை கூறுவதே ஆயுதம், மந்திரம்.
யமன் குலகோத்திரத்தை நீங்கிவிட்டான்.

21. காலவேளை நாமத்தைக் கூறுவதிற்கில்லை.
இரண்டுபட்சத்திலும் உறுதியாய் விடுபட்டார்கள்.
ராமகிருஷ்ணன் நாமமே சர்வ தோஷத்தையும்
போக்கியது.
ஜட ஜீவத்துவம் கடத்துவது ஏக ஹரியே.

ஹரி நாம சாரத்தை எந்த நாவு கூறுமோ
அவனுடைய நல் அதிருஷ்டத்தை
யார் விளக்கி உபமானிப்பது?
ஞானதேவன் மொத்த ஹரியையும் கூறினேன்...
முன்னோர்களின் வைகுந்தப் பாதையில் எளிதாய்.

22. நித்யமாய் ஹரிநாமம் கூறும் பிராணி துர்லபம்.
லக்ஷமி வல்லபனைஇப்படியே அணுகமுடிகிறது.
நாராயண ஹரி... நாராயண ஹரி...
புத்தி முக்தி நான்கும் இவ்வீட்டில் இருக்கிறது.

ஹரியன்றி ஜன்மம் நரகே!இதை புரிந்துகொள்ளுங்கள்
அந்த பிராணி யமனுக்கு விருந்தினனாவான்.
ஞானதேவன் நிவிருத்தியிடம் அன்போடு கேட்டேன்.
ஆகாயத்தைவிட பெரியது, பரந்தது நாமம் (என்றான்).

23. ஏழு, ஐந்து, பத்தின் கூட்டம் ஏகதத்வ கலையான
ஹரியையே காட்டுகிறது.
இப்படியே நாமமும் சர்வ மார்க்க வரிஷ்டம்
அதில் செய்வதற்கு கஷ்ட மொன்றுமில்லை.

அஜப ஜபத்திற்கு பிராணன் தலைகீழாக வேண்டும்
இங்கே மனது நிர் தாராமாகவேண்டியது அவசியம்
ஞானதேவன் நாமமில்லாமல் உயிரோடு இருப்பது
வீண்.
ராமகிருஷ்ண பாதையில் நடந்தேன்.

24. ஜபதப கிரியை நியம தர்மம்.
சர்வத்திலும் ராம பா³வம் சுத்தம்
அன்பே...! இந்த பா³வத்தை விட்டுவிடாதே!
அன்பே...! சந்தேகத்தை விடு!
ராமகிருஷ்ணனை உரக்க கூப்பிடுவதே நித்ய கடன்

ஜாதி செல்வம் கோத்ரம் குலப்பெருமை
கருத்தில் போற்றாது ஒழி!
பா³வனாயுக்த பக்தியை உடனே செய்!
ஞானதேவன் மனதில் ராமகிருஷ்ண தியானமே உள்ளது
வைகுந்த லோகத்திலேயே வீடுகட்டிக்கொண்டேன்.

25. ஞானி அஞ்ஞானி பகவானிடம் இல்லை.
ஹரியை உச்சரிப்பவன் எப்போதும் மோட்சத்தையே பார்க்கிறான்.
நாராயண ஹரியை உச்சரிப்பவனிடம்
கலிகாலத்தின் நுழைவு இல்லை.

அந்த இடத்தை பிரமாணப்படுத்தி விளக்க
வேதங்களாலும் முடியவில்லை.
ஜீவ ஜந்துக்கள் எவ்வாறு உணர முடியும்?
ஞானதேவனுக்கு நாராயணனை கூறுவது
பழமானதால் சர்வத்திலும் வைகுந்தம் உண்டாகிறது.

26. மனமே... ஏகத்துவமான நாமத்தையே தரித்துக் கொள்
ஹரியின் கருணை உன் மீது வரும்.
அன்பே...! அந்த ராமகிருஷ்ண கோவிந்த நாமமே எளிமை
வாக்கின் சத்கதமே ஜபத்தின் ஆதி.

நாமத்தை விட உயர்ந்த தத்துவம் (உனக்கு)
அந்நியமாய் இல்லை என் அன்பே!
இதைதவிர பயனற்ற வழிகளில் போகவே போகாதே!

ஞானதேவன் மௌனாய் உள்ளே ஜபமாலையை
உருட்டிக்கொண்டே இருக்கிறேன் சதா ஹரியின்
ஜபத்தில்

27. சர்வ சுகம், பித்து, சாஸ்திர சாரம் ('ஹரி'யை கூறுவது)
அரைக்கணங்கூட வெறுமையாய் இருக்காதீர்கள்!
பொய்த்தோற்றமாய் இவ்விவகாரம் சர்வமும் சம்சாரம்.
ஹரியையன்றி இது வெறும் போக்குவரத்து.
நாம மந்திரத்தை ஜபிப்பதால் கோடி பாவம் அறும்.

ராமகிருஷ்ண சங்கல்பத்தை தரித்தே இருங்கள்!

நிஜவிருத்தி ஓயும்! மாயை அறும்!

இந்திரிய ஈர்ப்பு மறைப்பில்லாமல் இருக்கட்டும்!

தீர்த்தம் விரதம் பா[3]வத்துடனும்
காருண்யத்துடனும் இருக்கட்டும்
சாந்தி தயையை உங்கள் விருந்தினராக்குவதே
ஹரியை ஏற்படுத்துவது
ஞானதேவன் நிவிருத்தி தேவியின் ஞானத்தின் மீது
பிரமாணம் செய்கிறேன்...
ஹரியை கூறுவதே சஜ்ஜீவன சமாதி.

– ஓம் தத் ஸத்–

குறிப்புகள்